# மத்திய வணிகம்

19

92 93

வர்த்தக மாணவர் மன்றம், யாழ் மத்திய கல்லூரி

தவறுசெய்ததை நினைத்து வருந்துபவன் வணங்கப்படவேண்டியவன்


யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மத்திய வணிகம்

சிறப்புடனும், பொலிவுடனும் சிறப்புற

அமைய என் நல் வாழ்த்துக்கள்

# கணக்கியல்

பிரத்தியேக வகுப்புகள் நடை பெறுகின்றன

# ஸ்ரீ

*B.Com (Hons)*

393 / 47 கோவில் வீதி, நல்லூர். யாழ்ப்பாணம்.

# மத்திய வணிகம்

1992 1993

என். விஜயகுமார் என். முகுந்தன்

வர்த்தக மாணவர் மன்றம்
யாழ் மத்திய கல்லூரி

மண்ணின் மீட்பிற்காய்
தம் உயிர் நீத்த
அத்தனை பேருக்கும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 20 |  | 02 |
| 05 | | 03 |
| 1931 | | 1992 |

# கைலாயபிள்ளை கந்தசாமி

மத்தியின் மணிக்கொடி நித்தம் நிலைக்
தம்பணி ஆற்றி எம்மை விட்டகன்ற
எம் துறையாசான் அவர்தன் நினைவால்
இம்மலர் தன்னை சமர்ப்பணம் செய்தார்
வர்த்தக துறைசார் மாணவர் தாமே
எத்துறை செல்லினும் இத்துறைவளர
என்றும் தம்பணியாற்றுவர் இத்துறைமாணவர்

சாந்தி! சாந்தி! சாந்தி!

வர்த்தக மாணவர்கள்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

## மலரின் இதழிலே

பிரிவு 1


- அன்புகனிந்த
- ஆசிச்செய்திகள்
- சற்றுநில்லுங்கள்
- நடப்பாண்டு
- நாமும் மன்றமும்

## பிரிவு II

- இலங்கையின் உலகவர்த்தக நிலையமும் ஏற்றுமதி அபிவிருத்தியின் பங்கும்
- சந்தைப்படுத்தல்
- இலங்கையின் அந்நியசெலாவணிப் பிரச்சனை
- சர்வதேச வியாபாரமும் ஒப்பீட்டுச்செலவுக்கோட்பாடும்
- வாடகைக்கொள்வனவு
- இலங்கை கணக்கீட்டு நியமம் [iii]
- தென்கிழக்காசிய நாடுகளில் இந்துப்பண்பாட்டு பரம்பல்
- விஞ்ஞான முறை தொடர்பு பற்றிய ஓர் அறிமுகம்
- அபிவிருத்திப் புவியியலின் பங்கு

பிரிவு III

## பொது

- வர்த்தக கிண்ணத்தைப்பெற்ற
- நடப்பாண்டு
- வர்த்தக சோலையில்

# அன்புகனிந்த


மத்திய வணிகம் எனும் சொற்பத மலர் சிறப்புடன் வெளிவர கட்டுரை வழங்கியோருக்கும், ஆசிகள் கூறி நல்லாசிகள் வழங்கியோருக்கும், மறுப்பின்றி மனமுகந்து அனுமதிவழங்கிய அதிபருக்கும், செய்யும் சேவையே தெய்வமெனக் கொண்டு மத்திய வணிகம் என்னும் இந்தமலர் மொட்டாக இருந்த காலங்களில் எமக்கு ஆலோசனைகளை வழங்கி எம்மை அன்புடன் வழிநடத்தி மலரை விரியவைப்பதற்காக அரும்பாடுபட்டு உழைத்த மன்றப் பொறுப்பாசிரியர் மதிப்புக்குரிய சு. நடராஜா அவர்களுக்கும், பல்வேறுவழிகளிலும் எமக்கு ஒத்தாசை வழங்கிய ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், இம்மலரை சிறப்புடன் திறம்படச் செய்த மத்தியத்தின் மாண்புமிகு மாணவர்களும் ஸ்ரீ லங்கா புத்தகசாலை அன் அச்சக உரிமையாளர்களும் ஆகிய திரு க. இராஜேந்திரன், திரு க. கஜேந்திரன் மற்றும் அச்சக ஊழியர்களான திரு. சி. பஞ்சாட்சரம், செல்வன் நா கோகுலதாசன், செல்வி. ப. சந்திரமலர், செல்வி, க சியாமினி ஆகியோருக்கும், எம்நோக்கறிந்து தம் புகழ்ஓங்க விளம்பரங்களை விருப்புடன் நல்கியோருக்கும், நிதியுதவி நல்கிய நேசக்கரங்களுக்கும், மாணவர் செயற்பாட்டிற்காய் தம் செயற்பாடுகளை அன்புடன் நல்கும் மத்தியத்தில் கூட்டுறவுச்சங்க முகாமையாளரும், வர்த்தக ஆசானுமாகிய திரு. கே. நாகேந்திரம் அவர்களுக்கும், மற்றும் எம்முடன் ஒத்துழைத்த அத்தனைபேருக்கும்.

## எமது அன்பு கனிந்த நன்றிகள்.

ஜி. ரேணுசங்கர்
செயலாளர்

P. ரதிரூபன்
செயலாளர்

# எமது அதிபர்



நா. க. சண்முகநாதபிள்ளை

B.Sc. Dip in Ed,
Teacher Counsellor
S.L.E.A.S

## அதிபரின் கவிமாலை

ஆண்டு பலவாய் அரும்பணி ஆற்றும்
மாண்புறு மத்தியக் கலையகம் தன்னில்
வர்த்தகக் கல்வி வளமுற வளர
நித்தமும் தொண்டு ஆற்றிய சான்றோர்
உத்தமர் ''புள்ளோ'' அதிபரும் ஏனை,
வித்தகர் கலையின் புலவரு மாகும்.
இத்தரு பெரியோர் ஏற்றிய நற்பணி
மெத்தவும் வளர்ந்து மேன்மை பெருக்கி
சித்தம் மகிழும் சிறப்பை எய்தி
ஆண்டு எழுபத் திராண் டாகி
நீண்டு நிலைத்து நிற்பது மன்றி(ப்)
பாட நெறிகள் பலவும் பெருக்கி(க்)
கூட மலரும் கூட்டுற வாக்கி,
பள்ளிச் சிறுவர் பயன்பல பெறவும்
பல்கிப் பெருகும் வர்த்தகத் துறையாம்
கல்விப் புலத்தில் கருத்தொடு நிற்கவும்
தெள்ளிய தாகத் திகழ்வது கண்டோம்.
இந்நாள் இங்குற இடரின் சுமையிலும்
பண்ணாய் ''ஓர் மலர்'' பாங்குற ஆக்கித்
தண்ணார் நறுமணம் தருவதே பெருமை!
வர்த்தக மன்ற வளமார் இளைஞர்
மெத்தவும் உழைத்த ஆசான் குழுவினர்
எத்தனை இடருள் இப்பணி செய்தார்;!
அத்தனை ஆக்கமும் ஊக்கமும் வாழ்க!
புத்தம் புதிய உணர்வுகள் வளர்க!
குறைவிலா முயற்சியும் பழுதிலாப் பணிகளும்
நிறைவை நோக்கிய உறுதியும் உண்டெனில்
சுதந்தர ஒளியில் சுகத்தினைப் பெறலாம்
இதந்தரும் ஆசிகள் இவையே யாகும்.

அதிபர்

# பொறுப்பாசிரியரின் உள்ளக் கமலத்தில் இருந்து



விஞ்ஞானம் செய்யும் வித்தைகளுக்கு
வித்தாய் விளங்கும் வர்த்தகத்தை
வளமுடன் கற்று வாழ்வுடன் பொருத்தி
வையகம் போற்றும் விற்பனராய்
வாழப் போகும் எம்துறை மாணவர்
ஆற்றல் மிக்கவர் ஆளுமை கொண்டவர்
செயற்திறன் கொண்ட நற்பணியாளர்
தம்பணியின் தரம் வெளிப்படவே இன்று
உங்கரங்களில் மத்திய வணிகம் மலர் இரண்டை
அர்ப்பணித்தனர் அன்புடனே
சிந்தனைச் சுடரால் உம்முகம் பொலிவுற
அறி வொளி பரப்பி தம் இதழ் விரியும்
இம் மலர் தன்னை அரவணைத்து ஆதரவளிப்பீர்
எம் மழலைகள் மகிமை மேலும் மாண்புற
ஐங்கரன் என்றும் அருள்வாரென அவர்
பாதம் பணியும் அன்பன் நடராஜன்.

சு. நடராஜா

# வட மாநில கல்விப்பணிப்பாளரின் உள்ளத்திலிருந்து



வட மாநிலத்தில் பல வளங்களுடன் திகழும் கல்லூரிகளுக்கு மத்தியில் மாண்புடன் திகழும் கல்லூரி யாழ்ப்பாண மத்திய கல்லூரி ஆகும். வர்த்தகத் துறைக்கு வித்திட்ட இக் கல்லூரி இத்துறை வளர்ச்சியில் பல திட்டங்களைச் சிறப்புடன் செயல்படுத்தி காட்டி வருகின்றது கல்லூரி வங்கி, கல்லூரி கூட்டுறவுச்சங்கம், வர்த்தக ஆய்வுநிலையம் போன்றன அவற்றுள் சில முத்தமிழுக்கும் முன்நின்று செயலாற்றும் இத்துறையினரின் அயராத உழைப்பு முன்னேற்றச் செயற்பாடுகள் ஆதரவான போக்கு ஆளுமை கொண்ட நடத்தை இவை அனைத்தும் போற்றத் தக்கவை. இவர் தம் செயற்திறன் வெளிப்படும்வகையில் ''மத்திய வணிகம்'' எனும் சொற்பத மலர் இரண்டை வெளியீடு செய்கின்றனர். இம் மலரில் சிறப்புக்களையும் சிந்தனைத் திறன்களையும் கற்றல் நுட்பங்களையும் கண்ணுற்றுக்கற்கும் நீவிர் யாவரும் பயன் பெறுவீர். இம்மலர் மேலும் சிறப்புற்று கொத்துக் கொத்தான பூந்துணராக மலர்ந்து பொலிவுற வேண்டுமென்றும் மேலும் பல மலர்களை அலர்விக்க வேண்டுமென நல்லாசி கூறுகின்றேன்.

இ. சுந்தரலிங்கம்  
வட மாநில கல்விப்பணிப்பாளர்  
யாழ்ப்பாணம்.

# முன்னாள் அதிபரின் ஆசியுரை

மாணவர்களின் எழுத்தாற்றல், சிந்தனையாற்றல் ?என்பனவற்றை வளர்ப்பதற்கும் தாம் பெற்றுக்கொண்ட அறிவைப் பிறருக்கும் எடுத்துச் சொல்வதற்கு கட்டுரைகள் பெரிதும் பயன்படுகின்றன. எனவே ஒரு கல்லூரியில் மாணவர்கள் சஞ்சிகைகளை ஒழுங்காக வெளியிட்டுக் கொண்டே இருக்கவேண்டும் இக்கல்லூரியில் 1920 ஆம் ஆண்டு வர்த்தகப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 1970 ஆம் ஆண்டு பொன் விழா மலர் வெளியிடப்பட்டது. வர்த்தக மாணவர் மன்றம் தமக்கென ஒரு சஞ்சிகையை ஆண்டுதோறும் வெளியிட விரும்பி, என்னிடம் 1989 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் விண்ணப்பித்தார்கள். நான் அவர்கட்கு வேண்டிய அறிவுரைகளை அப்போது வழங்கி அனுமதியளித்தேன். அவர்களின் விடாமுயற்சியின் பயனாக 1990 ஆம் ஆண்டு ஐந்தாம் மாதத்தில் அச்சஞ்சிகை வெளியானது.

போர்க்காலச் சூழ்நிலையாலும் பொருளாதாரத் தடைகளாலும் ஏற்பட்ட இடர்கள் மாணவர்களின் கல்வியையும் ஆக்கங்களையும் பெரிதும் பாதித்துள்ள போதும் வர்த்தக மாணவர் மன்றம் அதிக ஊக்கம் எடுத்து இம்மலரை வெளியிடுவது போற்றத்தக்கது. வர்த்தக மாணவர் மன்றத்தின் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றும் சு. நடராசா அவர்களின் வழிநடத்தலால் மாணவர்கள் பெரிதும் உந்தப்பட்டு இம்முயற்சியில் வெற்றியடைந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோருக்கும் எனது பாராட்டுகள் உரித்தாகுக.

வர்த்தக மாணவர் மன்றத்துடன் ஏனைய மாணவர்களும் மன்றங்களும் இணைந்து கல்லூரிச் சஞ்சிகையான மத்தியம் ஒழுங்காக வெளிவர அதிபருக்கும் ஆசிரியர்கட்கும் ஒத்துழைப்பு நல்க வேண்டு மெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வே-பாலசுந்தரம்

# யாழ் கோட்ட கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி



யாழ்கோட்டம்
யாழ்ப்பாணம்
21 - 10 - 92

யாழ் மத்திய கல்லூரி வர்த்தக மாணவர் மன்றம் வெளியிடும் மத்திய வணிகம் மலர் கண்டு பெருமகிழ்வடைகின்றேன். யாழ்க்கோட்டத்தில் பல் துறைகளிலும் சொல்லேர் உழவரான ஆளுமைசால் அதிபரின் வழிநடத்தலில் வளங்காணும் கல்லூரி வர்த்தகத் துறையிலும் செழுமையொடு புகழீட்டுவது போற்றத்தக்கதே. ஈழத்துணவும் கழகத்தாக்கமும் எனும் பட்டினப்பாலையின் பாடல்வரிகள் வங்கம் செலுத்தி வளமார் வணிகம் செய்தமையை நமக்குநினைவூட்டும். அத்தகைய எழுச்சிமிகு நிலைக்கு வணிகக் கல்வி புத்துயிர் பெற்று நம் மாணவச் செல்வங்கள் பல்கலைக்கழகம் சென்று வணிகக் கலையை பயின்று செழிப்படைய கடந்த ஒரு தசாப்தம் காட்டும் ஆர்வத்தினை மெச்சாதிருக்க முடியாது. இக் கல்லூரியிற் பயிலும் மாணவர்கள் இத் துறையில் காட்டும் ஆர்வமும் ஈட்டும் பெறுபேறுகளும் பாராட்டப்பட வேண்டியதாகும். இக்கால கட்டத்திலும் திண்ணிய நெஞ்சத்தோடு எண்ணிய செயலை எழிலுற முடித்து மாணவர் கரங்களில் தவழவிடும் மலர் மதலை பொலிவுற விளங்க என் நல்லாசிகள். வளர்க்க நும் பணி.

சி. வேலாயுதம்
யாழ்கோட்ட கல்விப்பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

## வர்த்தக பிரதி கல்விப்பணிப்பாளரின் அன்பிற்சொரிந்தவை



மத்தியத்தின் மணிக் கொடி என்றும் தாளாது. வர்த்தகத்துறை மாணவர் செய்யும் நற்பணி கண்டு சொற்பத மலர் கொண்டு போற்றுதல் வேண்டும் இத் துறையில் பழம் பெரும் கல்லூரியாம் மத்திய கல்லூரி வர்த்தகத் துறைக்கு ஆற்றிடும் சேவைகள் பற்பல, அதன் வழி தொடர்ந்து மத்திய வணிகம் மலர் இரண்டதனை வெளி யிடுவது கண்டு பெருமிதம் கொண்டு நல்லாசிகள் கூறுகின்றேன். இம் மலர் மொட்டு விரியும் போது அறிவுத்திறன் கொண்ட பல இதழ் விரியும் வர்த்தகம். பொருளியல், கணக்கியல், புவியியல், அளவையியல், இந்துநாகரீகம் பொது. எனப் பல இதழ்களும் சிந்தனை ஒளிபரப்பி சிறந் திடும் என நல்லாசிகள் பல கூறுகின்றேன். தொடர்ந்து பல மலர்களை இம் மன்றம் வெளியிட வேண்டு மென அன்புடம் பணிக்கிறேன். பயன்தரு பணியில் அரும் பாடு பட்டு உழைத்த இக் கல்லூரியின் மாணவர்கள் ஆசிரியர்கள் அதிபர் ஆகி யோரை பாராட்டுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

சி. சிவராசா
பிரதிக்கல்விப்பணிப்பாளர் (வர்த்தகம்)
யாழ்ப்பாணம்.

# சற்று நில்லுங்கள்...



உங்களை நிற்கவைத்து நன்றிகூறுவது யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி வர்த்தக மாணவர்களாகும்.

## நன்றி வணக்கங்கள்

நீங்கள் பெற்றோர்கள், பெரியோர்கள், படிப்பாளிகள், செல்வந்தர்கள் நாங்கள் மாணவர்கள், இளைஞர்கள், எங்களுக்காக நீங்கள் இது வரையும் என்ன செய்தீர்கள் " சற்று சிந்தியுங்கள் " எமது கல்வி வளமற்ற நிலையிலும் வளங்கள் அற்ற நிலையிலும் பணச்செலவுகளின் மூலம் பாரிய கஸ்டத்தினூடே முன்னெடுத்து செல்லப்படவேண்டியுள்ளது. இவற்றை போக்குவதற்கு நீங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படுங்கள்.

" வானத்து மீன்களையும் நிலவையும்கூட கருமுகில்கள் மறைப்பதுண்டு " ஆனால் அப்படி மறைக்கப்பட்டு விட்டது என்பதற்காக அவை தம் ஒளியை இழந்து மங்கிவிடுவதில்லை. இதே போன்றுதான் ஆண்டுகள் பலகடந்துவிட்ட இந்தவேளை தனக்கென ஒரு தனி இடத்தை கொண்டு தனித்துவமான இலட்சியங்களுடன் வானில் ஞாயிறுதனைப் போல் பிரகாசித்துக் கொண்டிருக்கும் எமது கல்லூரி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வர்த்தக மன்றத்தினால் வருடந்தோறும் தவழ விடப்பட்டு வளரவிடப்படுகின்ற " மத்தியவணிகம் " என்னும் இரண்டாவது மலரை அன்றுபோல் இன்றும் உங்கள் கரங்களிலே தவழவிடுவதை எண்ணி நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

யாழ் மாவட்ட பாடசாலைகளில் இருந்து பலமலர்கள் வெளிவருகின்றன. இவை எல்லாவற்றிற்கும் மத்தியில் அறிவுமணம் திகழும் அழகுமலராக சிந்தனை நுட்பத்துடன் சிறப்பாக வெளிவரும் " மத்திய வணிகம் " உங்கள் கரங்களில் தவழும்போது அதன் சிறப்பினை நீங்களே சிந்தித்து கொள்ளுங்கள். உங்கள் சிந்தனையே எங்களின் வழிகாட்டல்களாகும். சிந்திப்பதால் சிறப்புண்டு எங்களை சிந்திக்கவையுங்கள் நீங்களும் சிந்தியுங்கள்.

அறிவுடைய சமூகமே ஆளுமையுடைய சமுதாயத்தையும் ஆண்மைமிக்க சமூகத்தையும், பொருளாதாரமிக்க, நாட்டையும், தேசபற்றையும், மொழிப்பற்றையும், உருவாக்கும். இதற்கு உங்கள் ஒவ்வொருவரினதும் பங்களிப்பு பலமானதாகவும் பன்முகம் கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்பதனை சிந்தித்து உணர்ந்து செயற்படுவீர் என அன்புடன் கூறி மீண்டும் மீண்டும் நன்றி வணக்கங்களை தெரிவித்து கொள்கின்றோம்.

நன்றி வணக்கங்கள்


உப இதழாசிரியர்
என். முகுந்தன்

இதழாசிரியர்
என். விஜயகுமார்.

# நடப்பாண்டு செயற்குழு

## 1992 - 1993

| | | |
|---|---|---|
| காப்பாளர்: | திரு. | N.K. சண்முகநாதபிள்ளை |
| துணைக்காப்பாளர்கள்; | திரு. | S. நடராஜா |
| | செல்வி. | P. செல்லையா |
| | திரு. | K. நாகேந்திரம் |
| பொறுப்பாசிரியர் :- | திரு. | S. நடராஜா |
| தலைவர் :- | செல்வன். | K. பிரபாகரன் |
| உபதலைவர் :- | செல்வன். | L. பிரமாதீசன் |
| செயலாளர் :- | செல்வன். | T. ரேணுசங்கர் |
| உபசெயலாளர் :- | செல்வன். | K. வின்சன் |
| பொருளாளர் :- | செல்வன். | T. சிவக்குமார் |
| பத்திராதிபர்கள் :- | செல்வன். | S.N. விஜயகுமார் |
| | செல்வன். | N. முகுந்தன் |
| கணக்காய்வாளர்கள் :- | செல்வன். | S. ஜீவராஜ் |
| | செல்வன். | S. சுகந்தராஜன் |
| நிர்வாக குழு உறுப்பினர்கள் :- | செல்வன். | S. இந்திரகுமார் |
| | | V. வெஸ்லிரவிந்திரன் |



இடமிருந்து - வலம் [இருப்பவர்]

செல்வன் T. சிவகுமார் (பொருளாளர்) திரு. Vஜயாத்துரை (உபஅதிபர்) திரு N.Kசண்முகநாதபிள்ளை (அதிபர்) செல்வன் K. பிரபாகரன் (தலைவர்) திரு S. சிவன்ரூபன் (உபஅதிபர்) திரு S. நடராஜா (பொறுப்பாசிரியர்) செல்வன் T. ரேனுசங்கர் (செயலாளர்)

இ - மி - வலம் (நிற்பவர்கள்)

செல்வன் V. வெஸ்விரவீந்திரன், செல்வன் S. இந்திரகுமார், செல்வன் K. வின்சன், (உபசெயலாளர்)
செல்வன் L. பிரமாதீசன் (உபதலைவர்) செல்வன் N. முகுந்தன் (உபபத்திராதிபர்)
செல்வன் S. சுகந்தராஜன் செல்வன் S. ஜீவராஜ்

# நாமும் மன்றமும்

மத்திய கல்லூரியின் வர்த்தக மாணவர் மன்றம் 1970ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. எமது செயற்குழு 22 வது ஆண்டு தொடக்கத்தில் மன்றத்தைப் பொறுப்பேற்றது. பத்தொன்பது ஆண்டுகளாக மெல்லென வளர்ந்த மன்றம் 1989ம் ஆண்டு வளர்ச்சி பாதையை சென்றுகொண்டிருக்கும் போது அப்போதய மன்றத்தின் தலைவன் அண்ணன் முத்துக்குமாரு கோபாலகிருஸ்ணன் எம்மால் ஜீரணிக்கமுடியாத நிலையில் தன் உடலை மண்ணோடு சேர்த்துக் கொண்டான். அந்த வேளை துயரத்தின் மத்தியில் வேதனைக் காற்றை சுவாசித்துக் கொண்டிருந்த எமது மன்றம்.

''விழிகளில் கனவுகளை சுமந்துநின்ற எமக்கு விழிகளில் கண்ணீரை சுமக்க வைத்தது''

அன்புப் பொறுப்பாசிரியர் சு. நடராஜாவின் ஆறுதல்களினாலும் மறைந்த தலைவன் அண்ணன் கோபால் வழியிலே தூவிவிடப் பட்டிருக்கும் வெற்றிமுட்கள் எம்பாதங்களை பற்றிக்கொண்டதனாலும் எம்மன்றம் தொடர்ந்தும் வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கின்றது.

அதன் நடைமேலும் விரைவாகவும் துரிதமாகவும் செயற்படுவதற்கு எமது செயற்குழுவின் ஒத்துழைப்பும் கூட்டுப் பொறுப்பும் அதிபரின் அன்பு வழிகாட்டலும் அன்புப் பொறுப்பாசிரியரின் அரவணைப்பும் பொன்னான மிடுக்கான செயற்பாடுகளினாலும் உதவி ஆசிரியர்களின் அசையாத நம்பிக்கையினாலும் எமது மன்றம் மேன் மேலும் வெற்றிநடை போடச்செய்தது.

இ. நேஜுபலகர்
செயலாளர்

இன் நிலைகண்டு இன்னல்பட்டு தம் நிலை வெளிப்படுத்திய அன்பர்களின் அன்புச் செயலால் மன்றத்தின் துரிதநடை சிறிது தடங்கள் உற்றிருக்கின்றது. எனினும் அதிபரின் உள்ளம்கனிந்த உற்சாகம் எம் மன்றத்தை மேலும் துரிதநடை போடச் செய்யும் என்ற நம்பிக்கை எமக்குண்டு

எமது மன்றம் செயற்குழு கூட்டங் களிலும் பொதுக்கூட்டங்களிலும் சிந்தனை திறன்மிக்க ஆலோசனைகள் பல முன்வைக்கப் பட்டன. இவ் ஆலோசனைகள் திட்டமிடப் பட்ட முறையில் செயற்படுத்தப்பட்ட மையினால் எமது மன்றம் பல் முனை கொண்ட வளர்ச்சியை பெற்றது. மாணவர் களினது சிந்தனைகளை தூண்டக்கூடிய வகையில் கருத்தரங்குகள், விவாத மேடைகள் நடாத்தப்பட்டு வர்த்தகக் கல்வியின் வளர்ச்சிக்கு பெரும்பங்களிப்பு செய்தது.

இவ்வாறு எமது செயற்குழு பல வழிகளாலும் வெற்றிவாகை சூடிக் கொண்டிருக்கும் போது வர்த்தக துறையின் மூலகர்த்தா ஓய்வு பெற்ற உப அதிபர் மதிப்பிற்குரிய கைலாயபிள்ளை கந்தசாமி அவர்களின் திடீர் மறைவு எம்மை வேதனையில் ஆழ்த்தியது.

எதற்குமே மனம்தளராத எமது. செயற்குழு துயரங்களை நெஞ்சினிலே சுமந்துகொண்டு மத்தியத்தின் வளர்ச்சிக் காகவும் வர்த்தக துறையின் வளர்ச்சிக் காகவும் தொடர்ந்தும் தம் பணியினை செய்துவருகிறது.

மன்ற செயற்பாடுகளுக்கு மகுடம் சூட்டுவது போன்று யாழ் நல்லூர் கோட்ட பாடசாலைகளுக்கிடையே வர்த்தகத்துறை சார் கட்டுரைப் போட்டியை நடாத்தி வர்த்தக வெற்றிக்கிண்ணங்களையும் சான்றி தழ்களையும் வழங்கியது. வர்த்தகத் துறையை வளர்ப்பது மட்டுமல்லாமல் ஏனைய ஒன்றிணைந்த செயற்பாடுகளையும் ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக எமது மன்ற அங்கத்தவர்களில் சிறந்தவிளையாட்டு வீரர்களை தெரிவுசெய்து அவர்களுக்கும் வெற்றிக் கிண்ணங்களையும் சான்றித ழ்களையும் வழங்கியது.

மேலும் சமூகசேவைகளிலும் நலச் சேவைகளிலும் முன்நின்று செயற்பட்டு சமூகத்தில் சமூகமாய் ஒன்றிணைந்து எமது கல்லூரியின் புகழ்நித்தம் நிலைக்க பெரும் பங்காற்றினர். எமது சேவைகளைப் பாராட்டி பொதுநல அமைப்புக்களால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் எமது வர்த்தக மன்றகோவையினை அலங்கரிக்கின்றது.

வர்த்தக துறைசார் மாணவர்களுக்கும் அவர்கள் கல்விச் செயற்பாடுகளும் என்றும் மங்காது ஒளிவீச ஆதரவுநல்கிய அதிபர், பொறுப்பாசிரியர், சமூகத்தவர்கள் எல்லோ ரும் இத்துறைமேன்மேலும் வளர்ச்சியுற தம் ஆதரவை உள்ளன்புடன் உகழ்ந்தளித்து வழங்குவார்கள் என எதிர்பார்க்கிறேன்.

# இலங்கையின் உலக வர்த்தக நிலையமும் ஏற்றுமதி அபிவிருத்தியில் அதன் பங்கும்.

க. தேவராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர்
வணிக முகாமைத்துவ துறை
யாழ்பல்கலைக் கழகம்.

## 1.0 அறிமுகம்

சர்வதேச வர்த்தகத்தினையும் சந்தைப் படுத்தலையும் இலகுவில் மேற்கொள்வதற்கான வசதிகளை வழங்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டதே உலகவர்த்தக நிலையமாகும். இன்று உலகின் பெரும்பாலான நாடுகள் சர்வதேச வர்த்தகத்தினை வளர்க்கும் நோக்குடன் பல உபாயங்களைக் கையாளத் தொடங்கியுள்ளன. இலங்கையும் அந்நியச் செலாவணிப் பிரச்சினையைக் கொண்டதோர் நாடென்பதால். சர்வதேச வர்த்தகத்தினையும் சந்தைப் படுத்தலையும் அதிகரிக்க வேண்டியதோர் நிர்ப்பந்தத்தைக் கொண்டிருக்கின்றது. இதற்கு வழிவகையாகவே இலங்கையின் உலக வர்த்தக நிலையமானது உருவாக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதிச் சந்தைப் படுத்தலும் இறக்குமதி மூலப் பொருட்களுக்கான தேவைகளுமே இலாபகரமான சர்வதேச வர்த்தகத்துக்கான மூலாதாரமெனக் கருதப்படுவதால் இலங்கையின் உலக வர்த்தக நிலையமானது ஏற்றுமதி, இறக்குமதி இலகு மயப்படுத்துவதற்கு தேவைப்படும் முழு அளவிலான சேவைகளை வழங்கி வருகின்றது. இதன் காரணமாக இலங்கையின் சர்வதேச வர்த்தகமானது எதிர்பார்த்ததைவிட விரைவாக வளர்ச்சி பெறும் நிலையை அடைய முடிந்துள்ளது,

## 2.0 உலகவர்த்தக நிலையத்தின் எண்ணக்கரு

சர்வதேச வர்த்தகத்தினை முன்னேற்றும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்ட ஒரு வழியே உலக வர்த்தக நிலையமாகும். ஒரு உலக வர்த்தகநிலையமானது ஏற்றுமதித் தகவல்கள், இறக்குமதிமூலங்கள், சந்தைவாய்ப்புக்கள், ஏற்றுமதிக்கான கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற சர்வதேச வர்த்தக

அபிவிருத்திக்கு தேவையான மேலதிக சேவைகளை வழங்குகின்றது. எனவே தான் உலக வர்த்தக நிலையத்தை சேவை நோக்குடைய ஒரு நிறுவனமாகக் கொள் கின்றனர். சர்வதேச வர்த்தக நடவ டிக்கையினைத் தூண்டுவதும், கடல்கடந்த கொடுத்தல் வாங்கல்களை இலகுவில் மேற் கொள்ளவகை செய்வதும், நாட்டின் சர்வ தேச வர்த்தகத்தினை விருத்தி செய்வதற் காக அரசாங்கதனியார் நிறுவனங்களினது வர்த்தக ஆதாரநடவடிக்கைகளை ஒருங் கிணைப்பதுமே உலக வர்த்தக நிலையத்தின் நோக்கமாகும்.

உலக வர்த்தக நிலையமானது ஒவ்வொரு நாட்டினதும் தனித்துவமான தேவையை பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் காணப்படுவதனால் எல்லா நாட் டினது உலக வர்த்தக நிலையங்கள் ஒரே நோக்குடன் இயங்கவில்லை. இதன் அடிப் படையிலேயே ஒருநாட்டின் உலக வர்த்தக நிலையம் அரச உத்தரவாதத்தின் கிழ்இயங் கும்பொழுது, இன்னொரு நாட்டின் உலக வர்த்தக நிலையம் முற்றிலும் தனியார் துறையால் கொண்டு நடாத்தப்படுகின்றது. ஆசிய நாடுகளிலுள்ள உலக வர்த்தக நிலை யங்கள் தத்தமது நாடுகளுடன்.
மிகநெருங்கி இருப்பதுடன், வெளிநாட்டு வர்த்தகத்தினை வளர்ப்பதற்கும் இவை பயன்படுத்தப் படுகின்றன. சர்வதேச ரீதியில் கொள்வனவாளர் விற்பனையாளர் ஆகியோ ருக்கிடையிலும், உற்பத்தியாளர் உபயோ கிப்போர் ஆகியோருக்கிடையே திறமை யுள்ள வர்த்தக உதவியாளராக தொழிற் படுதல் என்பதே உலக வர்த்தக நிலையத்தின் பண்பாகும்.

### 3.0 உலக வர்த்தநிலையத்தின் வளர்ச்சி,

உலக வர்த்தக நிலையமானது கடந்த இரு தசாப்த காலங்களிலேயே வளர்ச்சி பெற்று வந்துள்ளது. இதன் காரணமாக இன்று அறுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் இருநூறுக்கும் கிட்டிய உலக வர்த்தக நிலை யங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய உலக நாடுகளிலும் இவை உருவாக்கப்படும் நிலையிலோ அல்லது திட்டமிடப்படும் நிலை யிலோ உள்ளன. சோவியத் யூனியன், சீனா, ஹங்கேரி போன்ற சோஷலிச நாடுகளில் கூட உலக வர்த்தக நிலையங்கள் உருவாக்கப் பட்டிருப்பதுடன் அவை சோஷலிச உலகினைப் பிரதிநிதித்துவப் படுத்துவன வாக உள்ளன. இதே போல் அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், அவுஸ்தி ரேலியா போன்ற நாடுகளிலே இருக்கும் உலக வர்த்தக நிலையங்கள் முதலாளித்துவ பண்பினைக் கொண்டனவாக உருவாக்கப் பட்டுள்ளன இத்தகைய உலக வர்த்தக நிலையங்களின் துரிதமான வளர்ச்சியானது உலக வர்த்தகம் என்பது உலக சமாதானத் திற்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் முன்னேற்பாடான கருவியாக இருக்கின்ற தென்பதை உறுதிப்படுத்துகின்றது. இதன் காரணமாக இலங்கையின் உலக வர்த்தக நிலையமும் எமது நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கு பெறுவதாக அமையும்.

உலக நாடுகளிலுள்ள உலக வர்த்தக நிலையங்களை ஒன்றினைக்கும் பொதுவான அமைப்பையே ''உலக வர்த்தக நிலையங்க ளின் சங்கம்'' என அழைப்பர். இது சர்வ தேச பணிப்பாளர் சபையால் நிர்வகிக்கப் படுகின்ற ஒரு ஐக்கிய நாடுகளின் அரச சார்பற்ற நிறுவனமாகும். இச் சங்கம் உலக ளாவிய ரீதியில் வர்த்தக வாய்ப்புக்களை விருத்தி செய்யும் வகையில் ஒவ்வொரு உலக வர்த்தக நிலையத்தினையும் அதன் உறுப்பினர்களையும் இணைக்கக் கூடிய வகையிலான தொடர்பினைக் கொண் டுள்ளது இச் சங்கம் அதியுயர் வர்த்தகப் பேச்சுவார்த்தைகளில் தனியார் துறையைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப்பாக வளர்ந்துள்ளது. சர்வதேச வர்த்தக அபிவி ருத்தியை பெறுவது தொடர்பாக இதன்

செயற்படு திறமைக்கு நிகராக எந்தவொரு பொது அல்லது தனியார் நிறுவனம் இல்லை என்பதனால் உலக வர்த்தக நிலையங்களின் சங்கம் சர்வதேச ரீதியில் முக்கியம் பெறும் அமைப்பாகும்.

## 4. 0 உலக வர்த்தக நிலையத்தின் நோக்கம்

சர்வதேச வர்த்தகத்தினை விருத்தி செய்வது என்பதே உலக வர்த்தக நிலையத்தின் அடிப்படை நோக்கமாகும். இப்பணியில் ஏற்கனவே இணைந்திருக்கும் அரசநிறுவனங்களுடனும் தனியார் நிறுவனங்களுடனும் போட்டியிடாது இந்நிறுவனங்களின் பணிகளைப் பூர்த்தி செய்ய உதவுவது உலக வர்த்தக நிலையத்தின் பண்பாகும். சர்வதேச வர்த்தகத்தின் வளர்ச்சிக்கு தடையாக வுள்ள காரணிகளை இனம் கண்டு கொள்வதும், ஏனைய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் அவற்றை நீக்கிவிடுவதும் உலக வர்த்தக நிலையத்தின் அடிப்படைப் பணியாகும். உலகவர்த்தக நிலையங்கள் ஒரு கடைத் தொகுதியாக அமைக்கப்படுவதனால் அந் நாடுகளின் உற்பத்திப் பொருட்களுக்கான காட்சி கூடங்களாக அமையமுடியும். உலக வர்த்தக சேவைகளை வழங்கும் அரச, தனியார் நிறுவனங்கள் அமைந்திருப்பதனால் ஏற்றுமதியாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்குமான அலுவலக செயற்பாடுகளும் இங்குள்ளன.

ஒரு உலக வர்த்தக நிலையத்தின் பிரதான நோக்கம் ஒரு நாட்டின் உற்பத்திப் பொருட்களை காட்சிப் படுத்துவதற்கான காட்சிவசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தலாகும். உண்மையில் தனிப்பட்ட ஏற்றுமதியாளர்கள் இந்த வர்த்தக நிலையத்தில் அலுவலக இடவசதியினை எடுக்கவேண்டிய அவசியமில்லை. உலக வர்த்தக நிலையத்தின் இந்த அம்சமானது ஏற்றுமதியாளர்களின் செலவினத்தினை மீதப்படுத்துவதோடு, தாமாகவே சந்தைகளை இனம் கண்டு கொள்ள வதிலுள்ள பிரச்சினைகளையும் குறைக்கின்றது. சர்வதேசக் கொள்வனவாளர்கள் உலக வர்த்தக நிலையத்தின் மத்தியஸ்தானத்திற்கு வருகைதந்து நாம் விரும்பும் உற்பத்திப்பொருட்களை பார்வையிடுவதற்கும் அந்த இடத்திலேயே கொள்வனவு பற்றிய தீர்மானங்களை எடுக்க வசதியளிப்பதும் உலக வர்த்தக நிலையத்தின் அடிப்படை நோக்கமாகும்.

உலக வர்த்தக நிலையமானது வர்த்தக தகவற் சேவையை வழங்கும் ஒரு அமைப்பாக தொழிற்படுகின்றது என்பதும் அதன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். பொருளாதார நிலைமைகள், அவை தொடர்பான விபரங்கள், ஏற்றுமதி நடைமுறைகள், நிதி, வரிமுறைகள், போன்ற தகவல்கள் உலக வர்த்தக நிலையத்தினால் வழங்கப்படும்.

உலக வர்த்தக நிலையம் சர்வதேச தகவல் தொடர்பு முறைகளை விரைவாகவும் சிக்கனமாகவும் பெற்றுக் கொள்ள வகை செய்யும். இதன் காரணமாக தகவல் வழங்கும் பணிகளை சரிவர நிறைவேற்றுவது என்பதும் உலக வர்த்தக நிலையத்தின் நோக்கமாகும்.

## 5. 0 இலங்கை உலக வர்த்தக நிலையத்தின் பணிகள்

இலங்கையின் சர்வதேச வர்த்தக அபிவிருத்திக்கு உதவுவது இலங்கை உலக வர்த்தக நிலையத்தின் பண்பாகும். இதன் காரணமாக பல பணிகளை ஆற்ற வேண்டுமென இந்த அமைப்பு எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக

1. வெளிநாடுகளிலிருந்து வருகின்ற வர்த்தகதூதுக் குழுவினருக்கும் இலங்கை வர்த்தகர்களுக்குமிடையே நேரடி வியாபாரத் தொடர்புகளை ஏற்படுத்தல்.

2. இலங்கையின் கைத்தொழிற் துறை அபிவிருத்திக்கு உதவும் வகையில் அதன் சர்வதேச வர்த்தகத் தொடர்பான மகா நாடுகளை நடத்தல்.

3. முகாமைத்துவ பட்டப் பின்படி நிறுவனம் (Pim) ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB) தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் (NIBM), இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் (SLIDA) போன்றவற்றுடன் இணைந்து சர்வதேச வர்த்தகக் கல்வியினை வளர்த்தல்.

4. சர்வதேச வர்த்தக அபிவிருத்திக்கு தேவையான தகவல் சேவையை வழங்குதல்

5. கடல் கடந்த அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்களுக்கு உதவி செய்தல்.

6. இலங்கைக் கல்விப்பணிகள் தமது சாவதேச வர்த்தக நடவடிக்கைகளை திட்டமிட்டுக் கொள்வதற்கு தேவைப்படும் தகவல்களைப் பெற வசதியாக கணணிமயப் படுத்தப்பட்ட தரவு வங்கிகளைபராமரித்தல்

7. இலங்கையின் புதிய ஏற்றுமதியாளர்களுக்கு வெளிநாட்டு வர்த்தக வாய்ப்புக்களை விபரிப்பதற்கு வசதியாக பரந்த அளவிலான வெளியீட்டுத் திட்டமொன்றை மேற்கொண்டு வருதல்.

8. இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயத்தின் வசதிகளை பிரதிபலிக்கக் கூடிய வாறும், வெளிநாட்டு முதலீடுகளை கவரக் கூடியவாறும் தீவிர சந்தைப்படுத்தும் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

9. சர்வதேச வர்த்தக அபிவிருத்திக்கு வழிவகுக்கும் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.

என்கின்ற வகையிலே இலங்கையின் உலக வர்த்தக நிலையமான பல பணிகளை மேற்கொண்டுவருகின்றது. இப்பணிகளினால் இலங்கையின் சர்வதேச வர்த்தகத்தின் விரைவான வளர்ச்சிக்கு உலக வர்த்தக நிலையம் உதவி வருகின்றது. இன்று உலக வர்த்தக கண்காட்சிகள் அனைத்துவர்த்தகர்களுக்கும் நன்கு தெரிந்தவையாகும். இதற்கு வசதியாகவே உலக வர்த்தக நிலையமானது சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுவோர் இக் கண்காட்சியில் பங்கு கொள்ள வகை செய்கின்றது. இவற்றினூடாக இலங்கையின் சர்வதேச வர்த்தகத்தின் துரித வளர்ச்சிக்கு உலக வர்த்தக நிலையம் பெரும் பங்காற்றுகிறது.

## 6. 0 முடிவுரை

சர்வதேச வர்த்தகத்தினை விருத்தி செய்ய பாடுபடுகின்ற பல்வேறு நிறுவனங்களில் உலக வர்த்தக நிலையமும் ஒன்றாகக் கருதப்பட முடியும் இன்று கைத்தொழில் மயமாக்கம் என்பது எல்லா நாடுகளிலும் பிரபலம் பெற்று வரும் ஒரு நடவடிக்கை என்பதால் அதன் அபிவிருத்திக்கு உலக வர்த்தக நிலையம் பெரும் பங்காற்றும் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளுக்கு சர்வதேச சந்தைகளில் திறமையாக போட்டியிட வேண்டிய அவசியமுண்டு அத்தகை நிலைமையில் போட்டிகளை இலகுவில் சமாளித்து சர்வதேச வர்த்தகத்தில் முன்னணி பெற உலக வர்த்தக நிலையம்உதவும். இது வெளிநாட்டுக் கொள்வனவுத் தூதுக்குழுக்களையும் முதலீட்டுத் தூதுக்குழுக்களையும் வரவேற்று உபசரிக்க முடியும். இதன் காரணமாக இலங்கையின் சர்வதேச வர்த்தகமானது மிக விரைவாகவே வளர்ச்சியடைந்து நாட்டிற் பெரும் நன்மைகளை பெற்றுத்தர உலக வர்த்தக நிலையம் வகைசெய்கிறது என உறுதியாக கூற முடியும்.

# சந்தைப்படுத்தல் MARKETING

தி. ஸ்ரீசபேசன்
A/L 1993 C (A)

தற்காலத்தில் சர்வதேச வர்த்தகம் விரிவடைந்து வருவதினாலும் சிறப்புத் தேர்ச்சி தொழிற்பிரிப்பு என்பனவற்றினால் பேரளவு உற்பத்திகள் தோன்றி வர்த்தகவுலகம் விரிவடைவதன் மூலம் பொருட்கள் சேவைகளை வழங்குவதற்கு நிறுவனங்கள் போட்டி இட்டுக் கொண்டு இருக்கின்றன. ஒரு தேவைக்கு ஒரு நிறுவனமோ அல்லது பலநிறுவனமோ மக்களுக்கு வேண்டிய பொருட்கள் சேவைகளை வளங்குகின்றது. இவ்வாறு அமைவதனால் போட்டிகழுக்கு முன் ஈடு கொடுப்பதற்காகப் பல்வேறு சந்தை உக்திகளை கையாள வேண்டி உள்ளது. திறனான ஓர் சந்தைப் படுத்தல் சந்தர்ப்பம் அமையாது போயின் நிறுவனங்கள் இலாபக்குறைவு, நட்டம் ஏற்படல், தொடர்ந்து இயங்கமுடியாத நிலை போன்ற பல்வேறுபட்ட தாக்கங்கழுக்கு உட்பட நேரிடும். இந்த வகையில் வர் தகவுலகில் சந்தைப்படுத்தலானது முக்கியம் பெறுகின்றது.

நுகர்வோரின் உச்சப் திருப்தியினை நோக்கமாகக் கொண்டு அவனது தேவைகளை அறிந்து பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்து அவை நுகர்வோனைச் சென்றடைய மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளையும் சந்தைப்படுத்தல் என வரையறுக்கலாம். அதாவது ''உற்பத்தியாளரினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளை நுகர்வோனை சென்றடைய செய்யும்கருமமே சந்தைப்படுத்தல்'' எனபர். இச்சந்தைப்படுத்தலானது உற்பத்திக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு விற்பனையின் பின்பும் தொடர்ந்து செல்கிறது. இதனை அடிப்படையில் உற்பத்தியாளர் தமது விருப்பத்

துக்கு ஏற்ப பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்து அவற்றினை பல்வேறு முயற்சிகளில் மேற் கொண்டு விற்பனையினை மேற்கொள்வது உற்பத்தி சார்பான சந்தைப் படுத்தல் என்றும் நுகர்வோரின் தேவைகளை அடிப்படை யாகக் கொண்டு பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்து நுகர்வோனுக்கு உச்சதிருப்தியினை அழிக்கும் வகையில் அதனை விற்பனை செய்வது நுகர்வோர்சார்பான சந்தைப் படுத்தலாகும். இதுவே தற்காலதில் முக்கியம் பெறும்.

சந்தைப்படுத்தல் என்பது விற்பனையைக் குறிக்காது என்றும் விற்பனை என்பதோ வியாபாரிகள் கையிலிருந்து நுகர்வோர் கைக்கு பண்டங்கள் கை மாறுகின்றதனைக் குறிக்கும் மாறாக சந்தைப்படுத்தல் என்பதோ விற்பனை உள்ளடங்கலாக பல பாரிய கருமங்களை உள்ளடக்கி இருக்கும். அந்தவகையில்

(1) சந்தைப்படுத்தல் ஆராட்சி
(2) வாங்குதல்
(3) பண்டக சாலையிடல்
(4) தமம் பிரித்தல்
(5) பொதி கட்டல்
(6) குறியிடல்
(7) விலைகுறித்தல்
(8) விற்பனை அபிவிருத்தி
(9) கொண்டு செல்லல்
(10) விற்பனை
(11) விற்பனையின் பின்சேவை

என்பன சந்தைப் படுத்தலில் முக்கிய கருமங்களாகும்.

## (1) சந்தையாராட்சி:-

புதிய பொருளொன்றை உற்பத்தி செய்து சந்தைப் படுத்துகின்ற வேளையில் அதற்கு நிலவக் கூடிய எதிர்கால சந்தை வாய்ப்புகள் பற்றி அறிந்து கொள்வதே சந்தையாராட்சி யாகும். அதாவது தகவல்களை சேகரிப்பதும் அவற்றை பயன்படுத்தும் வகையில் பிரயோகிப்பதும் இதனையே குறிக்கும்.

எதிர்காலச் சந்தையை அறிவது போல நிகழ்காலச் சந்தை நிலைமைகள் பற்றி அறிவதே "சந்தைப் பரிசோதனை" ஆகும். இவ் உக்தியின் படி ஒரு பொருள் பரிட்சார்த்தமாக உற்பத்தி செய்து சந்தைப்படுத்துகின்ற போது நுகர்வோரில் ஏற்படும் பிரதிபலிப்புக்களை கண்டறிவதாகும். சந்தையாராட்சியின் போது இரண்டு முக்கியமான தகவல்கள் பெறபடும்.

- முதல் நிலைத் தகவல்
- துணைநிலைத் தகவல்

இங்கு முதன் நிலைத்தகவல் என்பதோ நுகர்வோனுடன் அல்லது சம்மந்தப்பட்ட நபர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெறும் முறையாகும். இதன்படி நேர்முக வுரையாடல், தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளல், வினாக்கொத்து முறை என்பன சிலவாகும். மாறாகத் துணைநிலைத் தகவல் என்பதோ சம்மந்தப்பட்ட நபர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வது, ஏடுகளின் மூலமாக தரவுகளையும் தகவல்களையும் சேகரித்துக் கொள்ளுமோர் முறையாகும். இதன்படி சஞ்சிகைகள், தினசரிகள், போட்டி நிறுவனங்களின் அறிக்கைகள், ஆணைக்குழு விசாரணைகள் என்பன வற்றின் மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்வதாகும்.

## (2) வாங்குதல்.-

விற்பனை இலாபத்தில் முக்கியம் பெற்றால் கொள்வனவு கிரையக் குறைப்பில் முக்கியம் பெறும் எனவே நிறுவனங்கள் சிறப்

பான கொள்வனவை மேற் கொண்டாலே சிறப்பான சந்தைப் படுத்தலிலக்கையடைய முடியும். சிறப்பான கொள்வனவு என்பது

சரியான பொருளை.
சரியான விலையில்.
சரியான இடத்தில்.
சரியான அளவில்.
சரியான தரத்தில். கொள்வனவு செய்தலினைக் குறிக்கும். இங்கு சிக்கனக் கட்டளைக்கணியம்(EOQ) ECONOMI ORDER QUANITY என்பதனை உற்பத்தியாளர் அல்லது வியாபாரி ஒரே தடவையில் ஆகக் கூடுதலாக எவ்வளவுதொகைக்கு கட்டளை இடுவதன் மூலம் மொத்தச் செலவுகளைக் குறைக்க முடியும் என்பதனைக் குறிக்கும் பொருட்களுக்கு கட்டளை அனுப்பி அவற்றினைப் பெற்று கழஞ்சியப் படுத்தல் தொடர்பாக பின்வரும் செலவுகளேற்படும்.

- கட்டளைச் செலவு.
- பராமரிப்புச் செலவு.
- இருப்பின்மைச் செலவு
- கொள்வனவுச் செலவு.

என்பனவாகும்.

## (3) பண்டகசாலையிடல்:-

உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களையோ அல்லது வாங்கி ஒன்றுதிரட்டப்பட்ட பண்டங்களையோ பாதுகாக்கின்ற நடவடிக்கையே இதுவாகும். இதன்படி பண்டங்களை நீண்டகாலத்துக்கு சேமித்து கொள்ளவும் இதன் மூலமாக மிகைநிரம்பல், குறைநிரம்பல் என்பனவேற்படாது இருக்கவும் பண்டகசாலையிடும் கருமம் சந்தைப் படுத்தலில் முக்கியம் பெறுகிறது.

## (4) தரம் பிரித்தல் -

பொருட்களின் வகைகள் அவற்றின் தரம், விலை என்பவற்றுக்கேற்ப பொருட்களை வகைப்படுத்தும் ஓர் நடவடிக்கையே தரம் பிரித்தலாகும். இத்தரம் பிரித்தலினால்,

- நல்ல பொருட்கள் பழுதடையாது பாதுகாக்கவும்.
- நுகர்வோரின் தேவைகளுக் கேற்ப தரத்திற் கேற்பவும். பொருட்களை வளங்கக் கூடியதாக இருத்தல்.
- விலைகளைப்பேதப்படுத்திக் கொள்ள முடியும். எனும் நன்மைகளைக்காண முடியும்.

## (5) பொதி கட்டல்:-

ஒரேதரம் கொண்ட பொருட்களை அவற்றின் நிலை, விலை என்பன வற்றிற் கேற்ப ஒன்று சேர்ந்து பொதிகளாக அமைக்குமோர் நடவடிக்கையே பொதியிடலாகும். பண்டங்கள் பழுதடையாமல் கொண்டு செல்வதற்கேற்ப தயாரிக்கப் படுதல் பொதியிடலின் நோக்கமாகும். இப்பொதி இடலுக்கு கடதாசி, சாக்கு, போத்தல்கள், மரப் பெட்டிகள், தகரம், பிளாஸ்திக் உறைகள் போன்றன பயன்படுத்தப்படுகின்றன. சிறந்த பொதியிடலினால் கொள்வன வாளர்களை இலகுவில் கவர்ந்து கொள்ளமுடியும். இப் பொதியிடலுக்கு என தேசிய பொதிகட்டும் நிலையம் என்ற ஒன்றை 1985 ம் ஆண்டு ஏற்றுமதி அபிவிருத்திச்சபை உருவாக்கியுள்ளது. பொதிகட்டலுடன் அதன்வடிவமைப்பு சம்மந்தப்படுவதால் தேசியவடிவமைப்பு நிலையம் என்ற ஒன்று இலங்கையில் நிறுவப்பட்டுள்ளது.

## (6) குறியிடல்:-

பொதிகட்டலைத் தொடர்ந்து இடம் பெறும் கருமமே குறியிடலாகும். இக் குறியிடல்வியாபாரக்குறி(Trade Mark) பண்டக்

குறி(Brand Name) என வகைப்படும். வியாபாரக்குறி என்பது நிறுவனம் தனக் கெனக் கொண்டு இருக்கும்ஒருசிறப் பானசின்னத்தை குறிக்கும். இது வியாபாரக்குறி, ஆக்கவுரிமைப் பதிவாளரின் கீழ் பதிவு செய்து கொள்ளப்படும் இக்குறியினை வேறு நிறுவனங்கள் பாவிக்க முடியாது பாவித்தால் தண்டனைக் குறிய குற்றமாகும். இக்குறியானது சட்டப் பாதுகாப்பு பெற்ற குறியீடாகும். மாறாக பண்டக்குறி என்பதோ நிறுவனங்கள் தமது பலவகையான உற்பத்திப் பொருட்களை போட்டியாளர்களின் பொருட்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்கும் நுகர்வோர் இலகுவில் அடையாளம் கண்டு கொள்ளவும் என பண்டங்களில் குறிக்கப்படும் அடையாளம் அல்லது பெயர் அல்லது சின்னம் என்பதனைக் குறிக்கும் இப் பண்டக் குறியானது • பதிவு செய்யப்படத் தேவை இல்லை.

## (7) விலை நிர்ணயித்தல்:-

பொருட்கள் என்ன விலையில் விற்க வேண்டும் எனக் குறிப்பதே இதுவாகும். சந்தையில் விலை குறைவடைந்தால் விற்பனை அதிகரிக்கும், விலை அதிகரித்தால் விற்பனை குறைவடையும் என்பதால் சந்தைப்படுதலில் விலை முக்கியம் பெறுகின்றது. உற்பத்தி நிறுவனங்கள் பல்வேறு பட்ட விலையிடல் முறைகளை பின்பற்றுகின்றன இதன்படி

- கிரையத்துடன் இலாபத்தினை கூட்டி விலையிடல் (Cost Plus Pricing]
- போட்டி விலை இடல் (Comptitive Pricing)
- ஊடுருவல் விலை இடல் (Penetration Pricing)
- கௌரவமான விலை இடல் (Prestige Pricing) என்ற

பல்வேறு விலையிடல்கள் பின்பற்றுகின்றன

## (8) விற்பனை அபிவிருத்தி அல்லது மேம்படுத்தல்.

விற்பனை அபிவிருத்தி அல்லது விற்பனை மேம்படுத்தல் என்பது விற்பனையை அதிகரிக்கச் செய்வதற்காக நிறுவனங்களினால் மேற் கொள்ளப்படும் ஓர் தந்திரோபாயமேயாகும் இது பின்வரும் நான்கு காரணிகளின் சேர்க்கையாகும்.

- விளம்பரம் (Advertising)
- விற்பனை மேம்படுதல் (Sales Promotion)
- பிரச்சாரம் செய்தல் (Publicity)
- நேரடி விற்பனை (Personal selling)

## விளம்பரம் (Advertising)

ஒரு பொருளின் விற்பனையை அதிகரிக்கும் நோக்குடன் பொருட்கள் பற்றி தகவல்களை தொடர்புசாதனங்கள் மூலம் நுகர்வோனுக்கு வளங்கும் ஓர் தொழிற்பாட்டினை விளம்பரம் எனலாம். இதற்கென சுவரொட்டிகள் துண்டுப்பிரசுரங்கள் புதினப் பத்திரிகை சஞ்சிகைகள் வானொலி, தொலைக்காட்சி போன்ற தொடர்புசாதனங்கள் மூலம் மேற் கொள்ளப்படும். நீண்ட காலத்தில் விற்பனையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் மேற் கொள்ளப்படுகின்ற ஒரு விற்பனை அபிவிருத்தி நடவடிக்கையே விளம்பரப்படுதலாம். இதன்படி மக்கள் பொருட்களை நோக்கி நகர்வதாக அமைந்து இருக்கும். இவ் விளம்பரப்படுத்தலானது பொதுவாக நுகர்வுப் பொருட்களுடனையே தொடர்பு படுவதாக அமையும் இவ் விளம்பரப்படுத்தலானது

✣ பொருள் பற்றிய விளம்பரப்படுத்தல்

✣ நிறுவனம் பற்றிய விளம்பரப்படுதல்

✣ ஆலோசனை பற்றிய விளம்பரப்படுதல்

✣ தேவை பற்றிய விளம்பரப்படுதல்

விளம்பரப்படுத்தலில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு புதிய நுட்பமே ''மஞ்சல் பக்கங்களைக் கொண்ட விளம்பரம்'' ஆகும். இதனை இலங்கையில் 'G T E விபரக் கொத்துகள் Limited' என்ற தனியார் கம்பனி மேற் கொண்டு வருகிறது இதைவிட உற்பத்தி வர்த்தக நிறுவனங்களின் விளம்பரங்களை மேற் கொள்ளவென ''விளம்பர முகவர் நிலையங்கள்'' இயங்கி வருகின்றன இவ் விளம்பர முகவர் நிலையங்கள் மூலம் இன் நிறுவனங்கள் திறனான விளம்பரங்களை பெற்றுக் கொள்ள முடிகிறது. இதனை விளம்பர முகவர் நிலையங்கழுக்கு அரசானது ''ஓர் சான்றிதள்'' (O L A) என்ற ஒன்றை வழங்கி வருகிறது விளம்பரமானது தெரிவு செய்யப்படும் போது பொதுவாக பின்வரும் விடையங்கள் கருத்தில் கொள்ளப்படும்.

✣ செலவு

✣ பொருட்களின் தன்மை

✣ நுகர்வோரின் இயல்பு

✣ விளம்பர ஊடக கிடைப்பளவு

✣ சந்தையின் பருமன்

✣ போட்டி நிறுவனங்களின் விளம்பர முறை

## விற்பனை மேம்படுதல் (Sales promotion)

பொருளொன்றிற் கான விற்பனையை குறுகிய காலத்தில் அதிகரிக்கும் பொருட்டு மேற் கொள்ளப்படும் ஓர் தந்திரோபாய நடவடிக்கையே விற்பனை மேம்படுதலாகும். இவ் விற்பனை மேம்படுத்தலானது போட்டிகளை நடாத்தல் வியாபார முத்திரைகள் வழங்குதல் கண்காட்சிகள் நடாத்தல், மாதிரிகளை வழங்கல், நன்கொடைகள் வழங்கல் மலிவுவிற்பனை, காட்சியறை அமைத்தல் எனக் கொள்ளப்படும்.

## பிரச்சனைப் படுத்தல் - (Publicity)

நிறுவனங்கள் பணச் செலவை மேற்கொள்ளாது மேற் கொள்ளப்படும் விற்பனை அபிவிருத்தி நடவடிக்கையே இதுவாகும். இதற்கென பத்திரிகை, சஞ்சிகைகள், வானொலிகள் என்பன வற்றிற்கு கட்டுரை எழுதுதல் செய்திகள் கொடுத்தல் சிறு கதைகள் என்பன பிரசித்தப் படுத்தும் நடவடிக்கையே இதுவாகும்.

## நேரடி விற்பனை:- (Personal Salling)

இம்முறை மூலம் விற்பனையாளர் கொள்வனவாளர் முகத்துக்கு முகமாக பண்டங்கள் விற்பனை செய்வதனைக் குறிக்கும். இங்கு பொருட்கள் பற்றிய மாதிரிகளைக் காட்டவும், அவற்றினைப் பொருத்தி இயக்கிக் காட்டி விற்பனை செய்வதாக அமையும்.

## (9) கொண்டு செல்லல்:-

உற்பத்தி ஓர் இடமாகவும் விற்பனை, நுகர்வு பல்வேறு இடத்திலுநிம் அமைந்து இருப்பதினால் சந்தைப்படுத்தலில் கொண்டு செல்லல்லானது முக்கியம் பெறுகிறது. இக் கொண்டு செல்லலால் மிகைநிரம்பல், குறை நிரம்பல் என்பன வற்றைக் கட்டுப் படுத்தி விலைத் தளம்பலை நீக்குகின்றது. இதற்கெனபேருந்துகள், கப்பல்கள், விமானங்கள்

புகையிரதங்கள் என்பன பயன் படுத்த படுகின்றன.

(10) விற்பனை:-

விற்கப்படும் பொருட்கள் விற்பனையாளரிடம் இருந்து நுகர்வோனுக்கு பொருட்கள் கைமாற்றப்படும் ஓர் கருமமே விற்பனையாகும். இதற்கென நிறுவனங்கள் பல வழிமுறைகளை மேற் கொண்டு வருகின்றன.

- நேரடி விற்பனை.
- அஞ்சல் விற்பனை.
- தன்னியக்க விற்பனை.
- ஏல விற்பனை.
- கேள்வி அல்லது அழிப்பு விற்பனை
- வாடகைக் கொள்வனவு முறை.
- தவணைக் கொள்வனவு முறை.

என்பன சிலவாகும்.

(11) விற்பனையின் பின் சேவை:-

நிறுவனங்கள் பொருட்களின் விற்பனையின் பின் நுகர்வோனுக்கு வழங்கிவரும் சேவைகளையே இது குறிக்கும் இதன்படி பெறுமதி கூடிய பொருள் கொள்வனவு செய்யப்பட்டு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பழுதடையுமாயின் அவற்றைத் திருத்திக் கொடுப்பதோ அல்லது அதற்கு பிரதியீடாக புதிய பொருள்களைக் கொடுப்பதோ இச் செயற்பாடுகளில் ஒன்றாகும். இதனைவிட பொருட்கள் பற்றிய தகவல்களையும் பொருட்களைப் பொருத்திக் கொடுப்பதும் விற்பனையின் பின் சேவைகள் எனப்படும்.

நவநாகரீகத்திற்கேற்ப
ஆடைகள் தைத்துப் பெற்றுக் கொள்ள
உங்களுக்கென்றே

சிற்றிபோய்
ரெயிலர்ஸ்

இல 181 சிவன் பண்ணைவீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

இரண்டு கொள்கைகளுக்கு நடுவே எத்தனை காலங்கள்தான் உன்னால் காத்துநிற்கமுடியும்.

**மத்தியின் வணிகம் சிறக்க நல்வாழ்த்துக்கள்**

- பாடசாலை மாணவர்களிற்கு தேவையறிந்து
- பாடசாலைப் பொருட்களை
- பாடசாலை மாணவர்களுக்கு
- நியாயமான விலையில்
- விற்பனை செய்யும்

# தனித்துவம்வாய்ந்தஒரேஒருநிறுவனம்

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின்**

**பலநோக்குகூட்டுறவுச் சங்கம்** (வரையறுக்கப்பட்டுள்ளது)

நிலைத்து நிற்பதாக நினைப்பவன் கீழேவிழாதபடி கவனமாக இருக்க வேண்டும்


ஓர் அரிய சந்தர்ப்பம்

வைத்திய நிபுணர்கள் ஆலோசனைகளைப்

பெற நாடவேண்டிய இடம்

# சம்பந்தன் மெடிக்கல் கிளினிக்

22, இராமையா செட்டியார் ஒழுங்கை

(சாந்தி தியேட்டர் அருகாமையில்)

யாழ்ப்பாணம்

தேவையறிந்து விற்பனை செய்வதில்
மக்கள் மனதில் என்றும்
நிலைப்பவர்கள்

## மணியம்

வர்த்தக நிலையம்

(பலசரக்கு மாளிகை)

பலாலி வீதி,

திருநெல்வேலிச் சந்தி.

மத்தியத்தின் மத்திய வணிகம்
சிறக்க நல்வாழ்த்துக்கள்

இராசையா

செட்டியார்

அண்கோ

நல்ல புத்தகம் ஒன்றைப்போல் சிறந்த உறவினனும் நண்பனும் இப் பூவுலகில் இல்லை.


- பாடசாலைப் புத்தகங்கள்
- இந்திய வெளியீட்டுப் புத்தகங்கள்
- காகிதாதிகள்
- அலுவலக, பாடசாலை உபகரணங்கள்

இவையாவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

மற்றும்

அச்சக வேலைகளும் உடனுக்குடன்
சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்

**SRI LANKA BOOK DEPOT & PRESS**
**234, K.K.S ROAD,**
**JAFFNA.**

ஸ்ரீலங்கா புத்தகசாலை (அன்) பிரிண்டர்ஸ் நிறுவனத்தினரினால்
இவ் இன்னல்களுக்கு மத்தியிலும் மத்திய வணிகம் இதழை
வெளியிட்டோருக்கு எமது நல்வாழ்த்துக்கள்

மத்தியத்தின் மத்திய வணிகத்திற்கு எமது

நல்வாழ்த்துக்கள்

# கலக்சி புகைப்பட சேவை

337, கஸ்தூரியார் வீதி

யாழ்ப்பாணம்

வாழ்வு தொண்டு செய்ய ஏற்பட்டதே தவிர சுயநலத்திற்காக அல்ல

With the best compliments from:

ERIC GANESH
OPTICIANS

566, Hospital Road
Jaffna.

With the best compliments from:

S. NADARAJAH
& SONS

145, Stanly Road
Jaffna

With the best compliments from:

SRIPATHMANATHA
Stores

General Merchant & Govt Contractor

105, K.K.S ROAD
JAFFNA

With the best compliments from:

GOPAL
JEWELLERS

Duraiappa Pathar Gopalasamy
Jeweller & Gem Merchant

82/5 KASTURIAR ROAD
JAFFNA

# இலங்கையின் அந்நியச் செலாவணிப் பிரச்சினை.

ஒரு நாடு வெளிநாடுகளில் பொருட்களையும், சேவைகளையும் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய சக்தி அல்லது வெளிநாட்டு நாணயமே அந்நியச் செலாவணி எனப்படும். இதனை அந்நாடு பொருட்களையும். சேவைகளையும் ஏற்றுமதி செய்வதன் மூலமும். பிற நாடுகளிலிருந்து கடன் பெறுவதன் மூலமும் பிற நாடுகள் கொடுக்கும் நன்கொடைகள் அல்லது உதவிப் பணங்கள் மூலமும் பெற்றுக் கொள்ளலாம். இது சர்வதேச நாணயங்களான பவுண், டொலர், போன்றனவாக இருக்கும். அந்நியச்செலாவணிப் பிரச்சினை என்று கூறும் போது ஒரு நாடு தனது சுய தேவைகளை பூர்த்தி செய்வதற்கு வேண்டிய பொருட்கள் அல்லது சேவைகளை வெளிநாடுகளில் இருந்து கொள்வனவு செய்வதற்கு வேண்டிய சர்வதேச நாணயங்கள் போதாமையினைக் குறிக்கும்.

## தோற்றம்:

இன்று இலங்கையை எதிர்நோக்கியுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளுள் மிக முக்கியமானதாக உள்ளது. இந்த அந்நிய செலாவணிப் பிரச்சினை ஆகும். இப் பிரச்சினைகள் தோன்றுவதற்கான அடிப்படைக் காரணங்கள் யாவை? இதனை எவ்வாறு தீர்க்கலாம் என்பன போன்றவற்றை இலங்கையில் வாழ்கின்ற மக்கள் ஒவ்வொருவரும் அறிந்திருத்தல் அவசியமாகும். முதலில் இப் பிரச்சினைக்கான காரணங்களை ஆராய வேண்டுமாயின் இலங்கை கடந்து வந்த பொருளாதார பாதையில் சில ஆண்டுகள் பின் நோக்கிச் செல்ல வேண்டும். அதாவது அந்நியர் ஏகாதிபத்தியத்தின் கீழ் இலங்கை அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் அவர்

S. செல்வறமேஷ்
13ம் வருடம்

களது செயல் முறைகளின் தாக்கமே இன்றுள்ள 'அந்நிய செலாவணிப் பிரச்சினை என்றுகூறலாம். ஏனெனில் அந்நியர் ஆட்சியின் கீழ் அவர்கள் இலங்கையின் உணவுப் பயிர்ச்செய்கையைக் கைவிட்டு பெருந்தோட்டப் பயிர்செய்கையில் ஊக்கம் செலுத்தினர். ஆரம்ப காலத்தில் பெருந்தோட்டப் பொருட்களான தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் போன்றவற்றிக்கு உலக சந்தையில் இருந்த விலை இலங்கைக்கு கூடிய அந்நிய செலாவணியை உழைத்துக் கொடுத்தன. இவ்வாறு பெற்ற அந்நிய செலாவணியைக் கொண்டு இலங்கை மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களையும், ஏனைய பொருட்களையும் இறக்குமதி செய்யக் கூடியதாக இருந்தது. ஆனால் கடந்த சில காலமாக இந் நிலைமை மாறி விட்டது. அதாவது அந்நிய செலாவணியில் ஏறத்தாழ 90 சத வீதத்தை உழைத்து தந்த தேயிலை, இறப்பர், தெங்கு பொருட்களுக்கான விலைகள். உலக சந்தையில் வீழ்ச்சியடைந்த அதேநேரம் இலங்கையின் அத்தியாவசியத் தேவையான இறக்குமதி உணவுப் பொருள்களின் விலை ஏற்றமடைந்து காணபட்டது. இவ்வாறாக உலக சந்தையில் ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்களுக்கான விலைகள் நிலையானதாக காணப்படாமையால் அதனை நம்பி உள்ள இலங்கையின் அந்நிய செலாவணி நிலைமை மிகவும் பாதிக்கப்பட்டது.

அந்நிய செலாவணிப் பிரச்சினைக்கான அடுத்தகாரணத்தை நோக்குவோம். இலங்கையானது உழைக்கின்ற சிறு தொகையான அந்நிய செலாவணியைக் கொண்டு அத்தியாவசிய தேவையான உணவு, உடை, போன்ற நுகர்வு பொருட்களையும், நாட்டின் கைத்தொழில் அபிவிருத்திக்கு தேவையான இயந்திரங்கள், உதிரிப்பாகங்கள், மூலப் பொருட்கள். போன்றவற்றையும் இறக்குமதி செய்ய வேண்டி உள்ளது. இவ்வாறு கிடைக்கக் கூடிய அந்நிய செலாவணியைக் கூட நாட்டின் அபிவிருத்திக்கு வேண்டிய இறக்குமதிகளில் செலவிட்டு கைத்தொழில்களை மேற்கொண்டு மேலும் அந்நிய செலாவணி வருமானத்தை உயர்த்த முயற்சிக்காது உணவு, உடை, போன்ற நுகர்ச்சிப் பொருட்களில் கணிசமான அளவு அந்நிய செலாவணியைச் செலவிடுவதும் இப் பிரச்சினை மேலும், மேலும் அதிகரிப்பதற்கு ஒரு காரணமாகும். அன்றியும் உலக சந்தையில் ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்ததைப் போன்று இறக்குமதிப் பொருள்களின் விலைகள் வீழ்ச்சியடையவில்லை பதிலாக இறக்குமதி பொருள்களின் விலைகள் காலத்துக்குக் காலம் ஏறிக் கொண்டே போகின்றன. இவ்வாறு இறக்குமதிப் பொருள்களின் விலை அதிகரிப்பதற்கு அந்த நாடுகளின் உற்பத்தி செலவுகள் அதிகரிப்பதே காரணம் எனலாம். அதிகரிக்கக் காரணமாக அமைந்தன.

## தீர்வு முறைகள்:

இனி இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை ஆராயின் முதலாவதாக இலங்கை தனது ஏற்றுமதி வருவாயைக்கூட்டிக் கொள்வது அவசியமாகும். இலங்கையின் ஏற்றுமதி பொருள்களில் ஒரு பகுதி விவசாயப் பொருள்களானதாலும், விவசாயச பொருள்களுக்கு வானிலை, காலநிலை என்பவற்றால் காலத்துக்கு காலம் பாதிப்பு ஏற்படுவதாலும் இப்பொருள்களுக்கான விலைகளில் உலக சந்தையில் தளம்பல்கள் ஏற்படுவதாலும், இப் பொருள்களை விடுத்து, உலக சந்தையில் மதிப்புமிக்க கறுவா, கராம்பு, ஏலம் போன்ற பொருள்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதன் மூலமும், சிறு சிறு கைத்தொழில்களை ஆரம்பித்து இலங்கையின் மூலப் பொருள்களையே முடிவுப் பொருளாக்கி ஏற்றுமதி செய்வதன் மூலமும் இப் பிரச்

சினையை இலகுவாக தீர்த்து கொள்ள லாம், சுருக்கமாகக் கூறின் ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்த வேண்டும். கைத்தொழிற் பொருட்களை ஏற்றுமதி செய்ய வேண்டும்.

மேலும் இலங்கையைப் போன்ற வளர்முக நாடுகளின் ஏற்றுமதிப் பொருள் களுக்கு உலக சந்தையில் ஏற்படுகின்ற விலைத் தளம்பல்களை நீக்கி ஒரு உறுதி யான விலையை ஏற்படுத்தி கொள்வதற் கான ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் போன்று பொருளாதார கூட்டுக்களை ஏற் படுத்தி கொள்ள வேண்டும். உதாரணமாக வளர்முக நாடுகள் தற்போது ஏற்படுத்தி யுள்ள கூட்டுசேரா நாடுகள், சார்க் அமைப்பு போன்ற அமைப்புக்களை ஸ்திரப்படுத்தி அவற்றிடையே ஒற்றுமையைஏற்படுத்திஉலக சந்தையில் காணப்படுகின்ற நவீன ஏகாதி பத்தியத்தை ஒழிக்க வேண்டும். மேலும் இத்தகைய கூட்டு அமைப்புக்கள் மூலம் தான் வளர்முக நாடுகள் தமது உற்பத்தி பொருள் களைக் கொண்டு உலக நாடுகளின் உற்பத்தி பொருள்களோடு போட்டி போடமுடியும்

இனி இறக்குமதிகளைப் பொறுத்த வரையில் இலங்கையின் அந்நிய செலாவணி யில் பெரும் பகுதி நுகர்வுப் பொருள் இறக்கு மதியிலேயே செலவிடப்படுகின்றது. எனவே நுகர்வுப் பொருள்களின் இறக்குமதியை குறைப்பதற்கான நடவடிக்கைகளில் அரசாங் கமும், மக்களும் ஈடுபட வேண்டும். அதாவது

இலங்கையின் சனத்தொகை வருடா வருடம் அதிகரித்து வருகின்றது. இவ் அதிகரித்து வருகின்ற சனத்தொகைக்கு ஏற்ப உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்காமை யால் நுகர்வுப் பொருள்களின் இறக்குமதி மேலும் அதிகரித்துக் கொண்டு போகின்றது. இலங்கையின் மொத்த இறக்குமதியில் நுகர் வுப் பொருள்கள் 47·/. சத வீதமாகும். இது இச் சனத்தொகை அதிகரிப்பினால் மேலும் அதிகரித்து கொண்டே போகிறது.

எனவே மூலப் பொருள்கள் கைத்தொழிலுக்கு வேண்டிய ஏனைய இயந்திரங்கள். போன்ற வற்றின் இறக்குமதியை இது பாதிப்பதாக உள்ளது. அத்தோடு மூலப்பொருளுக்கான விலையும் உலக சந்தையில் விடம் போல ஏறிக்கொண்டு போவதால் அந்நியச் செலா வணிப் பிரச்சினை மேலும் அதிகரிக்கின்றது

அண்மைக் காலங்களில் இலங்கை வெளிநாடுகளிலிருந்து பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் ஈடுபட்டுள்ளது. இதன் காரணமாக உழைக்கும் அந்நியச் செலாவணியில் 25·/. சத வீதம் செலவா கின்றது. மேலும் உலக நாடுகளில் அடிக்கடி ஏற்படுகின்ற பிரச்சினைகளின் தாக்கங்களும் இலங்கையைப் பாதிக்கின்றது உதாரணமாக உலக சந்தையில் ஏற்பட்ட எண்ணெய்ப் பிரச் சினையும், வானிலை, காலநிலைப் பாதிப்பு களினால் உலக நாடுகளில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியும், இலங்கையின் அந்நிய செலாவணிப் பிரச்சினையில் தாக்கத்தை உண்டு பண்ணுகின்றன. மேலும் நவீன ஏகா திபத்திய நாடுகளின் சுரண்டலும் அவற்றி றகு இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் போட்டி போட முடியாத தன்மையும் இவ் அந்நிய செலாவணிப் பிரச்சினைக்கு இன்னு மொருகாரணமாகும். இவ்வாறாக இலங்கை யின் அந்நிய செலாவணிப் பிரச்சினை தோன்றி வளர்வதற்கான காரங்களை வகுத்துக்கூறலாம்.

1977 ம் ஆண்டு பிற்பாடு இலங்கை பொருளாதாரமானது திறந்த பொருளா தார அமைப்பாக மாற்றப்பட்டமை அந்நிய செலாவணிப் பிரச்சினை மேலும் தீவிரமாகக் காரணமாக அமைந்தது. இறக்குமதி கட்டுப் பாடுகள், தடை நீக்கப்பட்டமையினால் பொருள்களுக்கான இறக்குமதிகள் அதிகரித் தன, இதன் காரணமாக இலங்கையின் அந்நியச் செலாவணிப் பிரச்சினை மேலும் இறக்குமதிப் பதிலீடுகள் உள்நாட்டில் ஆரம்

பிக்கப்பட வேண்டும். தற்போது இலங்கையின் முக்கியமான இறக்குமதிப் பொருளாக உள்ள உணவுப் பொருள்களில் இலங்கை தன்னிறைவு அடைதல் அவசியம். உதாரணமாக இலங்கையின் முக்கிய உணவுப் பொருள்களான தானிய வகைகள், கிழங்கு வகைகள், மிளகாய், வெங்காயம், போன்றவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதால் இப்பொருள்களுக்காகச் செலவிடப்படும் அந்நிய செலாவணியை மீதப்படுத்தலாகும்.

இலங்கையின் கைத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருள்களில் 72 %. சதவீதம் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றது. உலக சந்தையில் இப்பொருள்களின் விலை ஏற்றம் அல்லது அந்நிய செலாவணி பற்றாக் குறை காரணமாக இவ் இறக்குமதியில் தடை ஏற்படும் போது கைத்தொழில்களும் பாதிக்கப்படுகின்றன. எனவே கூடியளவு உள் நாட்டு மூலப்பொருட்களைக் கொண்டே உற்பத்தியை மேற்கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும். இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் ஒரே சமயத்தில் இரு விதமாக அந்நிய செலாவணி மீதப்படுத்தலாம். அதாவது மூலப்பொருள்களின் இறக்குமதியை குறைப்பதால் அந்நிய செலாவணி மீதப்படுத்தப்படுகின்றது. மற்றது உள்நாட்டு மூலப்பொருட்களிலே உற்பத்தி செய்த பொருட்களை ஏற்றுமதி செய்யும் போது அதிலிருந்து கூடுதலான அந்நிய செலாவணியை உழைக்க முடிகிறது இவ்வாறு அந்நிய செலாவணியை சேமிக்கலாம்.

காலத்துக்காலம் ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்களும் அந்நிய செலாவணிப் பிரச்சினையைத் தீர்ப்பதில் பல காலமாக முனைந்து வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும் 1960 ம் ஆண்டில் இருந்து இறக்குமதி கட்டுப்பாடுகளை அரசாங்கம் விதித்துள்ளது. மேலும் 1967 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7 ம் திகதி நாணயப் பெறுமதி இறக்கம் செய்யப்பட்டது. தொடர்ந்து 1968 இல் அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. ஆனால் இந் நடவடிக்கைகளால் அரசாங்கம் எதிர் பார்த்த அளவு பலனைப் பெற முடியவில்லை.

சுருக்கமாகக் கூறுவதானால் இலங்கையின் அந்நிய செலாவணிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உள்நாட்டுப் பொருள்களையும் உள்நாட்டு மூலப்பொருள்களிலிருந்து செய்யப்பட்ட கைத்தொழில் பொருள்களையும் ஏற்றுமதி செய்து இறக்குமதிப் பதிலீடுகளை உள்நாட்டில் உற்பத்தி செய்வதன் மூலமும் அந்நிய செலாவணிப் பிரச்சினையை ஓரளவு தீர்க்கலாம். எனினும் இவற்றை விரைவாகவும், பரந்த அளவிலும், செயல் முறைக்கு கொண்டுவர வேண்டும். அதற்கு இந் நாட்டு மக்களின் ஒத்துழைப்பும் தேசிய உணர்ச்சியும் இன்றியமையாததாகும்.

# சர்வதேச வியாபாரமும் ஒப்பீட்டுச் செலவுக்கோட்பாடும்

ஆ. சௌந்தரலிங்கம்
B / A (Hons) Dip. in. Ed.

## அறிமுகம்:

பொருட்கள் சேவைகளின் பரிமாற்ற மானது நாடுகளுக்கிடையே இடம் பெறும் போது அது சர்வதேச வியாபாரம் என்று அழைக்கப் படுகிறது. சர்வதேச வியாபாரத் திற்கு அடிப்படையாகப் பல காரணிகள் அமைந்து காணப்படுகின்றன.

## அடிப்படையான காரணிகள்:

விலை வேறுபாடுகளே வியாபாரத்திற்கு அடிப்படையாக அமைகின்றன. சர்வதேச ரீதியாகப் பொருட்களின் விலையில் காணப் படும். வேறுபாடுகளே சர்வதேச வியாபாரத் திற்கு அடிப்படையாக அமைகின்றன. இவ் விலை வேறுபாடுகளுக்குக் காரணம் உற்பத் திச் செலவுகள் வேறுபடுவதேயாகும். உற்பத் திச் செலவுகள் நாடுகளிடையே வேறுபடுவ தற்கு அடிப்படையாக அமைந்துள்ள கார ணிகள் பல. இத்தகைய காரணிகளே சர்வ தேச வியாபாரத்திற்கு அடிப்படையாக அமைகின்றன. அத்தகைய காரணிகள் பின் வருமாறு.

### (அ) இயற்கைவள வேறுபாடு

அமெரிக்காவில் இரும்புவளம் அதிகம் சவூதி அரேபியா, ஈரான் போன்ற நாடுகளில் பெற்றோலியவளம் அதிகம் தென்னாபிரிக் காவில் தங்கம் ஏராளம். இவ்வாறு அதிக வளத்தைக் கொண்ட நாடுகளில் அவற்றைப் பயன்படுத்திச் செய்யப்படும் பொருட்கள் மலிவாக இருக்கும். ஏனைய நாடுகளில் செலவு கூடியதாக இருக்கும். எனவே இங்கு மலிவான பொருள் குறிப்பிட்ட அந்த

நாட்டில் அதிகம் உற்பத்தியாகி ஏற்றுமதி யாகிறது சர்வதேச வர்த்தகம் ஏற்படுகிறது.

### ஆ) தட்ப வெப்பநிலை வேறுபாடு.

அநேகமான பண்டங்கள் குறிப்பிட்ட தன்மையுடைய பொருத்தமான காலநிலை யில்தான் உற்பத்தி செய்யப்படமுடியும். பொருத்தமான மண்ணில்தான் உற்பத்தி செய்ய முடியும். றப்பர் மலேசியாவிலும், கோப்பி பிறேசிலிலும், தேயிலை இலங்கை யிலும், உற்பத்தி செய்யப்படுவதற்குப் பொருத்தமான காலநிலை, மண்வளம் என்பன அங்கே காணப்படுகின்றன. ஏனைய நாடுகளில் ஒப்பீட்டுரீதியில் அவை குறை வாக உள்ளன. இந்நிலையில் இப் பொருத் தப்பாட்டினைச் சிறப்பான முறையில் அடையப்பெற்ற நாடுகளில் இப்பொருட்கள் மலிவாகக் காணப்படுகின்றன. இதனால் சர்வதேச வர்த்தகம் ஏற்படுகிறது.

### (இ) பயிற்சி மூலம் அடையப் பெற்ற திறமை:

ஒரு குறிப்பிட்ட பிரதேச மக்கள், குறிப் பிட்ட ஒரு அல்லது சில பொருட்களைத் தரமான முறையில் உற்பத்தி செய்வதற்குச் சில விசேட திறமைகளைப் பெற்றிருக்க லாம். நீண்டகாலப் பயிற்சி, இயல்பான சுறுசுறுப்பு போன்றவை காரணமாக இதனைப் பெற்றிருக்கலாம். ஸ்கொட்லாந்து அயர்லாந்து நாட்டுமக்கள் விஸ்கி போன்ற குடிவகைகளைத் தரமாகத் தயாரிப்பதில் புகழ் பெற்றவர்கள். சுவிஸ் நாட்டுமக்கள் மணிக்கூடு தயாரிப்பதில் திறமை பெற்றவர் கள். இவ்வாறான திறமையினால் ஏனைய நாடுகளை விடக்குறைந்த செலவில் பொருட் களை உற்பத்திசெய்ய அவர்களால் முடியும் இதுவும் சர்வதேச வியாபாரத்திற்கு அடிப் படையாக அமைந்து விடுகிறது.

### (ஈ) போக்குவரத்துச் செலவு வேறுபாடு:

ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்களின் விலைகளைத் தீர்மானிப்பதில் போக்குவரத் துச் செலவுகளும் பங்கெடுக்கின்றன. சில நாடுகளைப் பொறுத்தவரையில் போக்கு வரத்துச் செலவுகள் மலிவாக அமைய சில வற்றில் அதிகமாகக் காணப்படுகின்றன. போக்குவரத்துச் செலவுகள் மலிவாக அமை கின்ற நாடுகளில் ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் மலிவாக அமைந்து விடுகின்றன. அது சர்வதேச வியாபாரத்திற்கு அடிப்படை யாக அமைந்து விடுகிறது.

### (உ) மூலதன வள வேறுபாடு.

சிலநாடுகளில் மூலதனம் அதிக அளவில் திரண்டு காணப்படுகிறது. அங்கெல்லாம் மூலதனமானது மலிவான விலையில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இதன் காரணமாக அங்கு முதற்செறிவு வாய்ந்த உற்பத்திப் பொருட்கள் மலிவானதாகக் காணப்படும். மூலதன வளம் குறைவாக உள்ள நாடுகளில் முதற்செறிவு வாய்ந்த பொருட்கள் கூடிய செலவுடையதாகக் காணப்படும். இங்கு மூலதனவளம் காரண மாக குறைந்த செலவில் உற்பத்தி மேற் கொளப்படுகின்றமை சர்வதேச வியாபாரத் திற்கு அடிப்படையாக அமைந்து விடுகிறது.

இத்தகைய காரணிகளை நாம் நுணுக்க மாகப்பார்க்கும்போது, அவை ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாட்டுடன் தொடர்புபட்ட வையாகக் காணப்படுவதை அவதானிக்க லாம் எந்தப் பொருள் ஒருநாட்டில் குறைந்த உற்பத்திச்செலவுடன் உற்பத்தியாகிறதோ அதை அந்த நாடு அதிகம் உற்பத்திசெய்து ஏற்றுமதி செய்வதையும், உற்பத்திச் செலவு கூடியதாக அமைந்த நாடு அதனை இறக்குமதி

செய்து நுகர்வதனையும் பொதுவாக அவதானிக்கலாம். இந்தக் கருத்தையே அடிப்படையில் வலியுறுத்துவதாக ஒப்பீட்டுச்செலவுக் கோட்பாடு அமைந்து காணப் படுகிறது. அந்த வகையில் சர்வதேச வியா பாரத்திற்கு அடிப்படையான காரணிகள் ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாட்டுடன் தொடர்பு பட்டுள்ளதை நாம் காணலாம்.

## ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாடு:

சர்வதேச வியாபாரத்தின் தோற்றம் பற்றிப் பல்வேறு கோட்பாடுகள் எழுந் துள்ளன. அவற்றுள் முக்கியத்துவம் வாய்ந் தது இந்த ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாடு. பழம் பொருளியலாளராகிய டேவிட் றிக்காடோ என்பவரால் வெளியிடப்பட்டது இது இவருக்குப் பின்வந்த பல அறிஞர்களின் கோட்பாடுகளுக்கு அடிப்படையாக விளங் கியது என்றவகையில் இவரது கோட்பாடு சிறப்பினைப் பெறுகின்றது. ஒப்பீட்டுநயக் கோட்பாடு என்றும் இதனை அழைப்பர்.

றிக்காடோவின் கருத்துப்படி ஒப்பீட்டுச் செலவு குறைவாக உள்ள பொருளை, அதாவது ஒப்பீட்டுநயம் அதிகமாக உள்ள பொருளை உற்பத்தி செய்து அதில் சிறப்புத் தேர்ச்சியினைப் பெற்று வர்த்தகத்தில் ஈடுபடுகின்றபோது நாடுகள் நன்மை பெறு கின்றன. எனவே ஒரு நாடாது ஒப்பீட்டுச் செலவு குறைவாக உள்ள பொருளை ஏற்றுமதி செய்ய வேண்டும். மாறாக ஒப்பீட்டுச் செலவு கூடிய பொருளை வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டும். இங்கு செலவு என்பது நாடுகளில் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்படும் செலவினைக் குறிக்கின்றது. இந்த உற்பத்திச் செலவுகள் நாடுகளிடையே ஒப்பிட்டு நோக்கப்படுவதால். ஒப்பீட்டுச் செலவு என்று அழைக்கப்படுகிறது. நாடு களிடையே உற்பத்திச் செலவுகளை ஒப்பிட்டு நோக்கியே தன்னுடைய கோட்பாட்டை றிக்காடோ விளக்கியதால் அது ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாடாகியது. எனவே ஒரு நாடானது ஒப்பீட்டுரீதியில் உற்பத்திச் செலவானது எப்பொருளுக்குக் குறைவாக உள்ளதோ அந்த உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி பெற்று அதனை ஏற்றுமதி செய்ய வேண்டும். மாறாக ஒப்பீட்டுரீதியில் உற்பத்திச் செலவு கூடுதலாகக் காணப்படும் பொருட்களைத் தான் உற்பத்தி செய்யாது இறக்குமதி செய்து கொள்ள வேண்டும்.

## றிக்காடோவின் உதாரண விளக்கம்

ஒப்பீட்டுச் செலவை எப்படி மதிப்பீடு செய்வது? அது கூடுதலாக உள்ளதா, குறை வாக உள்ளதா என்பதை எப்படிக் கணிப்பது றிக்காடோவின் பிரபலமான கீழ் காணும் உதாரணத்தை எடுத்து நோக்குவோம்.

போத்துக்கல் 1 அலகு வைன் உற்பத்தி செய்ய 80 அலகு உழைப்பைப் பயன்படுத்து கிறது. ஆனால் இங்கிலாந்துக்கு 1 அலகு வைனை உற்பத்தி செய்ய 120 அலகு உழைப் புத் தேவை. அதேபோல 1 அலகு துணி யினை உற்பத்தி செய்ய போர்த்துக்கலில் 90 அலகு உழைப்புத்தேவை. ஆனால் இங்கி லாந்திலோ அதற்கு 100 அலகு உழைப்புத் தேவை. இங்கு இரண்டு பொருட்களை

| நாடுகள் | 1 அலகுவைன் | 1 அலகு துணி |
|---|---|---|
| போர்த்துக்கல் | 80 அலகு உழைப்பு | 90 அலகு உழைப்பு |
| இங்கிலாந்து | 120 அலகு உழைப்பு | 100 அலகு உழைப்பு |

எடுத்துக் கொண்டாலும் போர்த்துக்கலைப் பொறுத்தவரையில் உற்பத்திச்செலவானது குறைவாகவே காணப்படுகிறது. இதனை அடம்சிமித்முழுநயம் என்று கூறியுள்ளார். ஆனால் இதிலிருந்து மேம்பட்ட ஒரு விளக்கமே ஒப்பீட்டு நயம் ஆகும். இங்கு றிக்காடோ ஒரு ஒப்பீட்டை மேற்கொள்கிறார். போர்த்துக்கல் இங்கிலாந்துக்கு 1 அலகு வைனை வழங்கி அங்கிருந்து 1 அலகு துணியைப் பெற்றுக் கொள்கிறது என எடுத்துத் தனது கோட்பாட்டை நிறுவுகிறார். உள் நாட்டில் 1 அலகு வைனை உற்பத்தி செய்ய வேண்டுமாயின் இங்கிலாந்துக்கு 120 அலகு உழைப்புத் தேவை. ஆனால் 100 அலகு உழைப்பைச் செலுத்தி உற்பத்தி செய்த துணியைப் போர்த்துக்கலுக்கு வழங்கி அங்கிருந்து 1 அலகு வைனை இறக்குமதி செய்யும் போது அதற்கு (120 - 100) 20 அலகு உழைப்பு சேமிக்கப்படுகிறது.

இதே போல 1 அலகு துணியைப்போத்ர் துக்கலில் உற்பத்தி செய்ய 90 அலகு உழைப்பு தேவை. ஆனால் 80 அலகு உழைப்புத் தேவைப்படும் 1 அலகு வைனை இங்கிலாந்துக்கு அனுப்பி அங்கிருந்து 1 அலகு துணியை அதற்கு மாறாகப் பெறும்போது (90 - 80) 10 அலகு உழைப்பு மீதப்படுத்தப்படுகிறது எனவே இங்கு இரண்டு நாடுகளும் நன்மையடைகின்றன. இங்கு தனியாகப் பார்க்கும் போது போர்த்துக்கலுக்கு இரண்டு பொருட்களிலும் முழு நன்மை இருந்தாலும் ஒப்பீட்டுச்செலவு என்று பார்க்கும் போது போர்த்துக்கலுக்கு வைனிலும், இங்கிலாந்துக்குத் துணியிலும் அது குறைவாக உள்ளது. எனவே போர்த்துக்கல் வைன் உற்பத்தியிலும் இங்கிலாந்து துணி உற்பத்தியிலும் சிறப்புத் தேர்ச்சி பெறவேண்டும். போர்த்துக்கல வைனை ஏற்றுமதி செய்து இங்கிலாந்திலிருந்து துணியை இறக்குமதி செய்ய வேண்டும். இது இரு நாடுகளுக்கும் நன்மையைக் கொடுக்கும் என றிக்காடோ விளக்கினார்.

விமர்சனங்கள்

ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலமாக அதிக செல்வாக்கும் பெற்று விளங்கிய போதும் இவரது கோட்பாடு மற்றைய அறிஞர்களின் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியது. இரண்டு பண்டங்கள், இரண்டு நாடுகள் உழைப்புமட்டுமே உற்பத்திக்காரணி நாடுகளிடையே போக்குவரத்துச் செலவுகள் இல்லை. தொழிலாளர் இடப்பெயர்ச்சி நாட்டுக்குநாடு இல்லை கட்டற்ற வர்த்தகம் காணப்படுகிறது. நிறைதொழில் மட்டநிலைமைபோன்ற எடுகோள்கள் நடைமுறைக்குப் பொருந்தாதவையாகக் காணப்பட்டமை குறைபாடுகளாகச் சுட்டிக் காட்டப்பட்டன. முக்கியமாக உழைப்பை மாத்திரமே உற்பத்திக் காரணியாக எடுத்துக் கொண்டு பொருளின் பெறுமதி விளக்கப்பட்டிருந்தமை குறைபாடாகச் சுட்டிக்காட்டப் பட்டிருந்தது ஆனாலும் அவரது கோட்பாட்டின் அடிப்படைக் கருத்தை யாராலும் மாற்ற முடியவில்லை. ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாட்டை அடியொற்றிப் பல புதிய கோட்பாடுகள் எழுந்தன.

பணரீதியான விளக்கம்:

றிக்காடோவின் ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாடு ஒரு மெய்ரீதியான விளக்கமாகக் காணப்படுகிறது. மாணவர்கள் இலகுவாகப் புரிந்து கொள்ளும் வகையில் அண்மைக் காலத்தில் இக்கோட்பாடு பணப்பெறுமதியில் மிக எளிமையாக விளக்கப்பட்டுள்ளது.

அடுத்தபட்டியலின்படி 1 அலகு உணவினைஉற்பத்திசெய்ய அமெரிக்காவில் 12 அமெரிக்க டொலர் தேவைப்பட பிரிட்டனில் அதற்கு 24 அமெரிக்க டொலர் தேவைப்படுகிறது. 1 அலகு உடையினை உற்பத்தி

| | அமெரிக்கா | பிரிட்டன் |
|---|---|---|
| உணவு (1 அலகு) | 12 டொலர் | 24 டொலர் |
| உடை (1 அலகு) | 6 டொலர் | 4 டொலர் |

செய்ய அமெரிக்காவிற்கு 6 டொலர் தேவைப்பட பிரிட்டனுக்கு அதற்கு 4 டொலர் தேவைப்படுகிறது. எனவே இங்கு ஒப்பீட்டுரீதியாகப் பார்க்கும் போது உணவு உற்பத்தியில் அமெரிக்காவும், உடை உற்பத்தியில் பிரிட்டனும் சிறப்புத் தேர்ச்சி பெற்று அவற்றை உற்பத்தி செய்துகொண்டு தமக்கு மேலதிகமாக உள்ளதை ஏற்றுமதி செய்வது இரண்டு நாடுகளுக்கும் நன்மை பயக்கும். அமெரிக்காவானது உடை உற்பத்தியை நிறுத்தி, உணவைமட்டும் உற்பத்தி செய்து தேவையான உடையை பிரிட்டனிடமிருந்து இறக்குமதி செய்யவேண்டும். அதே போல பிரிட்டனும் உணவு உற்பத்தியை நிறுத்தி உடையை மட்டும் உற்பத்தி செய்து கொண்டு, தேவையான உணவை அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டும். பிரிட்டன் உள்நாட்டில் 1 அலகு உணவை உற்பத்தி செய்ய 24 டொலரைச் செலவழிக்க வேண்டும். ஆனால் அமெரிக்காவிடம் இருந்து அதனை இறக்குமதி செய்தால், 12 டொலர் மாத்திரம் செலவிட வேண்டும். இங்கு 1 அலகு உணவில் 12 டொலர்களை பிரிட்டன் சேமிக்கலாம்.

அதேபோல உள்நாட்டில் 6 டொலர் செலவு பிடிக்கும் 1 அலகு உடையை, அமெரிக்கா பிரிட்டனிடமிருந்து 4 டொலருக்கே வாங்கக்கூடியதாக இருப்பதினால் ஒவ்வொரு அலகு உடைக்கும் அமெரிக்காவுக்கு இரண்டு டொலர் மீதமாகிறது. இரண்டுநாடுகளும் நன்மை பெறுகின்றன. இவ்வாறு உற்பத்திச் செலவுகள் ஒப்பிடப்பட்டு சர்வதேச வியாபாரம் நடைபெறுகிறது.

இரண்டு நாடுகள் காணப்படுகின்றன. இரண்டு பண்டங்களே உள்ளன, நாணயமாற்றுவீதம் இரு நாடுகளுக்குமிடையே மாறவில்லை, கூலிமட்டங்கள் மாறவில்லை போன்ற எடுகோள்களின் அடிப்படையில் பணப்பெறுமதியில் ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாட்டினை இவ்வாறு விளக்கலாம். பல பண்டங்களைக் கருத்தில் எடுத்தும் இது விளக்கப்படலாம்.

இவ்வாறுபணப்பெறுமதியில்ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாடு விளக்கப்பட்ட போதும் இதன் அடிப்படைக் கருத்து றிக்காடோவினுடையது என்பதை யாரும் மறுக்க முடியாது.

---

**உலகத்திலேயே பழமையான மேளம்**

14 அடி நீளம் இரண்டு தொன்நிறை

யப்பானில் இருக்கிறது

600 வருடங்கள் பழமையானது

# வாடகை கொள்வனவு

கு. ஸ்ரீஸ்கந்தகுமார்
B. Com (Hons)

வியாபார நிறுவனங்கள் விற்பனையை அதிகரிப்பதற்காக கையாளும் வியாபார தந்திரோபாயங்களில் ஒன்றாக வாடகை கொள்வனவு விற்பனை முறையானது காணப்படுகின்றது. இம் முறையில் பொருட்கள் விற்கப்படும் போது அப்பொருட்களுக்கான கொடுப்பனவினை வாங்குபவர் முழுமையாக உடனடியாக செலுத்திவிட வேண்டிய அவசியமில்லை. அக் கொடுப்பனவை பகுதியாக பிரித்து குறிக்கப்பட்ட தவணைகளில் கட்டி முடிக்க கூடியதாக இருக்கும். எனவே இம் முறையில் பொருட்களை வாங்க விரும்பும் ஒருவர் வாடகை கொள்வனவு முறையில் விற்பனை செய்யின் குறிக்கப்பட்ட நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றினை கைச்சாத்திடப்படல் வேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் போதே குறிக்கப்பட்ட அளவு தொகை பணம் செலுத்தப்படல் வேண்டும். பின்னர் குறிக்கப்பட்ட தவணைகளில் பணத்தை கட்டி இறுதி தவணைக் கட்டணம் செலுத்தப்பட்ட பின்பு வாங்குபவர் சொத்தின் உரிமையினை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். தவணைக் கட்டணம் செலுத்தாமல் விடும் சந்தர்ப்பத்தில் பொருளானது பறிமுதல் செய்யப்படும். இவ்வாறு பொருள் பறிமுதல் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் இதுவரை காலமும் கட்டிய பணமானது மீளப் பெற முடியாது எனவே தான் இம்முறையில் நிலையான சொத்துக்களையே நிறுவனங்கள் விற்பனை செய்வதனை காணமுடிகின்றது.

வாடகை கொள்வனவு முறையில் ஒரு பொருளின் விலையானது சாதாரண விற்பனை முறையில் இருந்து வேறுபட்ட முறையிலேயே தீர்மானிக்கப்படுகிறது.

(1)சாதாரண ஒரு பொருளின் விற்பனை விலையானது பொருளின் கொள்விலையுடன் இலாபத்தினை சேர்த்து தீர்மானிக்கப்படுகிறது.

உதாரணம் (1)

| | |
|---|---|
| ஒரு பொருளின் கொள்விலை | ரூ 50 000 |
| இலாபம் 20% | ரூ 10 000 |
| காசு விலை | 60 000 |

(ii) வாடகை கொள்வனவு முறையில் விற்பனை விலையானது பின்வருமாறு தீர்மானிக்கப்படும்.

அதாவது காசுவிலையுடன் வாடகை கொள்வனவு தொடர்பான வட்டி கூட்டப்பட்டு வாடகை கொள்வனவு விற்பனை விலை தீர்மானிக்கப் படுகிறது.

வாடகை கொள்வனவு விற்பனை விலை பின்வருமாறு தீர்மானிக்கப் படுகிறது.

உதாரணம் 1 ன் படி

| | | |
|---|---|---|
| கொள்விலை | ரூ | 50 000 |
| இலாபம் | ரூ | 10 000 |
| காசுவிலை | | 60 000 |
| + வாடகை கொள்வனவு வட்டி | | 15 000 |
| வாடகை கொள்வனவு விற்பனைவிலை | | 75 000 |

அல்லது

வாடகை கொள்வனவு விற்பனை விலையினை பின்வருமாறும் கணிக்கலாம்.

உதாரணம் 1 ன் படி

| | | |
|---|---|---|
| காசுவிலை | ரூ | 60 000 |
| + வாடகை கொள்வனவு வட்டி | ரூ | 15 000 |
| வாடகை கொள்வனவு விற்பனைவிலை | | 75 000 |

வாடகை கொள்வனவு முறையில் பொருட்களை வாங்கும் ஒருவர் வாடகை கொள்வனவு விற்பனை விலையினை பின்வருமாறு செலுத்துகிறார்

ஆரம்ப கட்டுப்பணமாக 15000 ரூபாவும் மிகுதி நான்கு (4) தவணைக்கட்டணங்களில் செலுத்தப்பட வேண்டு மெனின் அதனை அவர் பின்வருமாறு செலுத்தி கொள்வார்.

| | |
|---|---|
| ஆரம்ப கட்டுபணம் | ரூ 15 000 |
| 1 ம் தவணை கட்டணம் | ரூ 15 000 |
| 2 ம் தவணை கட்டணம் | ரூ 15 000 |
| 3 ம் தவணை கட்டணம் | ரூ 15000 |
| 4 ம் தவணை கட்டணம் | ரூ 15 000 |
| | 75 000 |

## வாடகை கொள்வனவு முறைக்கான கணக்கீட்டு பதிவுகள்

வாடகை கொள்வனவு முறையில் விற்பனை செய்யப்படும் பொருளானது முழுக்கட்டுப் பணத்தை செலுத்திய பின்பே வாங்குபவனுக்கு உரிமையாகும் என்றபடியால் வாங்குபவன் சொத்தின் கிரயம் தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளவோ விற்போன் இது தொடர்பான இலாபத்தை கணிப்பிடுவதற்கோ சட்டரீதியாக முடியாது. எனினும் கணக்கியலானது.

கொடுக்கல் வாங்கலின் சட்டத்தினைவிட சாரத்தையே முக்கியமாக கொள்வதனால் வாங்குபவன் சொத்தை வாங்கும் பொழுதே அதை சொத்தாக கருதியும் விற்போன் அக்காலப் பகுதிக்குறிய இலாபத்தினையும் கண்டறியக்கூடியதாக இருக்கும்.

## (1) வாங்குபவன் ஏடு

முறை 1

(i) சொத்தை வாங்குபவன் ஒப்பந்தம் செய்து குறிக்கப்பட்ட சொத்தினை பெற்றுக் கொள்ளும் போது அச்சொத்தினது காசுவிலைக்கு பின்வருமாறு பதிவிடப் படல்வேண்டும்.

| | | |
|---|---|---|
| குறிக்கப்பட்ட சொத்துக் கணக்கு | வரவு | |
| வாடகை கொள்வனவு கடன் கொடுத்தோன் கணக்கு | | செலவு |

(ii) ஒப்பந்தத்தின் போது ஆரம்ப கட்டுப்பணம் தவணைக் கட்டுப்பணம் செலுத்தப்படும் போது

| | | |
|---|---|---|
| வாடகை கொள்வனவு கடன் கொடுத்தோன் கணக்கு | வரவு | |
| காசு அல்லது வங்கிக் கணக்கு | | செலவு |

(iii) குறிக்கப்பட்ட காலத்திற் கொருமுறை வட்டி செலுத்தப்படும் போது

| | | |
|---|---|---|
| கொடுத்த வட்டிக் கணக்கு | வரவு | |
| வாடகை கொள்வனவு கடன் கொடுத்தோன் கணக்கு | | செலவு |

(iv) நிறுவனத்தின் நிதியாண்டு முடிவடைந்த தினத்தில் ஐந்தொகை தயாரிக்கபடும் போது குறிக்கப்பட்ட சொத்துக் கணக்கு மீதிலிருந்து வாடகை கொள்வனவு கடன் கொடுத்தோன் கணக்குமீதி கழித்து காட்டபடும்.

(v) சொத்தினது கொள் விலைக்கு வருடாவருடம் தேய்மானம் கணிக்கபடுதல் வேண்டும்.

உதாரணம் 1

வரையறுக்கப்பட்ட VS கம்பனியிடமிருந்து உளவு இயந்திரம் ஒன்றை சுஜாதா என்பவர் 1 - 1 - 89 ல் கொள்வனவு செய்திருந்தார் இதன் வாடகை கொள்வனவு விற்பனை விலை 244400/= ஆகும் இதன் காசுவிலை 240000/= ஆகும். ஆரம்ப கட்டுப்பணமாக 80000/= வும் அதற்கு பின்னர் 31 - 12 - 89 ல் 88000/= வும் 31 - 12 - 90 ல் 88000/= வும் 31 - 12 - 91 ல்88400 ரூபாவுமாக கட்டி முடிக்கபடும். ஆண்டுக்குரிய வட்டி வீதம் 30 வீதமாகும். ஒவ்வோர் ஆண்டுமுடிவிலும் 10 வீதம் தேய்மானம் இடப்படல் வேண்டும். தயாரிக்குக

கொள்வனவாளன் ஏட்டில் பேரேட்டுகணக்குகளை தயாரிக்குக

### இயந்திரக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 1- 1- 89 க/ கொ | 240000 | மீ/ கீ/ செ | 240000 |
| 1- 1- 90 மீ/ வ | 240000 | மீ/ கீ/ செ | 240000 |
| 1- 1- 91 மீ/ வ | 240000 | மீ/ கீ/ செ | 240000 |
| 1- 1- 92 மீ/ வ | 240000 | | |

### வாடகை கொள்வனவு கடன் கொடுத்தோன் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 1 - 1 - 89 காசு | 80000 | 1 - 1 - 89 இயந்திரம் | 240000 |
| 31 - 12 - 89 காசு | 88000 | 31 - 12 - 89 வட்டி | 48000 |
| மீ/ கீ/ செ | 120000 | | |
| | 288000 | | 288000 |
| 31 - 12 - 90 காசு | 88000 | 1 - 1 - 90 மீ/ கீ/ வ | 120000 |
| மீ/ கீ/ செ | 68000 | 31 - 12 - 90 வட்டி | 36000 |
| | 156000 | | 156000 |
| காசு | 88400 | 1 - 1 - 91 மீ/ கீ/ வ | 68000 |
| | | 31 - 12 - 91 வட்டி | 20400 |
| | 88400 | | 88400 |

### கொடுத்த வட்டிக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 31- 12- 89 க/ கொ | 48000 | இ/ லா | 48000 |
| 31- 12- 90 க/ கொ | 36000 | இ/ லா | 36000 |
| 31- 12- 91 க/ கொ | 20400 | இ/ லா | 20400 |

## பெறுமான தேய்வு ஏற்பாட்டு கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ/ கீ/ செ | 24000 | 31- 12- 89 பெறுமானதேய்வு | 24000 |
| | | 1- 1- 90 மீ/ கீ/ வ | 24000 |
| மீ/ கீ/ செ | 48000 | 31- 12- 90 பெறுமானதேய்வு | 24000 |
| | 48000 | | 48000 |
| மீ/ கீ/ செ | 72000 | 1- 1- 91 மீ/ கீ/ வ | 48000 |
| | | 31- 12- 91 பெறுமானதேய்வு | 24000 |
| | 72000 | | 72000 |
| | | 1- 1- 92 மீ/ கீ/ வ | 72000 |

முறை (2)

(i) சொத்துகளை கொள்வனவு செய்யும் போது

| | | | |
|---|---|---|---|
| • காசு விற்பனை விலைக்கு | சொத்துக்கணக்கு | வரவு | |
| மொத்த வட்டிக்கு | வட்டிதொங்கல் கணக்கு | வரவு | |
| வாடகை கொள்வனவு விற்பனை விலைக்கு | | | |
| வாடகை கொள்வனவு கடன் கொடுத்தோன் கணக்கு | | | செலவு |

(ii) ஆரம்ப வைப்பு பணம் தவணைக்கட்டணம் செலுத்தப்படும் போது

| | | |
|---|---|---|
| கடன் கொடுத்தோன் கணக்கு | வரவு | |
| காசு அல்லது வங்கிக்கணக்கு | | செலவு |

(iii) ஒவ்வோர் ஆண்டுக்குரிய வட்டித்தொகைக்கு

| | | |
|---|---|---|
| கொடுத்த வட்டிக்கணக்கு | வரவு | |
| வட்டி தொங்கல் கணக்கு | | செலவு |

(vi) ஐந்தொகை தயாரிக்கபடும் போது வாடகை கொள்வனவு கடன் கொடுத்தோன் கணக்கு மீதியிலிருந்து வட்டி தொங்கல் கணக்கினை கழித்து வரும் தேறிய தொகை சொத்துக் கணக்குமீதியிலிருந்து கழிக்கபடும்.

உதாரணம் 1 ன் படி

இம் முறையில் கணக்குகள் தயார் செய்யப்படும் போது பேரேட்டுக்கணக்குகள் பின்வருமாறு அமையும்.

## இயந்திரக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 1-1-89 க/கொ | 240000 | மீ/கீ/செ | 240000 |
| 1-1-90 மீ/கீ/வ | 240000 | மீ/கீ/செ | 240000 |
| 1-1-91 மீ/கீ/வ | 240000 | மீ/கீ/செ | 240000 |
| 1-1-92 மீ/கீ/வ | 240000 | | |

## வாடகை கொள்வனவு கடன் கொடுத்தோன் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 1-1-89 காசு | 80000 | 1-1-89 இயந்திரம் | 240000 |
| 31-12-89 | 88000 | வட்டி | 104400 |
| மீ/கீ/செ | 176400 | | |
| | 344400 | | 344400 |
| | | 1-1-90 மீ/கீ/வ | 176400 |
| 31-12-90 காசு | 88000 | | |
| மீ/கீ/செ | 88400 | | |
| | 176400 | | 176400 |
| 31-12-91 காசு | 88400 | 1-1-91 மீ/கீ/வ | 88400 |
| | 88400 | | 88400 |

## கொடுத்த வட்டிக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 31-12-89 வட்டிதொங்கல் | 48000 | இ/மா | 48000 |
| 31-12-90 வட்டிதொங்கல் | 36000 | இ/மா | 36000 |
| 31-12-91 வட்டிதொங்கல் | 20400 | இ/மா | 20400 |

## வட்டித் தொங்கல் கணக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 - 1 - 89 | கடன் கொடுத்தோன் | 104400 | 31 - 12 - 89 | கொடுத்தவட்டி | 48000 |
| | | | | மீ/ கீ/ செ | 56400 |
| | | 104400 | | | 104400 |
| 1 - 1 - 90 | மீ/ கீ/ வ | 56400 | 31 - 12 - 90 | கொடுத்தவட்டி | 36000 |
| | | | | மீ/ கீ/ செ | 20400 |
| | | 56400 | | | 56400 |
| 1 - 1 - 91 | மீ/ கீ/ வ | 20400 | 31 - 12 - 91 | கொடுத்தவட்டி | 20400 |

## வட்டிக்கணிப்பீடு பின்வருமாறு

| | | வட்டி |
|---|---|---|
| காசுவிலை | 240000 | |
| ஆரம்பகட்டுப்பணம் | (80000) | |
| | 160000 | |
| 30 வீதவட்டி | 48000 | 48000 |
| | 208000 | |
| தவணைக்கட்டணம் | (88000) | |
| | 120000 | |
| 30 வீதவட்டி | 36000 | 36000 |
| | 156000 | |
| தவணைக்கட்டணம் | (88000) | |
| | 68000 | |
| 30 வீதவட்டி | 20400 | 20400 |
| | 88400 | 104400 |

விற்பனையாளன் ஏடு

இவ் ஏட்டில் இரண்டு முறைகள் பின்பற்றபடுகின்றது

முறை (1)
வாடகை கொள்வனவு வட்டியினை வேறுபடுத்தி பதிவுசெய்தல்

முறை (2)
வாடகை கொள்வனவு வட்டியினை வேறுபடுத்தாமல் பதிவு செய்தல்

முறை (1)

இதில் இரண்டு முறைகள் பின்பற்ற படுகின்றன

அ) (i) விற்பனை செய்யப்படும் பொருளின காசுவிலைக்கு

வாடகை கொள்வனவு கடன்பட்டோன் கணக்கு — வரவு
வாடகை கொள்வனவு விற்பனைக் கணக்கு — செலவு

(ii) ஆரம்ப கட்டுப்பணம் தவணைப்பணம் பெறப்படும் போது

காசு அல்லது வங்கி கணக்கு — வரவு
வாடகை கொள்வனவு கடன் பட்டோன் கணக்கு — செலவு

(iii) தவணைக் கட்டணத்தின் பேரில் வருமதியாக உள்ள வட்டித் தொகைக்கு

வாடகை கொள்வனவுகடன் பட்டோன்கணக்கு — வரவு
பெற்றவட்டிக் கணக்கு — செலவு

(vi) ஒவ்வொரு கணக்கீட்டு காலப்பகுதியிலும் வாடகை கொள்வனவு கடன்பட்டோன் கணக்கு வரவேண்டியுள்ள தொகையில் உள்ளடங்கியிருக்கும். தேறாத இலாபத்தினை கணிப்பிட்டு தேறாத இலாப ஏற்பாட்டுகணக்கிற்குமாற்றப்படுதல் வேண்டும்.

வாடகைக்கொள்வனவு வியாபாரக்கணக்கு — வரவு
தேறாத இலாப ஏற்பாட்டுக்கணக்கு — செலவு

(V) நிதியாண்டு காலப்பகுதி முடிவில் வாடகைக் கொள்வனவு விற்பனைக் கணக்கு மீதி வாடகைக் கொள்வனவு வியாபாரக் கணக்கிற்கு மாற்றப் படும்

(Vi) நிதியாண்டு காலமுடிவில் பெற்றவட்டி மீதிவாடகை கொள்வனவு வியாபாரத் திற்கு மாற்றப்படும்

(Vii) வாடகைக் கொள்வனவு முறையில் விற்பனை செய்யப்பட்ட பொருளின் கிரயம் நிறுவனத்தினது பொது வியாபாரக் கணக்கில் இருந்து வாடகைக் கொள்வனவுவியாபாரக் கணக்கிற்கு மாற்றப்படுதல் வேண்டும்.

வாடகைக் கொள்வனவு வியாபாரக் கணக்கு — வரவு
பொது வியாபாரக் கணக்கு — செலவு

உதாரணம் (1)

வரையறுக்கப்பட்ட **ரேக்கா** கம்பனி 1989 ல் ஜனவரி 1 ம் திகதியன்று 40000/=

கொள்விலையுடைய இயந்திரம் ஒன்றை 86100/= விலையில் வாடகைக் கொள்வனவு அடிப்படையில் ராஜ் என்பவருக்கு விற்பனை செய்தார். இதில் அடங்கியுள்ள மொத்தவட்டி 26100/= ஆகும். ஆரம்பக் கட்டுப்பணமாக 20000/= வும் மிகுதி ஒவ்வொன்றும் 1989, 90, 91 வருட முடிவில் முறையே 22000, 22000, 22100 என மூன்று தவணைக்கட்டணங்களில் செலுத்தி முடிக்கப்படும். ஆண்டுக்குரிய வட்டி வீதம் 30 வீதம் ஆகும்.

## வாடகைக் கொள்வனவு கடன்பட்டோன் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 1 - 1 - 88 விற்பனை | 60000 | 1 - 1 - 88 காசு | 20000 |
| 31 - 12 - 88 பெற்றவட்டி | 12000 | 31 - 12 - 88 காசு | 22000 |
| | | மீதி/ கீ/ செ | 30000 |
| | 72000 | | 72000 |
| மீதி/ கீ/ வ | 30000 | 31 - 12 - 89 காசு | 22000 |
| 31 - 12 - 89 பெற்றவட்டி | 9000 | மீதி/ கீ/ செ | 17000 |
| | 39000 | | 39000 |
| 1 - 1 - 90 மீதி/ கீ/வ | 17000 | 31 - 12 - 90 காசு | 22100 |
| 31 - 12 - 90 பெற்றவட்டி | 5100 | | |
| | 22100 | | 22100 |

## வாடகைக் கொள்வனவு விற்பனைக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| வியாபாரக்கணக்கிற்கு மாற்றம் | 60000 | 1 - 1 - 89 வாடகைக் கொள்வனவு கடன் பட்டோன் | 60000 |

## பெற்ற வட்டிக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| வியாபாரக்கணக்கிற்கு மாற்றம் | 12000 | 31 - 12 - 88 கடன் பட்டோன் | 12000 |
| வியாபாரக்கணக்கிற்கு மாற்றம் | 9000 | 31 - 12 - 89 கடன் பட்டோன் | 9000 |
| வியாபாரக்கணக்கிற்கு மாற்றம் | 5100 | 31 - 12 - 90 கடன் பட்டோன் | 5100 |

31 - 12 - 89 ல் முடிவடைந்த ஆண்டுக்கான
வாடகைக் கொள்வனவு வியாபாரக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| பொதுவியாபாரக் கணக்கு | | | |
| கொள்விலை | 40000 | விற்பனைகணக்கு | 60000 |
| | | பெற்றவட்டி | 12000 |
| தேறாத இலாபம் | 10000 | | |
| மொத்தலாபம் | 22000 | | |
| | 72000 | | 72000 |

31 - 12 - 89 ல் முடிவடைந்த ஆண்டுக்கான
வாடகைக் கொள்வனவு வியாபாரக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| | | பெற்றவட்டி | 9000 |
| மொத்தலாபம் | 13334 | தேறாத இலாபஏற்பாடு | 4334 |
| | 13334 | | 13334 |

31 - 12 - 90 ல் முடிவடைந்த ஆண்டிக்கான
வாடகைக் கொள்வனவு வியாபாரக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மொத்தலாபம் | 10766 | பெற்றவட்டி | 5100 |
| | | தேறாத இலாபஏற்பாடு | 5666 |
| | 10766 | | 10766 |

## தேறாத இலாபஏற்பாடு

| | | | |
|---|---|---|---|
| மீ/ கீ/ செ | 10000 | 31 - 12 - 88 வடகைக் கொள்வனவு வியாபாரக்கணக்கு | 10000 |
| | 10000 | | 10000 |
| 31 - 12 - 89 வியாபாரக் கணக்கிற்கு மாற்றம் | 4334 | 1 - 1 - 89 மீ/ கீ/ வ | 10000 |
| மீ/ கீ/ செ | 5666 | | |
| | 10000 | | 10000 |
| 31 - 12 - 90 வியாபாரக் கணக்கிற்கு மாற்றம் | 5666 | 1 - 1 - 90 மீ/ கீ/ வ | 5666 |

செய்கை

### தேறாத இலாபம்

| | |
|---|---|
| பொருளின் கொள்விலை | 40000 |
| பொருளின் காசுவிலை | 60000 |
| ∴ இலாபம் | 20000 |
| **31 - 12 - 88** ல் கடன்பட்டோரிடமிருந்து வரவேண்டியது | 30000 |

$$\therefore \text{ தேறாத இலாபம்} = \frac{\text{இலாபம்}}{\text{காசுவிலை}} \times \text{வரவேண்டியதொகை}$$

$$= \frac{20000}{6\,000} \times 30000$$

$$= 10000$$

முறை 1 (ஆ)

விற்பனையாளன் ஏடுகளிலே வாடகைக் கொள்வனவு வட்டியினை வேறுபடுத்தி பதிவு செய்யும் முறைகளில் இம் முறையும் ஒன்றாகும்.

**நாட்குறிப்பு**

(1) வாடகைக் கொள்வனவு முறையில் பொருள் விற்பனை செய்யப்படும் போது

வாடகைக் கொள்வனவு விற்பனை விலைக்கு வாடகைக்

| | | |
|---|---|---|
| கொள்வனவு கடன்பட்டோன் | வரவு | |
| காசு விலைக்கு வாடகைக் கொள்வனவு விற்பனைக் கணக்கு | | செலவு |
| வட்டிக்கு வட்டி தொங்கல் கணக்கு | | செலவு |

(ii) ஆரம்பக்கட்டுப்பணம் தவணைக்கட்டுப்பணம் பெற்றுக் கொள்ளப்படும் போது

காசு அல்லது வங்கி கணக்கு வரவு
வாடகைக் கொள்வனவு கடன்பட்டோன் செலவு

(iii) தவணைக் கட்டணத்தின் பேரில் வருமதியாக உள்ள வட்டி தொகைக்கு

வட்டி தொங்கல் கணக்கு வரவு
வாடகைக் கொள்வனவு தொங்கல் கணக்கு செலவு

(Vi) ஒவ்வொரு கணக்கிட்டு காலப்பகுதியிலும் வாடகைக் கொள்வனவு கடன்பட்டோன் கணக்கு வரவேண்டியுள்ள தொகையில் உள்ளடங்கியிருக்கும். தேறாத இலாபத்தினை கணிப்பிட்டு தேறாத இலாப ஏற்பாட்டு கணக்கிற்கு மாற்றப்படுதல் வேண்டும்

வாடகைக் கொள்வனவு வியாபாரக் கணக்கு வரவு
தேறாத இலாப ஏற்பாட்டுக் கணக்கு செலவு

(V) நிதியாண்டு காலப்பகுதி முடிவில் வாடகைக் கொள்வனவு விற்பனைக் கணக்கு மீதி வாடகைக் கொள்வனவு வியாபாரக் கணக்கிற்கு மாற்றப்படும்.

(Vi) நிதியாண்டு காலமுடிவில் பெற்ற வட்டி மீதி வாடகை கொள்வனவு வியாபாரத்திற்கு மாற்றப்படும்.

(Vii) வாடகைக் கொள்வனவு முறையில் விற்பனை செய்யப்பட்ட பொருளின் கிரயம் நிறுவனத்தினது பொது வியாபாரக் கணக்கில் இருந்து வாடகைக் கொள்வனவு வியாபாரக் கணக்கிற்கு மாற்றப்படுதல் வேண்டும்.

வாடகைக் கொள்வனவு வியாபாரக் கணக்கு வரவு
பொது வியாபாரக்கணக்கு செலவு

முறை **1 (அ)** ல் உதாரணமாக கொடுக்கப்பட்டகணக்கு இம்முறையில் செய்யபடுமாயின்.

## வாடகைக் கொள்வனவு கடன்பட்டோன் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 1 - 1 - 87 விற்பனை | 60000 | 1 - 1 - 88 காசு | 20000 |
| 31 - 12 - 88 பெற்றவட்டி | 12000 | 31 - 12 - 88 காசு | 22000 |
| | | மீ/ கீ/ செ | 30000 |
| | 72000 | | 72000 |
| 1 - 1 - 89 மீ/ கீ/ வ | 30000 | 31 - 12 - 89 காசு | 22000 |
| 31 - 12 - 89 பெற்றவட்டி | 9000 | மீ/ கீ/ செ | 17000 |
| | 39000 | | 39000 |
| 1 - 1 - 90 மீ/ கீ/ வ | 17000 | 31 - 12 - 90 காசு | 22100 |
| 31 - 12 - 90 பெற்றவட்டி | 5100 | | |
| | 22100 | | 22100 |

## வாடகைக் கொள்வனவு விற்பனைக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| வியாபாரக் கணக்கிற்கு மாற்றம் | 60000 | 1 - 1 - 88 கடன்பட்டோன் | 60000 |

## 31 - 12 - 88 ல் முடிவடைந்த ஆண்டுக்கான வாடகைக் கொள்வனவு வியாபாரக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| பொது வியாபாரக் கணக்கு கொள்விலை | 40000 | விற்பனை | 60000 |
| தேறாத இலாபம் | 10000 | வாடகைக் கொள்வனவு தொங்கல் | 12000 |
| மொத்தலாபம் | 22000 | | |
| | 72000 | | 72000 |

## 31 - 1 - 89 ல் முடிவடைந்த ஆண்டுக்கான வாடகைக் கொள்வனவு வியாபாரக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| | | வாடகைக் கொள்வனவு | |
| மொத்தலாபம் | 13334 | தொங்கல் | 9000 |
| | | தேறாத இலாப ஏற்பாடு | 4334 |
| | 13334 | | 13334 |

## 31 - 12 - 90 ல் முடிவடைந்த ஆண்டுக்கான வாடகைக் கொள்வனவு வியாபாரக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| | | வாடகைக்கொள்வனவு | |
| மொத்தலாபம் | 10766 | தொங்கல் | 5100 |
| | | தேறாத இலாப ஏற்பாடு | 5666 |
| | 10766 | | 10766 |

## தேறாத இலாப ஏற்பாடுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| | | 31 - 12 - 88 வாடகைக் கொள்வனவு | |
| மீதி/ கீ/ செ | 10000 | வியாபாரக் கணக்கு | 10000 |
| வியாபாரக் கணக்கிற்கு மாற்றம் | 4334 | 1 - 1 - 89 மீ/ கீ/ வ | 10000 |
| மீ/ கீ/ செ | 5666 | | |
| | 10000 | | 10000 |
| வியாபாரக் கணக்கிற்கு மாற்றம் | 5666 | மீ/ கீ/ வ | 5666 |

## வாடகைக் கொள்வனவு தொங்கல்கணக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| 31 - 12 - 88 வியாபாரக் கணக்கு | 12000 | | கடன்பட்டோன் | 26100 |
| மீ/கீ/செ | 14100 | | | |
| | 26100 | | | 26100 |
| 31 - 12 - 89 வியாபாரக் கணக்கு | 9000 | | 1 - 1 - 89 மீ/கீ/வ | 14100 |
| மீ/கீ/வ | 5100 | | | |
| | 14100 | | | 14100 |
| 31 - 12 - 90 வியாபாரக் கணக்கு | 5100 | | 1 - 1 - 90 மீ/கீ/வ | 5100 |
| | 5100 | | | 5100 |

முறை [ii]

வாடகைக் கொள்வனவு அடிப்படையில் பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள் பொதுமக்களுக்கு அடிக்கடி இவ் அடிப்படையில் பொருட்களை விற்பனை செய்யும் போது நடவடிக்கைகள் அதிகமானதாக காணப்படும். இந் நிலையில் இவ் நிறுவனங்கள் கொடுக்கல் வாங்கல்களை தனித்தனியாக பதிவு செய்வதற்கு சிரமமானதாக இருக்கும் எனவே நிறுவனங்கள் வாடகைக் கொள்வனவு வட்டியினையும் அது தொடர்பான இலாபத்தினையும் பிரித்தறிவது கடினமானதாக இருப்பதனால் விற்பனை செய்யும் நிறுவனங்கள் இலாபத்தையும் வாடகைக் கொள்வனவு வட்டியையும் வேறுபடுத்தாது கொடுக்கல் வாங்கல்களை பதிவ செய்து கொள்கின்றன இவ்வாறு இவ் இரண்டையும் வேறுபடுத்தாது பதிவு செய்யும் முறைகள்.

(i) வாடகையிலுள்ள இருப்பு முறை

(ii) தேறாத இலாப ஏற்பாட்டு முறை

குறிப்பு:

இவ் இரண்டு முறைகளையும் மேலும் தொடர்ந்து எழுதுவது இம் மலரின் நீண்டபக்கங்களை எடுக்கும் என்பதனால் மீண்டும் ஒரு சந்தர்ப்பம் தரப்படும் சந்தர்ப்பத்தில் இவ் இரண்டு முறைகளும் விரிவாக எழுதிமுடிக்கலாம். அத்துடன் இவ் இரண்டு முறைகளும் கா. பொ. த. உயர்தர மாணவர்கள் ஓரளவு அறிந்திருத்தல் வேண்டும்.

# இலங்கை கணக்கீட்டு நியமம் — 3
# Sri Lanka Accounting Stanard — 3
# கணக்கீட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்துதல்
# Disclosure Of Accounting Policies.

(1) நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போதும் சமர்ப்பிக்கும் போதும் பின் பற்றப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளைப் பற்றியே இந்த **3** ம் இலக்க நியமம் எடுத்துக் கூறுகிறது.

(2) நியமத்தின்படி நிதிக்கூற்றுக்கள் என்பது ஐந்தொகை வருமானக் கூற்று அல்லது இ/ந க/கு விளக்கக் குறிப்புக்களையும் குறிக்கும்.

(3) இது நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதனையும் அதனைப்பாதிக்கும் முக்கியம் வாய்ந்த கணக்கீட்டுக் கோட்பாடுகளையும் முறைகளையும் குறிக்கும் இக்கொள்கைகள் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப நிர்வாகத்தால் தெரிவு செய்து பயன்படுத்த பட்டதாகும்.

(4) இதன் நோக்கம் யாதெனில் நிதிக்கூற்றுக்களைச் சிறந்த முறையில் விளங்கிக்கொள்ளச் செய்வதாகும் அதாவது வேறுபட்ட நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களை ஒன்றோடொன்றினை நியாயமான முறையில் ஒப்பிட்டு ஆராய முடியும்.

(5) நிதிக்கூற்றுக்களில் காட்டியுள்ளபடி நிதி நிலமையினையும் செயற்பாட்டுப் பெறுபேறுகளையும் நிதி நிலமைகளின் மாற்றங்களையும் பாதிக்கின்றன ஆகவே ஒரு நிறுவனத்தால் கடைப்பிடிக்கப்பட்ட நியமம்

த. சுயேந்திரன்
A/L 93 C (A)

3— னால் அந்த நிதிக்கூற்றுக்களின் பயன்பாடு மேலும் அதிகரிக்கப்படு கின்றது.

(6) இலங்கைக் கணக்கீட்டு நியமம் கணக்குகளை பிரசுரிக்கும் எந்த நிறுவனத்திற்கும் உரியதாகும்.

(7) ஒரு நிறுவனத்தின் முகாமை அக முகாமை தேவையின் பொருட்டு நிதிகூற்றுக்களை அதற்கு பொருத்தமான மாறுபட்ட பல முறைகளில் தயாரிக்கலாம். ஆனால் வேறுவகையினருக்கு வழங்கும் போது இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு உட்பட்டு அமைதல் வேண்டும்.

விளக்கம் •

(8) நிதிக்கூற்றுக்களை சரியாக விளங்கிக் கொள்வதற்கு அவை எந்தக் கணக்கீட்டுக் கொள்கைகளின் அடிப்படையில் அமைந்துள்ளன என்பது வெளிக்காட்டப்பட வேண்டிய அவசியமாகிறது.

(9) தனிப்பட்டியல் இல்லை என்பதால் மாறுபட்ட கணக்கீட்டுக் கொள்கைகளே கிடைக்கப்பெறுகின்றன. இதனால் ஒரே நிகழ்ச்சிக்கு வேறுபட்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப் படுகின்றன.

(10) நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சிலசமயம் தவறான அல்லது பொருத்தமற்ற முறைகள் பின்பற்றப்பட்டால் அவற்றை வெளிப்படுத்துவது அவசியமாகும். இதனால் அவை திருத்தப்பட்டு விட்டதாக கொள்ளப்படமாட்டாது.

அடிப்படைக் கணக்கீட்டு ஊகங்கள்

(1) நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சில கணக்கீட்டு ஊகங்கள் அடிப்படையாக அமைகின்றன. ஆனால் அவை பின்பற்றப்பட்ட விபரம் ஏற்றுக்கொள்ளப்பட்டு பிரயோகிக்கப்பட்டதாக ஊகிக்கப்படுகின்றது. ஆனால் பின்பற்றப்படாமல் இருப்பின் அதற்கான விபரத்தை காரணத்துடன் வெளிப்படுத்துவது அவசியமாகும்.

(2) அடிப்படைக் கணக்கீட்டு ஊகங்கள் பரந்துபட்டது தற்போது பின்வரும் அடிப்படைக்கணக்கீட்டு ஊகங்கள் விசேடமாக குறிப்பிடுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு பின்வருமாறு வரையறை செய்யப்பட்டுள்ளது.

### (அ) தொடர்ந்து செல்லும் நிறுவனம் (Coing Concern)

சாதாரணமாக நிறுவனமொன்று தொடர்ந்து இயங்குமென்றே கருதப்படுகிறது அதாவது எதிர்பார்க்கக் கூடிய காலத்திற்கு அது தொடர்ந்து செயற்படும். நிறுவனம் கலைக்கப்படுவதற்கான அல்லது செயற்பாட்டினை கணிசமான அளவு குறைப்பதற்கான எண்ணத்தினை கொண்டிருக்க வில்லை என ஊகிக்கப்படுகிறது.

### ஆ கொள்கை மாறாமை (Consistency)

ஒரே கணக்காண்டு காலத்திலும் ஒரு காலத்திலிருந்து மற்றைய காலத்திற்கும் கணக்கீட்டுக் கொள்கைகள்

மாறுபடாமல் தொடர்ந்து பின்பற்ற பட்டுள்ளது எனவும் ஊகித்துக் கொள்ளப்படுகின்றது.

## இ அட்டுறு (Accrual)

வருமானங்களும் செலவுகளும் சேர்ந்துள்ளன என ஏற்றுக்கொள்ளப் பட்டு (பணம் பெறப்பட்டு செலுத் தப்பட்டபோதல்ல) அவை சம்பந்தப் பட்ட காலத்திற்கான நிதிக்கூற்றுக் களில் பதியப்படுகின்றன.

## (ஈ) கவனம் [Frudence]

வருமானங்களும், இலாபங்களும் எதிர்பார்த்துக் கணக்கில் கொண்டு வரப்படுவதில்லை. ஆனால் அவை காசாகத் தேறியிருத்தல் வேண்டும். இவற்றை மதிப்பிடக்கூடியதாக இருத்தல் வேண்டும். அவ்வாறான வையே இ/ ந க/ கு களிலும், நிதிக் கூற்றுக்களிலும். சேர்த்துக்கொள்ளப் படுகின்றன. தெரிந்த பொறுப்புக்கள் அனைத்திற்கும் ஒதுக்கங்கள் செய்யப் படுகின்றன.
மற்றைய ஊகங்களோடு கவனம் மாறுபடும்போது. கவனமே முக்கிய மாகக் கருதப்பட்டு செயற்படுத்தப் படும்.

**கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்யும்போது. கவனத்தில் கொள்ளப்படவேண்டியவை.**

(13) கணக்கீட்டுக் கொள்கைகளை தெரிவு செய்யும்போது தெரிவுசெய்யப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் அடிப் படையில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக் கப்பட்ட நிதிக்கூற்றுகள் நிறுவன த்தின் ஐந்தொகைத்திகதியில் அதன் உண்மையான ஒழுங்கான இ/ ந னை காட்டக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

(14) நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப் பிப்பதற்கு நிர்வாகத்தால் தெரிவு செய்து பயன்படுத்தப்படும் கணக் கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்யும்போது பின்வரும் முக்கிய விடயங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படல் வேண்டும்.

## (அ) கவனம்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் கணக்கீட்டுக் கொள்கைகளை தெரிவு செய்வதற்கும் 'இந்தக்கவனத்தைப் பயன்படுத்தும்போது. நிச்சயமற்ற தன்மை கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். இது ரகசிய ஒதுக்கம் ஏற்படுவதை நியாயப்படுத்தாது.

## (ஆ) அமைப்பினை விட விடயமே முக்கியம்.

நிதிக்கூற்றினை சமர்ப்பிக்கும் போது. கணக்குகளில் சேர்த்துக் கொள்ளும் போதும். கொடுக்கல் வாங்கல்கள் அவற்றில் அடங்கியுள்ள விடயங் களையும் உண்மைத் தன்மையினை யும்பொறுத்து அமைதல்வேண்டுமே தவிர அவற்றின் சட்ட அமைப்பினை மட்டும் பொறுத்து அல்ல.

## (இ) கணிசமான

நிதிக்கூற்றுக்கள் கணிசமான விடயங் களை வெளிக்காட்டுதல் வேண்டும்.

## வெளிப்படுத்தப்பட வேண்டிய கொள்கைகள்

(15) ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறுபட்ட பல கணக்கீட்டுக் கோட்பாடுகளிலும் முறைகளிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட பண்பாட்டிலும் பிரயோகத்திலும் ஒரு கைத்தொழிலில் இருந்து மற்றையதில் வேறுபடுகின்றது. ஆகவே நிதிக்கூற்றுக்களைப் பயன்படுத்துபவன் இவ்வேறுபாடுகளை அறிந்துள்ளார் என ஊகிக்கமுடியாது.

(16) தற்போது கணக்கீட்டுக்கொள்கைகள் சீராகவும், முற்றாகவும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதில்லை. சில முக்கியகொள்கைகள் முற்றாக வெளிப்படுத்தபடுவதில்லை. வியாபார நிறுவனங்களின் வளர்ச்சியும் நிதிக்கூற்றுக்களின் ஒருமைப்பாட்டின் அவசியத்தை அதிகரிக்கச் செய்துள்ளது.

(17) வேறுபட்ட கணக்கீட்டுக்கொள்கைகள் உள்ள இடங்களும் அவை வெளிக்காட்டப்பட வேண்டிய இடங்களும் பின்னர் உள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. பின் இணைப்பிலுள்ள கொள்கை இடங்களுள் பட்டியல் முழுமையானதல்ல என்பதை உணர்ந்து கொள்ளல் முக்கியமானதாகும். சம்பந்த சந்தர்ப்பங்களில்.ஏனைய இடங்களிலுள்ள முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிக்காட்டப்படல் வேண்டும்.

## வெளிப்படுத்தலின் அமைப்புவடிவம்

18) கணக்கீட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்த வேண்டிய இடஅமைப்பு வடிவம் கண்டிப்பாக இருக்க வேண்டியதில்லை. என்றாலும் ஒரே இடத்திலும் நிதிக்கூற்றுக்களின் இணைந்த பகுதியாகவும் அமைதல் குறிப்பாகப் பயனுள்ளதாகும்.

(19) ஒரு நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளில் மேல் வாரியான காட்சியினைக் கொடுப்பதற்கு. இக் கொள்கைகள் சுருக்கமான வடிவிலும் முடிந்தமட்டில் நிதிக்கூற்றின் முதலாவது குறிப்பாகவும் வெளிப்படுத்தபடுவது சிறந்ததாகும்.

## இலங்கை கணக்கீட்டு நியமம், கணக்கீட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்துதல்.

நியமம்- 3, இவ் அறிக்கையில் 20 - 25 பந்திகளைக் கொண்டுள்ளது. இவை பந்திகள் 1 - 19 உடன் சேர்த்து வாசிக்கப்படல்வேண்டும். அத்தோடு இலங்கைக் கணக்கீட்டு முகவுரையுடன் சேர்த்து வாசிக்கப்படல் வேண்டும்.

(20) தொடர்ந்து செல்லும் நிறுவனம், கொள்கை மாறாமை, அட்டுறு, கவனம் ஆகியவை அடிப்படைக்கணக்கீட்டு ஊகங்களாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. வேறுவிதமாக தெளிவாகக்குறிப்பிடப்பட்டால் ஒழிய இந்த அடிப்படை ஊகங்கள் பின்பற்றப் பட்டதாகவே கருதிக் கொள்ளப் படும். அடிப்படை ஊகங்களில் ஏதேனும் பின்பற்றப்படாவிடின் பின்பற்றப்படாதவிபரம் காரணத்துடன் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

(21) தெரிவின்போது கவனம் அமைப்பு வடிவினைவிட பொருள் அடக்கத்தின்

முக்கியத்துவம் கணிசமானவை ஆகியவைகளே அடிப்படையாக மேலோங்கி இருத்தல் வேண்டும். அவ்வாறு மேலோங்கி அமைவதால் அந்தக்கணக்கீட்டுக் கொள்கைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஐந்தொகை திகதியில் உண்மையான நிலபரத்தையும், வருமானக் கூற்றுக்களும் இ/ந க/குக்கும் அத்திகதியில் முடிவடைந்த காலத்திற்கும் உண்மையான நேர்மையான நிலபரத்தையும் காட்டும்.

(22) நிதிக்கூற்றுக்களைத் தயாரித்துச் சமர்ப்பிக்கும் போது எடுத்தாளப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளை தெரிவு செய்யும் போது சரி பிழை ஆராயப்பட்ட இடங்களிலுள்ள தகவல்களையும் வெளிப்படுத்துதல் வேண்டும்.

(23) பின்பற்றப்பட்ட கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் தெளிவாகவும் சுருக்கமாகவும் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இது நிதிக்கூற்றுக்களின் முதல் குறிப்பாக அமைவது விரும்பத்தக்கதாகும்.

(24) தவறான முறையில் கையாளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்துவதன் மூலம். பொருத்தமற்ற கையாளல் திருத்தப்பட்டதாக கருதப்பட மாட்டாது.

(25) இந்த கணக்கீட்டு நியமங்கள் நிதியாண்டு 1986 கலண்டர் ஆண்டில் ஆரம்பமாகும் சகல நிறுவனங்களுக்கும் செயற்படுத்த உரியதாகும்.

# இலங்கைக் கணக்கீட்டு நியமம் இல — 3

## (1) பொதுக்கணக்கீட்டுக்கொள்கைகள்

(அ) அனைத்து மதிப்பீட்டுக் கொள்கைகள்
உ + ம் வரலாற்றுக் கிரயம்
பொதுக் கொள்வனவு வலு

(ஆ) அன்னியச் செலாவணி மாற்றம்

(இ) அரசாங்க உதவி ஊக்கக் கொடைகள்

(ஈ) நீண்ட கால ஒப்பந்தங்கள்

(உ) வரியிடலின் அடிப்படை

(ஊ) பிற்போட்ட வரிக்கொள்கை

(எ) அருவகச் சொத்துக்களின் பெ. தே கொள்கைகள்

(ஏ) ஒருங்கிணைப்புக் கொள்கை

(ஐ) ஐந்தொகைத் திகதிக்குப் பிந்திய விடயங்களைக் கையாழுதல்

(ஒ) தொடர்ந்து செல்லும் நிறுவன ஊகம் ஏற்புடையது அல்லவெனில் கலைப்புப் பெறுமதியினைக் கண்ட விதம்

## (2) சொத்துக்களும் அவற்றின்பெறுமதி மதிப்பிடப்பட்ட அடிப்படையும்

(அ) அபிவிருத்திக்காக வைத்திருக்கும் நிலமும் செலவும்

(ஆ) பெறுமதி குறைவுடைய சொத்துக்களும் அவற்றின் பெ. தே கொள்கைகளும்

(இ) கட்டுப்படுத்தப்பட்ட முதலீடுகளும் ஏனைய முதலீடுகளும்

(ஈ) அருவகச் சொத்துக்கள்

(உ) சரக்குகளின் தொகுதி

(ஊ) வருமதிகள்

(எ) வளரும் பயிர்களும் கால்நடைகளும்.

(3) பொறுப்புக்களும் பொறுப் பொதுக்கங்களும்.

(அ) நிறைவேற்றப்பட வேண்டியவையும் நிகழத்தக்க பொறுப்புக்களும்

(ஆ) ஓய்வூதியத்திட்டம்.

(இ) சேவைக்கால உறுதிகள்

(ஈ) வேலைத் தொடர்பை நீக்குவதற்கான கொடுப்பனவுகள்

(4) இலாப நட்டங்கள்

(அ) இலாபத்தினை ஏற்றுக்கொள்ளும் முறைகள்

(ஆ) குத்தகை வாடகைக் கொள்வனவு நடவடிக்கைகளும் சம்பந்தப்பட்ட வட்டியும்

(இ) பராமரிப்பு திருத்தம், அபிவிருத்தி

(ஈ) ஆதனங்களை விற்றலால் ஏற்பட்ட இலாபங்களும் நட்டங்களும்

(உ) காப் பொதுக்கங்களுக்கான கணக்குகள் வரவு வைக்கப்பட்டவைகளும், செலவு வைக்கப்பட்டவைகளும் உற்பட.


மத்திய வணிகம் சிறக்க நல்வாழ்த்துக்கள்

# நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்

A/L 93,94 கலைவர்த்தக கணிதவகுப்புகள் நடைபெறுகின்றன.

அனுபவம்மிக்க பட்டதாரி ஆசிரியர்களால் சிறந்தமுறையில் பாடங்கள் போதிக்கப்படுகின்றன


கத்தியையும் துப்பாக்கியையும்விட மனமும் அறிவும் உலகத்தை அதிகம் வசப்படுத்தி இருக்கின்றன.




சீ
மா
ட்
டி

112 மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

அருண் முருகன்
ஜுவல்லரி



96/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மத்திய வணிகத்திற்கு எமது வாழ்த்துக்கள்

சோபிதா புத்தகசாலை

கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

மத்திய வணிகம் சிறப்புற எம் நல்வாழ்த்துக்கள்

## வர்த்தக வங்கி சேமிப்பு சான்றிதழ்கள்

சான்றிதழுக்கான அட்டவணை:-

| நீங்கள் கொடுப்பது | | | நீங்கள் பெறுவது |
|---|---|---|---|
| 6 மாதங்கள் | 12 மாதங்கள் | 24 மாதங்கள் | முதிர்ச்சியின்போது |
| 14 5வீதம் | 15.5வீதம் | 16·5 வீதம் | |
| ரூபா 465/- | ரூபா 433/- | ரூபா 375/- | ரூபா 500/- |
| ரூபா 932/- | ரூபா 866/- | ரூபா 750/- | ரூபா 1000/- |
| ரூபா 4662/- | ரூபா 4330/- | ரூபா 3760/- | ரூபா 5000/- |
| ரூபா 3925/- | ரூபா 8659/- | ரூபா 7519/- | ரூபா 10000/- |
| ரூபா 23310/- | ரூபா 21650/- | ரூபா18800- | ரூபா 25000/- |

வாருங்கள்! இணையுங்கள்! வளருங்கள்!

"உங்கள் வெற்றி எங்கள் பலம்"

அசல் 22 கரட்
தங்க நகைகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய
ஸ்தாபனம்

# ஜெயசித்திரா

## நகை மாளிகை

177/5 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

அழகிய தங்க நகைகள்
செய்து பெற்றிட அசல் 22
கரட் தங்க நகைகள் உத்தரவாதத்
துடன் செய்து கொள்ள

# சுமங்கலி

## நகை மாளிகை

112A, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

துன்பம் பொறுமையையும் பொறுமை அனுபவத்தையும் அனுபவம் நம்பிக்கையையும் உண்டாக்கிறது.


தையல் உலகின் நவீன முன்னோடிகள்

# விக்ரம்

நவநாகரிகத்திற் கேற்ப உங்கள் ஆடைகளை
சிறந்த முறையில் குறித்த தவணைகளில்
தைத்துப் பெற்றுக் கொள்ள உங்களுக் கென்றே

**Vikram Tailoring Palace**
245, Arsuna (Stanly) Road, Jaffna.
**(London Diploma Holder)**

WITH THE BEST
COMPLEMENTS FROM.

**Sothida Vilasa Book Depot**

KOKUVIL
Jaffna.

உங்கள் மழலைச் செல்வங்களின்
உயிரோவியமான படங்களுக்கு

# மழலை

**புகைப்பட நிலையம்**

187, பரமேஸ்வராச் சந்தி
திருநெல்வேலி.

ஆண்டு 6 முதல் O/L வரை

திறமை மிகு ஆசிரியர் குழுவின்
சிறப்பான சேவைக்கு

எடிசன்
அக்கடமி

(யாழ், இந்துக் கல்லூரி, அருகாமை)
411/1 கே கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ECALON

மனோகராச் சந்தி
அருகாமை

A/L

வர்த்தக வகுப்புகள்
நடைபெறுகின்றன

ஜெயா

ஆட்
போட்டோ

சாவகச்சேரி

உங்களுக்கென நவநாகரிக
ஆடைகளை விற்பனை செய்யும்
ஒரே ஸ்தாபனம்

நாதஸ்ன்

புடவை நிலையம்

V.17 மின்சார நிலைய வீதி,
பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# தென்கிழக்காசிய நாடுகளில் இந்துப் பண்பாட்டு பரம்பல்

இந்தியாவிற்கே உரியதான பண்பாட்டு அம்சங்கள் இந்தியாவின் தெற்கே உள்ள பிரதேசப் பரப்புகளிலும் தென்கிழக்கே உள்ள தீவுக் கூட்டங்களிலும் பரவலடைந்து காணப்பட்டது. இத் தென்கிழக்காசிய நாடுகளில் இந்துப்பண்பாடு எவ்வகையில் பரவலடைந்தது என நோக்குவோம். இதற்கான காரணத்தை ஆராய்ந்த ஆய்வாளர்கள்.

(1) வணிகர்களது போக்குவரத்து
(2) வணிகர்களது குடியேற்றம்
(3) நிலைப்படுத்தப்பட்ட கலாச்சாரம் இல்லாது இருந்தமை

என்கின்ற காரணங்களை முன்வைத்துள்ளனர் அதாவது வணிகத்தின் பொருட்டு தென்கிழக்காசிய நாடுகளிற்கு போக்குவரவு செய்த வணிகர்கள் தமது கலாச்சாரத்தை பேணிக்கொண்ட பொழுது அக் கலாச்சாரம் அந்நாட்டு மக்களாலும் தழுவப்பட்டது எனலாம்.

இந்தியாவின் இட நெருக்கடி காரணமாக தென்கிழக்காசியா நாடுகளில்குடியேறிய வணிகர்கள் தமது கலாச்சாரத்தை தாம் பேணிக் கொண்ட பொழுது இந்தியக் கலாச்சாரம் அங்கு வலுப்பெற்றது எனலாம்.

இந்தியக் கலாச்சாரம் இங்கு வந்த பொழுது நிலையான ஒரு கலாச்சாரம் தென்கிழக்காசிய நாடுகளிலே இல்லாதிருந்தமை வந்த இந்த இந்தியக் கலாச்சாரத்தை மக்கள் பேணுவதற்குக் காரணமாக அமைந்தது எனலாம். அந்தவகையில் இந்தியக் கலாச்சாரம் பரவலடைந்த நாடுகளாக

ந மைசூர்நாதன்
**A/L 93 C** (B)

(1) தாய்லாந்து (சீயம் அல்லது சயாம்)
(2) கம்போடியா (காம்பூஜம்)
(3) வியட்னாம் (சம்பா)
(4) யாவா (சாவகம்)
(5) போர்ணியோ (புறூணைத்தீவு)
(6) சுமாத்திரா (கற்பூரத்தீவு)
(7) பாலித்தீவு (போல்தீவு)
(8) மலேசியா (மலாயதீவகற்பம்)
ஆகியவற்றைக் குறிப்பிடலாம்

இவற்றிலே இன்றைய வரையில் இந்துச் செல்வாக்கைப் பெற்றிருக்கும் நாடுகளாக,

(1) தாய்லாந்து (சீயம் - சயாம்)
(2) மலேசியா (மலாயதீபகற்பம்)
(3) பாலித்தீவு (போல்தீவு)
என்பவற்றைக் குறிப்பிடலாம்.

மேற் கூறப்பட்ட நாடுகளின் இந்து செல் வாக்குப் பற்றி அறிந்து கொள்வதற்கு உரிய சாதனங்களாக அமைபவை பழமையான இலக்கியங்கள் பழமையான கல்வெட்டுக்கள் கட்டிடசிதைவுகளும் புதைபொருள் சான்று ஆதாரங்கள் பிற்கால ஆய்வாளர்களுடைய கருத்துகள் என்பவற்றை சான்றுகளாக கொள்ள முடிகின்றன.

மேற்கூறப்பட்ட சான்றுகளை கொண்டு நோக்குகின்ற பொழுது தென்கிழக்காசிய நாடுகளிலே இந்துப் பண்பாடு அழிவுற்ற மைக்கு காரணம் கூறுகையில்

(1) அன்னியர்களுடைய வருகை
(2) பிற மதப் பிரச்சாரம்

என்பவையே தாக்கங்களுக்கான காரணங்கள் என அறிகின்றோம். மேற்கூறப் பட்ட தாக்கங்கள் இருப்பினும் இன்றைய வரை இந்துச் செல்வாக்குடன் விளங்கும் மூன்று நாடுகளை குறிப்பிடலாம். அவற்றின் இந்து செல்வாக்கு நிலைகளை இங்குநோக்கு வோம்.

## தாய்லாந்து அல்லது சீயம்

தென்கிழக்காசிய நாடுகளில் அன்று இருந்து இற்றை வரை இந்து செல்வாக்கை பெற்றிருக்கும் நாடாக தாய்லாந்து கருதிக் கொள்ளப்படுகிறது. இன்றைய இந்துச் செல்வாக்கு நிலைப்பாடுகளை அறிந்து கொள்வதற்கு பிற்கால ஆய்வாளர்களது கருத்துகளும் அழிவுபாடடையாது இருக் கின்ற கட்டடங்களும் சான்று பகர்கின்றன இந்த வகையில் தாய்லாந்திற்கு விஜயம் செய்து தாய்லாந்தின் இந்துச் செல்வாக்குப் பற்றியதான கருத்துக்களை பேராசிரியர் கமால்தீன் அவர்கள் ''தாய்லாந்தின் தலை நகரிலே'' என்ற தலைப்பிலே வழங்கிய நூலில் இருந்தும் தனிநாயக அடிகளது கட் டுரைகளில் இருந்தும் தர முடிகிறது.

இதனைக் கொண்டு நோக்குகின்ற பொழுது தாய்லாந்திலே இற்றைவரையிலே புதுப்பொலிவுடன் மூன்று ஆலயங்கள் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த மூன்று ஆலயங்களும் சிவன், சக்தி ஆலயங் களாகும். இவ் ஆலயங்கள் தாய்லாந்தின் தலைநகராகிய பாங்கொக்கில் அமைந் துள்ளன. இங்ஙனமாக புதுப்பொலிவுடன் காணப்படும் இவ் ஆலயங்களைக் கொண்டு நோக்கின் தாய்லாந்து இன்றை வரை இந்து மதத்தை பேணி வருகின்றது என்றே கொள்ள முடிகின்றது. அடுத்து இந்துக் களால் பேணப்படுகின்ற விழா முறைகள் பல தாய்லாந்திலும் பேணப்பட்டு வரு கின்றது என்றே கொள்ள முடிகிறது.

அடுத்து இந்துகளால் பேணப்படுகின்ற விழா முறைகள் பல தாய்லாந்திலும் பேணப் பட்டு வருகின்றன. அதாவது ஊஞ்சல் திருவிழா, உழவுத்திருவிழா, முடிசூட்டு

விழா போன்ற விழா முறைமைகள் இந்துக் கிரியைகளின் அடிப்படையிலேயே ஆற்றப் படுவதனால் தாய்லாந்தில் இந்துச் செல்வாக்கானது இன்றையவரை பேணப்பட்டு வருகின்றது. என்றே கொள்ள முடிகிறது. இது மட்டுமல்லாது இந்துக்கள் பேணுகின்ற சில விரதங்களும் தாய்லாந்து மக்களால் அனுசரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றிலே கௌரி நோன்பு திருவெம்பாவை என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

அடுத்து இந்து இலக்கியங்களும் தாய்லாந்திலேயே சிறப்பிக்கப் படுகின்றன அதாவது இராமாயணம் பாரத சம்பவங்களை ஆலயங்களிலே சிற்ப ஓவியங்களாக வரைந்துள்ளனர் தேவாரங்களை மதிப்புக் கொடுத்து பேணி வருகின்றனர். என்பதற்கு ஆதாரமாக அப்பரின் தேவாரமாகிய "கூற்றாயின வாறு" என தொடங்கும் தேவாரத்தை செப்புத் தகட்டிலே பொறித்து வீட்டின் முகப்பிலே இந் நாட்டு மக்கள் தொங்க விட்டிருப்பதாக குறிப்பிடுவதை கொண்டு நோக்குகின்ற பொழுது தேவாரங்கள் சிறப்பிக்கப் படுவதை காண்கிறோம். இது மட்டுமல்லாது திருப்பாவை திருவெம்பாவை என்பனவும் விழாக்காலங்களில் ஓதப்பட்டு வருவதையும் காண்கின்றோம் ஆதலால் இந்து இலக்கியங்கள் முக்கியத்துவம் பெறுவதைக் கொண்டும் தாய்லாந்தில் இந்துச் செல்வாக்கு நிலவுகின்றது என குறிப்பிட முடிகிறது.

அடுத்து இந்தியசமுதாயத்தவர் வருண வகுப்பிலே பிராமணர்களிற்கு முக்கியத்துவம் வழங்குவது போன்று தாய்லாந்திலும் பிராமணர்கள் மிகவும் சிறப்பாக மதிக்கப்படுகின்றார்கள் இவர்கள் பூவுலகின் தெய்வங்கள் எனவும் நாட்டவர்கள் மதித்து அவர்களிற்கென வழிபாடு ஒன்றை ஆற்றுகின்றனர் இவ் வழிபாடு தேவராஜா வழிபாடு எனப் படுகிறது இந்த வழிபாடு மட்டுமன்றி பிராமணர்களை எல்லா வைபவங்களிலும் கௌரவப்படுத்தி அவர்களிற்கு தேவையான தானங்களை வழங்கி வருவதை காண்கின்றோம். இதனால் பிராமணர்கள் ஒரு முக்கியத்துவமான இடத்தை தாய்லாந்தில் வகித்து வருதல் குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து இந்து மதத்தின் மூல மொழியான வடமொழி தாய்லாந்து மொழியில் மிகுதியான தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கின்றது ஆதலால் தாய்லாந்து மொழியில் இவ்வடமொழி தாக்கமானது இந்துச் செல்வாக்கு இங்கு மிகுந்து இருக்கின்றது என்பதனையே காட்டுகின்றது.

## பாலித்தீவு

இந்தோனேசியாவில் அமைந்துள்ள தீவுகளில் பாலித்தீவு அன்று போல்தீவு என்ற பெயரோடு அழைக்கப்பட்டது. இத்தீவு ஒன்றரைக் கோடி மக்களை கொண்டிருக்கின்றது என்றும் இதில் குடியேற்ற வாசிகளை தவிர்ந்த ஏனையவர்கள் இந்துக்களாகவே இன்றும் விளங்குகின்றார்கள் என்று அறியப்படுகின்றது. இந்துக்கள் நிறைவாக கொண்டிருக்கும் இந்தப் பாலித்தீவிலே இந்துக்களால் விலக்கப்பட வேண்டியவை என கூறப்படும்.பஞ்சமாபாதகங்கள் முழுமையாகவே விலக்கப்பட்டிருப்பதாக அறிகின்றோம். பஞ்சமாபாதகங்களை விலக்கி இந்து மத ஒழுங்குகளை பேணிவாழும் ஒரு தீவாக பாலித்தீவைக் குறிப்பிடுகின்றார்கள்.

இத்தீவிலே வழிபாட்டு முறை சிறப்பான ஓர் இடத்தை பெற்றிருப்பதாக அறிகின்றோம், இந்த வகையில் பிரமா, விஷ்ணு உருத்திரன் எனப்படும். மும்மூர்த்தி வழிபாடு சிறப்புப் பெற்றிருப்பதாகவும் அறிய முடிகின்றது. இங்ஙனமாக மும்மூர்த்தியை சிறப்பிக்கும் வழிபாடு ஒவ்வொரு வீடுகளிலுமே நடைபெறுகின்றது.

அதாவது வீட்டின் முகப்பிலே திரிபுரர் ஆலயத்தை அமைத்து வழிபட்டு வரும் தன்மையை நோக்கின் வழிபாட்டு முறையின் முக்கியத்துவம் பற்றி அறிய முடிகின்றது. இதனைவிட திரிபுரர் ஆலயங்கள் பல பொது இடங்களிலும் அமைந்து இருப்பதைக் காண்கின்றோம். இதுமட்டுமன்றி ஆலயங்களில் படையல்களைச் செய்தலும் இங்கு பேணப்பட்டு வரும் சிறப்பான ஒரு வழிபாட்டு முறையாகும். இத்தகையதான வழிபாட்டு முறை இந்துமதத்தில் காலம் காலமாக பேணப்பட்டுவரும் ஒரு வழிபாட்டு முறையாகும். அடுத்து வினைகளை தீர்க்கும் வல்லவை தீர்த்தங்கள் என்றும் பாலித்தீவு மக்களிற்கு உண்டு ஆதலால் இத்தீவிலே அம்புள் தீர்த்தம் என்ற பெயரிலே தீர்த்தம் ஒன்றினை அமைத்து அதிலே தம் வினைகளை தீர்க்கவும் நோய்களை நீக்கவும் நீராடி வருகின்ற நிகழ்வு இந்துப் பண்பாட்டில் ஒரு சிறப்பான அம்சமாகும். இது மட்டுமல்லாது திருமணக்கிரியை, பிணக்கிரியை போன்றனவும் இந்து ஆசாரப்படியே பேணப்படுவதால் இந்து மதப்பண்பாடு பாலித்தீவில் வலுப்பெற்றது என கருதமுடிகிறது. எனவே இற்றவரை முழுமையான இந்துச் செல்வாக்கைக் கொண்டதாக இத்தீவு விளங்குகின்றது.

## மலாயதீவ கற்பம்

தாய்லாந்து பாலித்தீவு இரண்டையும் போன்று இன்றைய வரையில் இந்துமதச் செல்வாக்கை பெற்றிருப்பதான தீவுப்பகுதியை மலேசியா தீவகற்பம் என அழைக்கின்றோம். இதன் இன்றைய இந்து செல்வாக்கை பல பயணக் கட்டுரைகள் எடுத்துரைக்கின்றன. பண்டைய காலத்திலே வியாபாரப் பொருட்களை கொண்டு செல்லும் வணிகர்களிற்கு கேந்திர மையமாக இத்தீவ கற்பம் விளங்கியமையால் இந்திய வணிகர்களது குடியேற்றம் மிகுதியாகவே மலேசியாவில் காணப்பட்டது. இங்ஙனம் குடியேறிய இந்தியர்கள் மண உறவுகளை அங்கு வைத்துக் கொண்டமையால் இந்திய கலாச்சார அம்சங்கள் இங்கு வலுவடைந்தது என்றே கூறவேண்டும் இவ் வலுப்பெற்ற இந்திய கலாச்சாரம் அன்றில் இருந்து இன்று வரை அழிவு பெறாது நிலைப்படுத்தப் பட்டதாகவே காணப்படுகிறது. நிலையான இந்திய கலாசார அம்சங்களை அறிவதற்கு அங்கு காணப்படுகின்ற ஏராளமான இந்து ஆலயங்களும் அங்கு பேணப்பட்டு வருகின்ற சமய பழக்க வழக்கங்களும் சமயத்திற்கு அவர்கள் வழங்கிவருகின்ற முக்கியத்துவத்தை ஆதாரப் படுத்தி கூறமுடிகிறது.

அதாவது வணிகத்தில் சிறப்படைந்து காணப்படுகின்ற மலேசியர்கள் தாம் பெற்ற பொருளாதாரத்தின் பெரும் பகுதியை ஆலயங்களை எழுப்புவதற்கே பயன்படுத்தினார்கள் என்று கூறத்தக்க வகையில் சிறியனவும், பெரியனவுமான பல இந்து ஆலயங்கள் இற்றைவரை காணப்படுகின்றன

குறிப்பாக தலைநரில் அமைக்கப்பட்டிருக்கும் மாரியம்மன் ஆலயம் மலேசியர்களது செல்வச் சிறப்பை மட்டுமன்றி அவர்களது சமய நம்பிக்கையையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது. அந்த அளவிற்கு சிறப்பிற்குரிய ஆலயங்களை அமைக்கின்றனர். என்றால் இன்னும் இந்துமத செல்வாக்கும் மிகுதியாகவே மலேசியாவில் காணப்படுகின்றது.என்ற முடிவிற்கே வரமுடிகிறது.

கருணையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும், நேர்மையும் அமைதியும் ஒன்றையொன்று முத்தமிடும்.


# இலங்கை வங்கி

அரை நூற்றாண்டுக்கு மேலாக மக்கள் சேவையாற்றிவரும்.

**யாழ் மத்திய கல்லூரி வர்த்தக மன்றத்தின் முயற்சிகள் சிறக்க தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.**

இலங்கை வங்கியின் புதிய சேமிப்புத்திட்டம்

**"மகளிர் பொற்கணக்கு"**

இலங்கை வங்கியில் சேமித்து அதிக நன்மைகளைப் பெறுவீர்

**தேசத்தின் வங்கியாள்**

இலங்கை வங்கி

யாழ்/மாவட்டம்

மத்திய வணிகம் சிறக்க

நல்வாழ்த்துக்கள்

# ரவர் கூல்பார்

**324, மணிக்கூட்டு வீதி**

**யாழ்ப்பாணம்.**

அதி உன்னத சத்துணவு

# ஜீவாகாரம்

# JEEVAKARAM

தோல்வியை கண்டு மனம் தளராதே அவைதான் வெற்றியின் அத்திவாரங்கள்.


# லிங்கநாதன் அன் கோ

சிறந்த ரக கைத்தறிப் புடவை உற்பத்தியாளரும் மற்றும் திருமண காஞ்சிபுரம், மணிப்புரி, நைலெக்ஸ், பட்டுவேட்டி, சேடிங், சூட்டிங் மற்றும் ஏனைய பிடவை திணுசுகளையும் தெரிவு செய்யசிறந்த ஸ்தாபனம்.

GS லிங்கநாதன் அன் கோ
13, 14 பெரியகடை யாழ்ப்பாணம்

# அஜந்தா றெக்ஸ்ரைல்

மங்கள வைபவங்களுக்கு ஏற்ற கூறைச் சேலைகளும் காஞ்சிபுர, பட்டுவேட்டிகளும், கோவில் பட்டுக் குடைகள், மற்றும் புடவைத் திணுசுகளையும் உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்ய ஏற்றதோர் எழில் கூடம்.

54 பெரியகடை,
யாழ்ப்பாணம்.

கிளை 25 4 ம், தெரு,
யாழ்ப்பாணம்.

யாழ் நகரில்

டியூகோ, டியூலக்ஸ், பென்ரலைற் பெயின்ற் வகைகளுக்கு

உத்தரவு பெற்ற வியாபார நிறுவனம்.

# நியூ ஸ்ரான்லிஸ்

95 / 1 அர்ச்சுனா (ஸ்ரான்லி வீதி)
யாழ்ப்பாணம்.

With the best compliments from:

SRI VIGNESWARA STORES

145, Kandy Road
Jaffna.

With the best compliments from:

GURU DIESEL ENGINEERS

388, Stanly Road
Jaffna

With the best compliments from:

GRILL CHINESE INN

FIRST CROSS STREET
JAFFNA

With the best compliments from:

SUPPER SHINE INSTITUTE

76/2 TEMPLE ROAD, JAFFNA.

A/L, 92, 93, 94

கணக்கியல் வகுப்புக்கள்
நடைபெறுகின்றன

ஆசிரியர் Mr. P. Sam

உங்கள் ஆக்கபூர்வ முயற்சிகளில் நாமும் இணைகிறோம்.


With the best compliments from:

GNANAMS STUDIO

CLOCK TOWGR ROAD,
JAFFNA.

With the best compliments from:

POOBALASINGAM
BOOK DEPOT

4A, Hospital Road,
Jaffna

With the best compliments from:

ESWARY HARDWARE
STORES

PROP K. PONNUTHURAI
K.K.S ROAD,
CHUNNAAKAM

With the best compliments from:

Nathan's

V.17 POWER HOUSE ROAD
MODEL MARKET
JAFFNA

# விஞ்ஞான முறை தொடர்பு பற்றிய ஓர் அறிமுகம்

விஞ்ஞானம் என்பது ஒரு வளர்ந்து வரும் துறையாகும். இவ் விஞ்ஞானத்தில் பல நூறு கண்டுபிடிப்புக்கள் உண்மைகள் என்பன கண்டறியப்பட்டு வந்தது மட்டுமல்ல அத்தகைய கண்டுபிடிப்புக்களும் உண்மைகளும் இன்றும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. இத்தகைய கண்டு பிடிப்புக்களையும் உண்மைகளையும் எடுத்து நோக்குவோமாயின் அவை பல படிமுறைகளைத் தாண்டி அத்தகைய படி முறைகளுக்குரிய தகுதிகளை பூர்த்திசெய்த பிற்பாடே வெளிப்படுத்தப்பட்டு இருக்கின்றன என்பதனை அறிய முடியும்.

விஞ்ஞான கண்டுபிடிப்புக்களாயினும் சரி உண்மைகளாயினும் சரி விதியாயினும் சரி அவைகள் எல்லாம் "விஞ்ஞான முறை" (Scientific Methed) என்கின்ற மிக முக்கியமான செயன்முறையை கடந்தே பெறப்பட்டு இருக்கின்றன. இக் கட்டுரையின் நோக்கம் விஞ்ஞானமுறை என்றால் என்ன என்பதனை விளங்கிக் கொள்வதற்குரிய ஒரு அடிப்படை விளக்கத்தை தருவதேயாகும்.

விஞ்ஞான அறிவை தர்க்க செயன் முறையின் பிரகாரம் உறுதி செய்யும் ஓர் ஆய்வு முறையே விஞ்ஞான முறை எனப்படும். விஞ்ஞான முறையானது விஞ்ஞானப் பிரச்சனைகளுக்குத் தீர்வினை காணும் செயன்முறையின் ஒரு உயிரோட்டமான பங்களிப்பை வழங்குகின்றது. விஞ்ஞானத்தின் விதிகளையும், உண்மைகளையும், கண்டு பிடிக்க விஞ்ஞான அறிவை பரீட்சித்துப் பார்க்க இம் முறையானது உதவுகின்றது வரையறுக்கப்பட்ட சில ஒழுங்கு முறைகளை இது கொண்டு இருப்பதனால் விஞ்ஞானிகள்

T. சிவகுமார்
A/L 92 C
J. C. C.

நாம் கண்டுபிடிப்பவற்றை எல்லாம் இதனைக் கொண்டே பரிசோதிக்கின்றனர் . இவ் விஞ்ஞான முறையானது அவதானம் பரிசோதனை தரவுகளை சேகரித்தல் புள்ளி விபரம் போன்ற பல முறைகளோடு தொடர்புடையதாக இருக்கும். காள் பொப்பரின் பொய்மை காண் தகமைத்துவம் எண்ணீட்டு முறை விதி, உய்த்தறி விளக்கமுறை போன்றவைகள் விஞ்ஞான முறைக்கு உதாரணங்களாகும்.

இவ்விஞ்ஞான முறையானது பல ஒழுங்கான செயன்முறை கட்டங்களை கொண்டு இருப்பினும் ஒரு விஞ்ஞான முறையானது கீழ்வரும் 7 செயன் முறைகளையாவது குறைந்தபட்சமாக தன்னகத்தே கொண்டு இருக்க வேண்டும். அவையாவன

1. அவதானம்
2. பிரச்சினையை வரையறைப்படுத்தல்
3. தரவுகளை சேகரித்தல்
4. கருது கோள் அமைத்தல்
5. கருது கோள்களை வாய்ப்பு பார்த்தல்
6. கருது கோள்களை மெய்பித்தல்
7. விதிகளை அல்லது கொள்கைகளை அமத்தல்.

அவதானம்

விஞ்ஞானமானது அவதானத்தில் இருந்தே ஆரம்பிக்கின்றது. விஞ்ஞானமுறையின் ஆரம்பம், மையம், முடிவு ,போன்ற ஒவ்வொரு செயன் முறைகளிலும் முக்கியப் பண்பினை இது வகிக்கின்றது. இயற்கையில் நிலமைகள், நேர்வுகள், என்பவற்றின் மீது ஒரு குறிக்கோளுடன் செயற்படுகின்ற புலன் காட்சியே அவதானம் எனப்படுகின்றது. விஞ்ஞான ஆராய்ச்சிக்கு அடிப்படையாக விளங்குபவை இவ்வாறான இயற்கையில் உள்ள பொருட்களும் நிகழ்ச்சிகளுமேயாதலால் இவைகளை நாம் ஒரு குறிக்கோளுடன் பார்க்கின்ற போது ஏன்? எப்படி? எவ்வாறு? என்கின்ற வினாக்கள் எழுப்பப் படுகின்றன இவ்வாறான வினாக்களே விஞ்ஞான ஆராட்சியை ஆரம்பிக்கின்றது. அவதானிக்க முடியாதவற்றை ஒரு போதுமே விஞ்ஞான ரீதியாக ஆராய முடியாது. ஆகையால் ஐம்புலன்களினால் நேரடியாக அவதானிக்கக் கூடியவற்றையே ஆராய முடியும். எமது ஐம்புலன்கள் ஒரு வரையறுக்கப்பட்டவை எமது ஐம்புலன்களின் ஆற்றல்களுக்கு அப்பாற்பட்ட சந்தர்ப்பங்களில், நாம் அவதானம் தொடர்பான கருவிகளை பயன்படுத்த முடியும்.

உ + ம்) அப்பிள் மரம் ஒன்றில் இருந்து அப்பிள்பழம் ஒன்று நிலம் நோக்கி விழுவதை அவதானித்த சேர் ஐசாக் நியூட்டன் இவ் அப்பிள் நிலம் நோக்கி விழுந்தது ஏன் என்ற பிரச்சனை எழுப்பினார்.

பிரச்சனையை வரையறை செய்தல்.

பிரச்சனையை வரையறை செய்தல் என்னும் போது அவதானத்தின் போது எம்மால் எழுப்பப்பட்ட பிரச்சனை என்ன என்பது பற்றி ஒரு தெளிவான கருத்தை கொண்டு இருத்தல் வேண்டும். என்பதனை குறிக்கும். எம்மால் வரையறை செய்யப்பட்ட பிரச்சனை யானது. தொடர்ந்து ஆராயக் கூடியதாக இருக்க வேண்டும் அதாவது அனுபவ சோதனைகள் மூலம் ஆராயக் கூடியதாக இருக்க வேண்டும்.

(உ + ம்) அப்பிள் பழம் மட்டும்மன்றி. மேல் நோக்கி எறியப்படும். பொருட்கள் யாவும். நிலம்

நோக்கி விழுவது ஏன் என்று அது தொடர்பான தெளிவான கருத்து இருக்க வேண்டும்.

தரவுகளை சேகரித்தல்.

தரவுகளை சேகரித்தல் என்னும் போது ஆராயப்பட்டு இருக்கின்ற. பிரச்சனைகள் தொடர்பான தரவுகளை பெறுவதனை குறிக்கும். முதன் முதலில் எம்மால் அப் பிரச்சனைகள் தொடர்பாக அவதானிக்கப்பட்ட சிலதரவுகளை பெற்று இருப்போம். ஆனால் ஆராட்சி தொடர வேண்டுமாயின். அத்தகைய தகவல்கள் மட்டும் போதாது. அது தொடர்பிலான பல தகவல்களைப் பெறவேண்டும். எனவே மேலும் அவதானங்களை மேற்கொள்ளல் மூலமோ அல்லது ஏனைய தகவல்கள் திரட்டும் முறைகளை நாடுவதன் மூலமோ தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறான செயன்முறைகள் கொண்டதனையே தரவுகளை சேகரித்தல் என்பர்.

கருது கோளை அமைத்தல்.

பிரச்சனை தொடர்பான தரவுகள், தகவல்கள் என்பன சேகரித்த பிற்பாடு அப்பிரச்சனைக்காக தற்காலிகமாக ஒரு தீர்வானது முன்வைக்கப்படும். இதனையே கருதுகோள் அமைத்தல் என்பர் அதாவது ஒரு நேர்வு பற்றி அல்லது நிகழ்ச்சி பற்றி ஆரம்பத்தில் உருவாகும். தற்காலிகமான ஊகத்தை குறிக்கும். இது இயற்கையை அவதானிப்பதன் ஊடாக ஆய்வாளன் மனத்தில் உருவாகிக் கொள்ளும் அனுமானம் ஆகும். இது அனுபவ ரீதியானதாக அமைதல் வேண்டும். இக் கருதுகோள் அமைப்பு செயன்முறையே, விஞ்ஞான முறையில் முக்கியபங்கு வகிக்கின்றது. கருதுகோள்களை அமைப்பதும் அமைத்த கருதுகோளை நிறுவிக் காட்டுதலுமே விஞ்ஞான முறை என்று வரைவிலக்கணம் கொடுப்பதில் இருந்து இதன் முக்கியத்துவம் வெளிப்படுகின்றது. இவ்வாறு அமைக்கும் கருதுகோள்கள் சரியாக அல்லது பிழையாக அமையலாம்.

(உ + ம்) பால் கெட்டுப் போவதற்கு தேவதையின் சாபமே காரணமென அனுமானிப்பது அனுபவத்திற்கு பொருந்தாது. பதிலாக ஒருகிருமிகாரணமென அனுமானிப்பது அனுபவரீதியான தாகும். லூயி பாஸ்ரர் பால் கெட்டுப் போவதற்கு ஒரு வைரசே காரணமாதல் வேண்டு மென முதலிலே அனுமானித்தார்.

கருது கோளை வாய்ப்பு பார்த்தல்

கருதுகோளை வாய்ப்பு பார்த்தல் என்பது அனுபவ போதனைகள் மூலம் உடன்பாட்டு வடிவில் அமைக்கப்பட்ட கருதுகோள்களை விளக்குகின்ற செயற்முறையை குறிக்கும் அதாவது கருதுகோள்களை சோதனை செய்யும் காலமாகும் அது ஆய்வு கூட பரிசோதனை முறையாகவும் அமையலாம். புறவயச் சோதனை முறையாகவும் அமையலாம். வாய்ப்பு பார்க்கப்படுவது கருது கோள்களை உறுதியாக நிறுவுவதற்கு அவசியமானதாகும்.

கருதுகோள்களை மெய்ப்பித்தல் அல்லது கருதுகோள்களை நிறுத்தல்

கருதுகோள்களை மெய்ப்பித்தல் என்பது குறித்த பிரச்சனைக்குரிய தீர்வு இக்கருதுகோளே அன்றி வேறு எக் கருதுகோள்களும் இல்லை என்ற முடிவுக்கு வருவதை குறிக்கும் குறித்த பிரச்சனை தொடர்பான தீர்வுக்கு இக் கருதுகோள் ஏற்புடையதாக அமையும் இடத்திலே இது குறித்த ஒரு பிரச்சனைக்குரிய தீர்வாக ஏற்கப்படும். அதாவது கருதுகோள்கள் கொள்கை விதி வடிவத்தை இங்கு தான் பெறுகின்றன இம் முறையில் கருதுகோள்களை இரண்டு வழிகளில் நிறுவலாம்.

1. கருதுகோள்களை நேர் முறை மூலம் நிறுவுதல்.

2. கருது கோள்களை நேரல் முறை மூலம் நிறுவுதல்.

விதிகள் அல்லது கொள்கைகளை அமைத்தல்

தீர்வாக ஏற்கப்பட்ட கருதுகோள்களை கொண்டு அப்பிரச்சனை தொடர்பான விதிகளை அல்லது கொள்கைகளை அமைப்பதனை இது குறிக்கின்றது

(உ + ம்) மேல் நோக்கி எறியப்படும் பொருட்கள் யாவும் நிலம் நோக்கி விழுவதற்கு காரணம் என்ன என்ற பிரச்சனைக்கு புவியீர்ப்பே என்ற கருதுகோளானது மேற் கொள்ளப்பட்ட அனுபவ சோதனைகளுக்கு இணங்கியமையால் இக் கருதுகோளை கொண்டு புவியீர்ப்பு விதி நிறுவப்பட்டதாக குறிப்பிடலாம்.

விஞ்ஞான முறை தொடர்பாக சிறிய தொரு அறிமுகமே மேல் தரப்பட்டது ஆனால் விஞ்ஞான முறை பற்றிய பூரண விளக்கமாக இது அமைய மாட்டாது. விஞ்ஞான முறை பற்றிய நவீன முறையிலாளர்களுடைய பல கருத்துக்கள் புதிதுபுதிதாக கண்டறியப்பட்ட வண்ணமே உள்ளது. விஞ்ஞான முறை பற்றிய தொரு அறிமுகமே இதுவாகும்.

---

உலகின் முதலாவது

## மோட்டார் வண்டி

(பெற்றோலில் இயங்கியது) 1885 ல்

பென்ஸ் என்னும் ஜெர்மனியரால்

அமைக்கப்பட்டது.

# மதி ஜுவல்லரி

226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



# யாழ் ரேட் சென்ரர்

11, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
பாட்டா ஏஜன்சி,
யாழ்ப்பாணம்.



# லிங்கம் கூல்பார்

வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.



# மகாராணி ரெக்ரைல்ஸ்

50,
பெரியகடை.





யாழ்ப்பாணம்

# குக்ஸ் ஸ்ரோர்ஸ்

ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

# பிருந்தா ஜுவல்லர்ஸ்



301 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

# அம்பிகா ஜுவெல்ஸ்

நகை இரத்தின வியாபாரம்



59, கன்னாதிட்டி வீதி
யாழ்ப்பாணம்

சகல விதமான மணிக்கூடுகளும்
திருத்துவதில் முன்னோடி

# ரதீ வோஜ் வேக்ஸ்

42, 44, 46 கே. கே. எஸ் றோட்
யாழ்ப்பாணம்

அசட்டுத்தனமான வீண் கேள்விகளைத் தவிர்த்து விடு:
அவை சச்சரவுகளையே பிறப்பிக்கின்றன.


With the best Compliments From:

CITY AGENCY

NO 158, STANLY ROAD,
JAFFNA.

P. I. FERNANDO

Special Optical and
Dental Works




542, HOSPITAL ROAD,

JAFFNA.

With the best compliments from:

# S. M. FERNANDO

Qualified Opticians



580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)

JAFFNA.

---

*Compleate Range Of Sports Wear*

*and Sports Equipements Visit*

# YARL ENTER PRISES

NO 516, HOSPITAL ROAD,

JAFFNA.

# அபிவிருத்தி புவியியலின் பங்கு

சோ சிவநேசன்
G. C. E, A / L 93 C

பூமியை பற்றி ஆராய்கின்ற இயலே புவியியல் எனப்படும். ஆதியில் புவியியல் பௌதீக இயல்புகளை மட்டுமே விபரித்தது. ஆனால் நவீன புவியியல் மனிதனுக்கும் பூமிக்கும் இடையிலான தொடர்பை காரண காரியத்துடன் விபரிக்கின்றது. அந்த வகையில் பௌதீக புவியியல், மானிட புவியியல், வணிக புவியியல், அரசியல் புவியியல் ஆகியன தோற்றம் பெற்றன. இவ் வகையில் உருவான புதியதொரு துறையே அபிவிருத்தி புவியியல் ஆகும்.

மனிதனின் பொருளாதார நடவடிக்கைகளான உற்பத்தி வர்த்தகம் நுகர்வு முதலியவற்றை பொருளாதார புவியியல் விபரிக்கிறது. இத்தகைய பொருளாதார புவியியலில் வளர்ச்சியுற்ற ஒரு துறைதான் அபிவிருத்தி புவியியலாகும். 2 ம் உலகமகா யுத்தத்தின் போது நாடுகளின் பொருளாதாரம் சீரழிந்து காணப்பட்டது. இக் காலத்தில் தான் அபிவிருத்தி என்ற எண்ணக்கரு வளர்ச்சியடையத் தொடங்கியது. மனிதனின் விஞ்ஞான தொழில்நுட்பவிருத்தியின் காரணமாக பெருமாற்றம் கண்டுள்ளது. இதனால் சூழலை மாற்றியமைக்கும் வல்லமை பெற்றிருக்கின்றன இதன் வடிவம் தான் இன்று பாலைவனங்களில் மேற்கொள்ளபட்டிருக்கும் விவசாயஉற்பத்தியும், விலங்கு வேளாண்மையும், கடலில் மிதக்கின்ற விளையாட்டு திடல்களும்: குடியிருப்புக்களும், பயிர்ச்செய்கை போன்ற செயற்பாடுகளுமாகும்.

ஒரு சில பகுதியில் ஏற்பட்ட இத்தகைய முன்னேற்றம் எமது வளர்ச்சி காரணமாக ஏனைய பகுதிகளுக்கும் பரவ ஆரம்பித்ததனால் பொருளாதார வளர்ச்சி பல மாற்

றங்களுக்கு உட்பட்ட ஏதுவாயிற்று ஒவ்வொரு நாடுகளும் அமைந்துள்ள பூகோள கேந்திரஸ்தானமே வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்துகிறது. ஆனால் விதி விலக்காக யப்பான்- ரஷ்யா, ஆகிய நாடுகள் காணப்படுகின்றன. இந்த கேந்திரஸ்தான நில வேறுபாடுகளின் அடிப்படையில் நாடுகளை இரண்டாக வகுக்கலாம். (1) விருத்தியடைந்த நாடுகள்
(2) குறைவிருத்தி நாடுகள்
இவ்வாறு நாடுகளின் பிரதேச பதப்பாய்விற்கு அபிவிருத்தி புவியியல் என்றும் புதிய தொரு குறிகாட்டி கிடைத்துள்ளது. இத்தகைய அபிவிருத்தி புவியியல் ஆனது இடத்துக்கிடம் மாறுபடும். அபிவிருத்தி நிலைக்குரிய புவியியல் காரணிகளை ஆராய்கிறது அதுமட்டுமல்லாமல் அபிவிருத்திக்கு சாதகமாக அமைந்த காரணிகளையும் பாதகமாக அமைந்த காரணிகளையும் புதிய தொழில் நுட்பத்தின் மூலம் புள்ளி விபர தரவுகளை திரட்டி அபிவிருத்தியை அளவிடுவதை இலகுவாக்கியுள்ளது. இந்த அபிவிருத்தியானது ஆள்வீத வருமானத்தையும் பௌதீக வாழ்க்கை பண்பு சுட்டெண்ணையும் பயன்படுத்தியே அளவிடபடுகிறது.

மக்களின் உணவு, உடை, உறையும் எண்ணங்கள், மதம், பண்பாடு, நாகரீகம், ஒழுக்கநெறி என்பவற்றை யெல்லாம் பௌதீக சூழலே தீர்மானிக்கிறது. எனவே ஒரு நாட்டின் அபிவிருத்தியுடன் பௌதீக சூழல்கள், புவியியல் நிலையம், தரைத் தோற்றம், காலநிலை, கனிப்பொருள்வளம், நீர்வளம், மண்வளம், இயற்கைத்தாவரம், விலங்குகள், போன்றவை தொடர்பு படுகின்றன. இந்த வகையில் மனிதனும் பௌதீக சூழலில் ஒரு அங்கமேயாவான் ''மனிதன் புவியில் வாழ்பவன் மட்டுமல்லன் அவன் புவியின் புற அமைப்பை மாற்றி அமைக்கின்ற சிற்பியுமாவான்'' என ரஸல்சிமித் கூறியுள்ளமை இவ்விடத்தில் நோக்கதக்கது.

இவ்வாறு உலக நாடுகளின் அபிவிருத்தியில் பௌதீகசூழல் முக்கிய இடம் பெற்றாலும் விஞ்ஞான அறிவு, தொழில்நுட்ப வளர்ச்சி, நாகரீகநிலை, சமூக பண்பாடு, அரசியல், என்பவற்றில் விருத்தி ஏற்படுவதனையே கருதலாம். இந்த வகையில் ''யுனஸ்கோ'' நிறுவனத்தின் வரைவிளக்கம் கவனிக்கத்தக்கது. ''சனத்தொகை பொருளாதார காரணங்களில் மட்டுமன்றி சமூகபண்பாடு, அரசியல், ஒழுக்கநெறி ஆகிய வற்றிலும் மாற்றங்களும் முன்னேற்றங்களும் ஏற்படுகின்ற ஒரு செயன் முறையினை அபிவிருத்தி என கூறலாம்.

ஒரு நாட்டின் குறைவிருத்திக்கு புவியியல்தன்மை, தரைத் தோற்றம், காலநிலை' என்பன பாதகமாக அமைவதுடன் அன்னியரின் ஏகாதிபத்திய ஆட்சிக்கு உட்பட்டமையாலும் அவற்றின் வளர்ச்சி பின்னடைந்துள்ளது. உதாரணமாக இலங்கை, பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு உட்பட்டு இருந்த காலத்தில் தன்னிறைவற்ற பொருளாதாரமாக காணபட்டதுடன் கைத்தொழிற் துறை பாதிப்படைந்திருந்தது. இதனால் இன்னும் கூட பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிட்ட இலக்கை அடைய முடியாதுள்ளது.

இவ்வாறு நாட்டுக்கு நாடு பிரதேசத்திற்கு பிரதேசம் பொருளாதார அபிவிருத்தி வேறுபட்டு காணபடுகின்றன. பேராசிரியர் மிர்டால் ''(PROF MYRDAL) என்பவர் இதனை பின்வருமாறு கூறுகிறார். ''ஒரு பிரதேசம் வறியதாக இருப்பதற்கு காரணம் நாடு வறியதாக இருப்பதே'' என்றார் வறிய ஒரு பிரதேசம் மக்களுக்கு உணவையும் வேலை வாய்ப்புக்களையும் அளிக்கமுடியாது அதனால் திறமைசாலிகளும், மூளைசாலிகளும் அத்தகைய பிரதேசத்தை விட்டு வெளியேறி வருகிறார்கள். அதனால் அபிவிருத்தி பாதிப்படைகிறது.

அபிவிருத்தி இடவேறுபாடுகளை எடுத்து நோக்கும் போது சில பிரதேசங்களில் அபிவிருத்திவிதம் கூடுதலாகவும், சிலபிரதேசங்களில் குறைவாகவும் உள்ளன இத்தகைய வேறுபாட்டை ஆராய்கின்ற போது. ஜோன்நர்சாட் (JOHN OR HARD) பின்வருமாறு கூறுகின்றார் ''அபிவிருத்திக்குரிய பிரதேசம் ஒன்றுபடுத்தும் உள்ளீடாக இருக்க வேண்டும். அந்த பிரதேசத்திற்குள் தீவிர முரண்பாடுகள் காணப்படக்கூடாது. அபிவிருத்தி திட்டமிடுபவர்களின் திறமையையும், பயிற்சியையும் சோதிக்கும் வகையில் இருக்கக்கூடாது'' என வரையறுத்தார் எனினும் ஆய்வுவசதி கருதி அரசியல் பிரிவுகளே அபிவிருத்தியை மதிப்பீடு செய்வதற்குரிய பிரதேச எல்லைகளாக கொள்ளப்படுகின்றன.

உலகின் இன்றைய பொருளாதார அமைப்பில் இருதெளிவான அமைப்பினை நாம் காணமுடியும். அவையாவன

(1) உலகின் சில நாடுகள் பொருளாதாரத்திலும், தொழில் நுட்பத்திலும் முன்னேறியுள்ளன. அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வாக உள்ளது.

(2) உலகின் வேறுசில நாடுகள் பொருளாதார நிலையில் மிகவும் தாழ்ந்தனவாக இருக்கின்றன. இந்நாடுகளின் வாழ்க்கைத் தரம் மிகவும் குறைவாக இருக்கின்றது. மக்கள் வறியவர்களாக உள்ளார்கள்.

இந்த இரு தெளிவான வேறுபாடுகளின் அடிப்படையில் உலக நாடுகளை அபிவிருத்தி அடைந்த நாடுகள், அடைந்து வருகின்ற நாடுகள் என இரண்டாக வகுக்கும் போது. அபிவிருத்தி அடைந்த நாடுகளை மேலும் இரண்டாக நோக்கலாம்.

(அ) 1 ம் மண்டல நாடுகள்:-

இதில் முதலாளித்துவ பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகள் காணப்படுகிறது.

(உ + ம்) ஐக்கிய அமெரிக்கா, யப்பான், கனடா, ஸ்பெயின், பிரான்ஸ், ஜேர்மனி, டென்மார்க்போன்ற நாடுகள் அடங்குகிறது.

(ஆ) 2 ம் மண்டல நாடுகள்:-

இதில் சமதர்ம பொருளாதாரத்தை பின்பற்றுகின்ற நாடுகள் காணப்படுகிறது.

(உ + ம்) கங்கேரி, றுமோனியோ, செக்கோசெலாவியா, சீனா, போன்ற நாடுகள் அடங்கும்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளை மேலும் பின்வருமாறு வகுக்கலாம்.

(அ) 3 ம் மண்டல நாடுகள்;-

இதில் கலப்பு பொருளாதாரத்தை பின்பற்றுகின்ற நாடுகள் காணப்படுகிறது.

(உ + ம்) இலங்கை, இந்தியா, எகிப்து, பாகிஸ்தான், பங்களாதேஷ், போன்ற நாடுகள் இதில் அடங்கும்.

(ஆ) 4 ம் மண்டல நாடுகள்:-

உயர் வருமானம் பெறுகின்ற எண்ணை வளநாடுகளாக இது காணப்படுகிறது. இங்கு குறிப்பாக சமூக அபிவிருத்தி தன்மைகள் பாதிப்படைந்துள்ளது.

(உ + ம்) கட்டார், ஐக்கிய அரபு எமிரேற், குவைத், ஈராக் போன்ற நாடுகள் இதில் அடங்குகிறது. மேலும் வியோக்ரைம்ஸ் என்ற பத்திரிகை உலகநாடுகளில் மிகவும் வறியநிலையில் உள்ள நாடுகளை 5 ம் மண்டல நாடு என பாகுபடுத்தியுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ + ம்) சாட், மாலி, சோமாலியா, எதியோப்பியா, சூடான் போன்ற நாடுகளை குறிப்பிடலாம்.

நாட்டின் அபிவிருத்தியை அளவிடுகின்ற குறிகாட்டிகளை பாரம் பரியமான, பாரம் பரியமற்ற குறிகாட்டிகள் என பாகுபடுத் தலாம். இவ்வாறாக பின்வரும் குறிகாட்டி கள் காணப்படுகின்றன.

(அ) மொத்த தேசிய உற்பத்தி:-
மொத்த தேசிய உற்பத்தி என்பது. ஒரு நாட்டின் குறிக்கப்பட்ட காலப் பகுதியில். உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள். சேவைகளின் பெறுமதி யாகும் இதனை நாட்டின் மொத்த சனத்தொகையால் பிரித்தால் தலைக் குரிய தேசிய உற்பத்தியை கணிக்கலாம் மேலும் நாடுகளை செல்வந்தநாடுகள், மத்திய வருமான நாடுகள், வறிய நாடுகள் என வகுக்கலாம். தலைக்குறிய மொத்த தேசிய உற்பத்தி (தலா வருமானம்) 3500 அ டொ உயர்வாக காணப்படின் பொருளாதார அபிவி ருத்தி அடைந்த நாடுகள் எனவும் 3500 (அமெரிக்கடொலர்) குறைவாக காணப் படின் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் எனவகுக்கலாம்.

(ஆ) சனத்தொகை:-
அபிவிருத்தி அடைந்த நாடுகளில் சனத்தொகை குறைவாகவும். அபிவி ருத்தி அடைந்துவரும் நாடுகள் சனத் தொகை மிக அதிகமாகவும் காணப்படு கிறது.
(உ + ம்) யப்பான், சீனா

(இ) பிறப்பு இறப்புவிகிதம்:-
அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பிறப்பு இறப்பு விகிதம் கூடுதலாக உள்ளது. ஆனால் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பிறப்பு இறப்புவிகிதம் கூடுத லாக உள்ளது. ஆனால் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பிறப்பு இறப்பு விகிதங்கள் குறைவாகவும் உள்ளன.

முறையே (உ + ம்)
பிறப்பு 1000 : 33 இறப்பு 1000 : 12
பிறப்பு 1000 : 15 இறப்பு 1000 : 10

(ஈ) சிசுமரணவிகிதம்:-
குறிக்கப்பட்ட ஒரு காலத்தில் 1000 பேருக்கான சிசுக்களின் இறப்புகளை குறிக்கின்றது. இது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அதிகமா கவும். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் குறைவாகவும் காணப்படுகிறது.
(உ + ம்) எதியோப்பியா 140 சிசு.
அமெரிக்கா 11 சிசு

(உ) உணவின் கலோரி பெறுமானம்.
அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடு களில் வாழ்கின்ற மக்கள் 3000 கலோரிக்கு குறைவான உணவினை உட்கொள்ளும் வேளையில் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் வாழும் மக்கள் 3000 கலோரிக்கு மேற்பட்ட உணவினை உட்கொள்கிறார்கள்.

(ஊ) ஆயுட்காலம்:-
மேலே கூறப்பட்ட உணவின் அளவு தன்மை. சுகாதாரத் துறையின் வளர்ச்சி, பழக்கவழக்கங்கள் என்பன ஆயுட் காலத்தின் தன்மையை தீர்மா னிப்பதால்.
(உ + ம்) யப்பான் 74 வருடம்,
இந்தியா 57 வருடம், ஆக காணபடுகிறது. இதன்படி அபிவிருத்தி அடைந்த நாட்டில் ஆயுட்காலம் கூடுதலாகவும், அடைந்து வருகின்ற நாட்டில் ஆயுட்காலம் குறைவாகவும் காணப்படுகிறது.

(எ) தங்கி வாழ்வோர்:-
15 வயதுக்கு கீழ்பட்டவரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களும் (பாடசாலை மாண

வர்கள் தவிர )இதில் அடங்குகின்றனர். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் தங்கி வாழ்வோர் எண்ணிக்கை குறைவாகவும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் தங்கி வாழ்வோர் எண்ணிக்கை கூடுத லாகவும் இருப்பதற்கு சனத்தொகை பெருக்கமும் அதே நேரத்தில் கைத் தொழில் சாலைகளின் வளர்ச்சி குறை வுமே காரணமாக அமைகிறது.

(ஏ) கைத்தொழில் விருத்தி:-
அபிவிருத்தி அடைந்த நாடுகள் கைத் தொழில் பொருட்களை உற்பத்தி செய்ய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் விவசாய பொருட்களையே உற்பத்தி செய்கிறது.

இக் காரணிகளை விட கல்வி அறிவு, வேலைவாய்ப்புகள், போக்குவரத்து வசதி களும் வலுநுகர்வும், வர்த்தக விருத்தி, நகராக்க சுட்டெண் போன்றனவும் அபிவி ருத்தியை பற்றி ஆராய்கின்ற போது கையா ளப்படல் வேண்டும்.

இவ்வாறாக அபிவிருத்தி என்ற எண்ணக்கரு தற்போது உலக நாடுகளை பாகு படுத்த உதவுகிறது. ஆனாலும் மேற் கூற பட்டவற்றை நாம் எடுத்து நோக்கும் போது அபிவிருத்தி புவியியலானது காலத்துக்கு காலம் ஏற்படுகின்ற மாற்றங்களையும் அதன் பிரதி விளைவுகளையும் நெட்டத் தெளிவாக எடுத்துரைக்கிறது.

ஒரு நாட்டின் நிலையை கேந்திர முக்கியத்துவம், பௌதீக வளங்கள், சனத்தொகை. என்பன அந்ந ாட்டின் அபிவிருத்தியோடு மிக நெருங்கிய தொடர்பை கொண்டுள்ளது. எனவே புவியியலானது நாட்டின் அபிவிருத் தியில் மிக முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாக இன்று கருதப்படுகிறது.

---

மண்டியிட்டிருக்கும் பெரிய மனிதரை விடத் தன் காலில் நிற்கும் உழவனே மேலானவன்


# தயவு செய்து

# எமது விளம்பரதாரர்களை

# ஆதரியுங்கள்!

எதையும் அதிகம் நேசித்துவிடாதே - அதை இழந்துவிட்டால் தாங்கிக் கொள்ள முடியாது.


EVERY SUCCESS and PROSPERITY

# BE YOURS

Sincerely Wishes From

GLOBAL ENGINEERING TECHNOLOGY SERVICE

NO 32, KACHCHERI NALLUR ROAD,

JAFFNA.

# உள்ளூர் உற்பத்தியில் உள்ளூர் மூலப் பொருட்களின் கலப்புக்கும் கையாளுகைக்குமான வாய்ப்புக்கள்.

எமது மன்றத்தால் 28 - 11 - 91 அன்று யாழ், நல்லூர் கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதலாவது இடத்தைப்பெற்று வர்த்தகக் கிண்ணத்தை தட்டிச்சென்ற இந்து மகளிர் கல்லூரி மாணவியினுடைய கட்டுரை.

உற்பத்தித்துறை என்னும் போது விவசாயம், கைத்தொழில், சேவைகள் என்பவற்றைஉள்ளடக்கியதாகும். இவ்வாறு நாம் உற்பத்தியை மேற் கொள்ள வேண்டு மரனால். விவசாயமும் கைத்தொழிலும் சேவையும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த வகையில் உற்பத்தியில் ஈடுபட வேண்டும். அதாவது விவசாயத்தில் பாவிக்கப்பட்ட மூலப் பொருட்கள் முடிவுப் பொருட்களாக மாற்றப்பட்டு அம் மூலப் பொருட்கள் கைத்தொழில் துறையின் மூலப் பொருட்களாகக் கொண்டு கைத் தொழில் முயற்சியில் ஈடுபடும் போது சேவைத்துறையும் இவற்றில் பெரிய பங்கினை வகிக்கக் கூடியதாகயிருக்கும்.

இந்தவகையில் நாம் உள்ளூர் உற்பத்திக் கான மூலப் பொருட்களைக் குறிப்பிடும் போது அவற்றில்.

(1) விவசாயத்துறை சார்ந்த மூலப் பொருட்கள்.

(2) கைத்தொழில் துறை சார்ந்த மூலப் பொருட்கள்.

என இரண்டாக வேறுபடுத்திப்பாக்கலாம்.

விவசாயத் துறைஎன்பது எம் நாட்டின் முறுகெலும்பு போன்றது. இது தான் எமது நாட்டின் முக்கியமான அத்தியாவசியத் தேவையைநிறைவேற்றும் ஒரு துறையாகும்.

மஞ்சுளாதேவி தனபாலன்
ஆண்டு 13 C
யாழ்ப்பாணம்.
இந்துமகளிர் கல்லூரி.

எமது நாட்டில் அனேகம் கிராமப் புறங்களே காணப்படுகின்றன. இக் கிராமப் புறமக்கள் விவசாயத்தையே முக்கிய தொழிலாகக் கொள்கின்றன. எனவே இவர்களின் விவசாயத்துக்கு மேலும் உற்பத்தியைப் பெருக்குவதற்கு உள்ளூர் மூலப் பொருட்களைநாம் நவீனப்படுத்திச் செயல்படலாம்.

அடுத்துப் பனையை எடுத்துக் கொண்டால் இன்றைய இக்கட்டான இந்தச் சூழ்நிலையில் பனை பெரிதும் உதவியளிக்கின்றது. இந்தப் பனையின் மூலம் மக்கள் பெரும் பயனை அனுபவிக்கின்றனர். உள்ளூர் மூலப் பொருளுக்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும். அதாவது பனையிலிருந்து • பனங்காயைப் பயன்படுத்தி பனாட்டு, இனிப்பு வகைகள் போன்றனவும். வீட்டுப் பாவனைக்குத் தேவையான பாய், பெட்டி, கடகம், போன்றனவும் வீட்டுக்குரிய அலங்காரப் பொருட்களைத் தயாரிக்கவும் பனை உதவியளிக்கின்றது. அத்துடன் மிகவும் வறியமக்கள் இப் பனம் பழத்தையும் பனங்கிழங்கையும் ஒடியல்மா என்பவற்றையுமே தமது நாளாந்த உணவாகவும் பயன்படுத்துகின்றனர். எனவே பனை வளத்தைக் கொண்டு மேலும் பல கண்டுபிடிப்புக்கள் மூலம் உள்ளூரிலே உற்பத்தியை மேற்கொள்வதற்கு வாய்ப்பளிக்கின்றது. எனவே பனையை உள்ளூர் உற்பத்திக்கு மிகவும் சிறந்த மூலப்பொருளாகக் கொள்ளலாம்.

அடுத்ததாக எல்லா வீடுகளிலும் தோட்டங்களிலும் மிகவும் மலிந்தும் நிறைந்தும் காணப்படுகின்ற வாழைமரங்களை எடுத்துக் கொள்வோமானால் பனையைப் போன்றே இதுவும் பெரும் பயனைத் தரக்கூடியதாகவுள்ளது. அதாவது வாழைமரத்தின் நாரைப் பயன்படுத்திக் கயிறு திரிக்கவும் வீட்டுப் பாவனைக்குத் தேவையான கைப்பை, தொப்பி போன்றவற்றைத் தயாரிக்கவும் இது பயன்படுகின்றது.

அத்துடன் தென்னையை எடுத்துக் கொள்வோமானால் இந்தத் தென்னை மூலம் கிடைக்கும் தேங்காயில் தேங்காய்ப் பால் மா போன்றவற்றைத் தயாரிக்கலாம். தேங்காய்எண்ணெய் இந்தத் தேங்காய்எண்ணெயைப் பயன்படுத்தி சவர்க்காரம் போன்றவற்றைத் தயாரிப்பதற்கு ஊக்கமளிக்கக் கூடியதாகவுள்ளது. அத்துடன் தென்னோலையைப் பின்னி விற்பனை செய்வதற்கும் தென்னந்தும்பில் கயிறுதிரித்தல், தும்புத்தடி செய்தல் போன்றவற்றிற்கும் தென்னை ஓர் உள்ளூர் உற்பத்திக்கு ஒரு சிறந்த மூலப் பொருளாகக் கொள்ள முடிகிறது.

இவை விவசாயத் துறையுடன் சம்மந்தமான உள்ளூர் மூலப் பொருட்களாகும். இனிக் கைத்தொழில் துறையுடன் இவற்றைச் சம்மந்தப்படுத்திப் பார்க்கும் போது கைத்தொழில் துறையில் உள்ளூர் மூலப் பொருளாகக்கொள்ளக்கூடியவை பலவாகும் அவற்றில்

கடலை எடுத்துக் கொண்டால் கடல் ஒரு சிறந்த உள்ளூர் மூலப்பொருளாகும். அதாவது நாட்டின் நன்கொடை என்றே கூறலாம். கடலில் மீன் பிடித்தல், முத்துக் குளித்தல், போன்ற தொழில்களை ஊக்குவிப்பதன் மூலம் உற்பத்தித்துறையை மேலும் வளர்ச்சியடையச் செய்யலாம். இக் கடற்கரையிலுள்ள உப்பு போன்றன இன்றைய பெரிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கும் அளவுக்குச் சிறந்த மூலகங்களாகும் இந்த உப்பைப் பயன்படுத்தி மருத்துவத் தேவைகள் வீட்டுத்தேவைகள் போன்றவற்றைச் செய்யக் கூடியதாகவுள்ளது.

அடுத்து சீமெந்து உற்பத்தியை எடுத்துக் கொள்வோமானால் சீமெந்தை உருவாக்கு

வதற்கான மூலப் பொருட்களான சுன்னாம்பு முருகைக்கல் போன்ற வேறும்பல மூலகங்கள் உள்ளூரில் காணப்படுகின்றன. எனவே இந்த மூலப் பொருட்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தக் கூடியவாறு அந்த மூலப் பொருட்கள் காணப்படும் இடங்களிலே தொழிற்சாலைகளை நிறுவி சீமெந்து உற்பத்தியை மேற் கொள்வதன் மூலம் தொழில் வாய்ப்புக்களையும், வருவாயையும், ஏற்படுத்தக் கூடியதாயிருக்கும். அத்துடன் சுன்னாம்பைப் பயன்படுத்தி இன்று உள்ளூரிலேயே தயாரிக்கப்படும் சோக்கட்டி என்பன குறிப்பிடத் தக்கதாகும்.

அடுத்துக் களிமண்ணை எடுத்துக் கொள்வோமானால் இவை உள்ளூரில் நிறைவாகக் கிடைக்கக் கூடிய ஒரு பொருளாகும் இந்தக் களிமண்ணைப் பயன் படுத்தி சட்டி, பானை ஓடு, செங்கல், போன்ற பாரிய உற்பத்திகளை நாம் மேற் கொள்வதற்கு இவை பெரிதும் சிறந்த மூலகங்களாகக் கொள்ளப் படுகின்றன.

அத்துடன் இல்மனைற்று சிலிக்கா எனப் படும். கண்ணாடி செய்யப் பயன்படுத்தப் படும் மணல் என்பன இன்று சிறிதளவான உற்பத்தியிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே இவற்றைப் பாரியளவில் பயன்படுத்தித் தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலம் இவற்றையும் உள்ளூரில் சிறந்த மூலப் பொருட்களாகக் கொள்ளலாம்.

அடுத்து காங்கேசன் துறைப்பகுதியில் எண்ணெய்வளம் உண்டு என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஆனால் இதற்கு பல கோடி செலவுகள் ஏற்படும். எனவே அச் செலவுகளுக்கு மேலான வருவாயைப் பெறத் தக்க முறையில் எண்ணெய்க் கிணறுகள் தோண்டும் முயற்சியில் ஈடுபட முடியுமானால் வேலைவாய்ப்புகள் என்பனவற்றுடன் எண்ணெயை உள்ளூரிலேயே பெறக் கூடியதாகவும் வேறு பல உற்பத்திகளை மேற்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும்.

இவற்றுடன் கால்நடை வளர்ப்பு கோழிப் பண்ணை என்பவற்றை எடுத்துக் கொள்வோமானால் இவை விவசாயத் துறையையே சார்ந்தவை எனினும் கால்நடை வளர்ப்பு மூலம் உள்ளூர் உற்பத்திக்கு பல மூலப் பொருட்கள் கிடைக்கின்ற அதாவது பாலைக் கொண்டு பால்மா தயாரித்தல் கோழிமுட்டை என்பவற்றை எடுத்தல் அத்துடன் இக் கால் நடைகளுக்கான தீனிகள் தயாரித்தல் போன்ற முயற்சிகளை மேற் கொள்வதற்கு உற்பத்திச் சாலைகளை நிறுவி உற்பத்தியை மேற் கொள்ளலாம்.

அத்துடன் கால் நடைகளுடைய சாணியை அதாவது கழிவுப் பொருட்களை ஒரு மூலப் பொருளாகக் கொண்டு உயிர் வாயு தயாரிக்கக் கூடியதாகவும் இந்த உயிர் வாயுவைக் கொண்டு மேலும் பல உற்பத்திகளைச் செய்யக் கூடியதாகவும் உள்ளது.

இவற்றுடன் உள்ளூர் மூலப்பொருளான வைக்கோலைப் பயன்படுத்திக் காகிதங்கள் தயாரிக்கலாம் வேறும் கார்ட்போட் மட்டைகள் போன்றனவும் நெல்லின் உமியைக் கொண்டு பலகைகள் போன்றவும் தயாரிக்கப் படுகின்றன. இவை கழிவுப்பொருட்கள் என்று கொள்ளப்பட்டாலும் இவை உற்பத்தியில் ஈடுபடும் போது சிறந்த மூலப் பொருட்களாகக் கொள்ளப்படுகின்றன.

இந்த வகையில் உள்ளூரில் உற்பத்திக்குக் பழங்கள் தயாரித்தல், பருத்தியைப் பதனிட்டு ஆடை தயாரித்தல், போன்றன கையாளக் கூடிய வழிமுறைகளாகும்.

இவற்றை உற்று நோக்கும் போது உள்ளூர் உற்பத்திக்குப் பயன்படுகின்ற மூலகங்களாகப் பனை, தென்னை, வாழை

போன்ற மரங்களும் வேறுபல விவசாயப்பயிர் வகைகளும் (தோட்டம்) கூறக்கூடியதாகவும், கால்நடை வளர்ப்புகளும் வைக்கோல் நெல் உமி என்பன வற்றைநக கொண்டும் உற்பத்தியில் ஈடுபடக் கூடியதாகவுள்ளது. இவற்றுடன் இயற்கைவளமான கடல், இல்மனைற்று, சிலிக்கா, சுண்ணாம்பு, களிமண் என்பனவும் உள்ளூர்மூலப் பொருட்களுக்குச் சிறந்த உதாரணங்களாவும் உற்பத்தியில் கையாளப்படுவதுமான மூலகங்களுமாகும்.

---

*சமாதானத்திற்காகக் கூட உன் சிறந்த இலட்சியங்களை சிறகடிக்க விடாதே.*


**மத்திய வணிகம் சிறக்க எமது நல்வாழ்த்துக்கள்**

கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக மக்களுக்கு

நியாயமான விலையில் தரமான பொருட்களை

விற்பனை செய்யும் தனித்துவம் வாய்ந்த

ஒரே ஒரு நிறுவனம்

# மணியம் வர்த்தக நிலையம்

(பலசரக்கு வியாபாரம்)

131, பஸ் நிலையம்
கொடிகாமம்:

உரிமையாளர்:
நா. சிவசுப்பிரமணியம்
உசன்
மிருசுவில்.

தரம் நாடுவோர் தவறாமல் நாடும் இடம்



உங்களது நயம், நம்பிக்கை
நாணயமுள்ள
தங்க வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்

லதா
நகை மாளிகை

தங்கப்பவுண் நகை வியாபாரம்
176 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

22, கரட் தங்கநகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்
உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள தங்க வைர நகைகளுக்கு
சிறந்தஸ்தாபனம்

இந்திரா ஜுவல்லறி



183, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

வாழ்வதற்காக உண்ண வேண்டும், உண்பதற்காக வாழக்கூடாது.

# நியூ சுபமாலா

## மோட்டோர்ஸ்

மோட்டார் வாகன உதிர்பாக விற்பனையாளர்கள்.

நியூ சுபமாலா மோட்டோர்ஸ்
79. ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# துரையப்பா பத்தர்

## இராஜகோபால்

நகை வியாபாரம்



123, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# ஸ்ரீ காந்தா புத்தகசாலை

அச்சகம்




330, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

# கிறீன் சியஸ் ரெயிலறிங்

தையல் உலகின் நவீன முன்னோடிகள்.



இல11, மின்சாரநிலைய வீதி,
பெரியகடை,
யாழ்ப்பாணம்.



**இடது - வலது இருப்பவர்கள்**

**K**. பிரதாபன் (பொருளாளர்) **V**. ஐயாத்துரை (உபஅதிபர்) **N. K** சண்முகநாதபிள்ளை (அதிபர்)
**T**. சுயேந்திரன் (தலைவர்) **S**. சிவன்ரூபன் (உபஅதிபர்) **S**. நடராஜா (பொறுப்பாசிரியர்)
**P**. ரதிரூபன் (செயலாளர்)

**இடது—வலது 1 ம் வரிசையில் நிற்பவர்கள்**

**S**. சிறிகரன் (உபதலைவர்) **K**. சுரேஸ் **A**. டென்ஸ்ராஜ்குமார் **S**. சிவனேசன் (பத்திராதிபர்)
**S**. சதிஸ்வரன் **J**. ஜெகன்மோகன் **M**. நிக்சன் (உபசெயலாளர்) **M**. சசிகரன்

**இடது - வலது 2 ம் வரிசையில் நிற்பவர்கள்**

**R**. விக்னராஜ் **T**. ரதீஸ்குமார் **T**. சிறிதரன் **M**. சுரேந்திரன்

# நடப்பாண்டு செயற்குழு
## 1993 - 1994

| | | |
|---|---|---|
| காப்பாளர்: | திரு. | என்.கே. சண்முகநாதபிள்ளை |
| இணைக்காப்பாளர்கள்; | திரு. | எஸ். நடராஜா |
| | செல்வி. | பி. செல்லையா |
| | திரு. | கே. நாகேந்திரம் |
| | திருமதி. | எஸ். மனோகரதாஸ் |
| | திருமதி. | எஸ். விஜயரட்ணம் |
| | செல்வி. | வி. குமாரசாமி |
| | செல்வி. | தி. இராமலிங்கம் |
| | திரு. | எ. செளந்தரலிங்கம் |
| பொறுப்பாசிரியர்: | திரு. | சு. நடராஜா |
| தலைவர்: | செல்வன். | ரி. சுயேந்திரன் |
| உபதலைவர்: | செல்வன். | எஸ். சிறிகரன் |
| செயலாளர்: | செல்வன். | பி. ரதிரூபன் |
| உபசெயலாளர்: | செல்வன். | எம். நிக்சன் |
| பொருளாளர்; | செல்வன். | கே. பிரதாபன் |
| பத்திராதிபர் | செல்வன். | எஸ். சிவனேசன் |
| செயற்குழு உறுப்பினர்கள்: | செல்வன். | கே. சுரேஸ் |
| | செல்வன். | ஏ. டென்ஸ்ராஜ்குமார் |
| | செல்வன். | எஸ். சதீஸ்வரன் |
| | செல்வன். | ஜெ. ஜெகன்மோகன் |
| | செல்வன். | எம். சசிகரன் |
| | செல்வன். | ஆர். விக்னராஜ் |
| | செல்வன். | ரி. ரதீஸ்குமார் |
| | செல்வன். | ரி. சிறிதரன் |
| | செல்வன். | எம். சுரேந்திரன் |

# வர்த்தக சோலையில் பூத்துக் குலுங்கிய மலர்களில்

# நடப்பாண்டில் நறுமணம் வீசிய இளம் தென்றல்கள்

(1) யாழ் கோட்ட நல்லூர் கோட்ட பாடசாலைகளுக்கிடையே எமது மன்றத்தினரால் நடாத்தப்பட்ட வர்த்தகத்துறைசார் கட்டுரைபோட்டியில் வெற்றிவாகை சூடிக் கொண்டவர்களின் விபரம்

வெற்றிக் கிண்ணங்களை பெறுவோர்.

| | | |
|---|---|---|
| செல்வி. | மஞ்சுளாதேவி தனபாலன் | யாழ்/ இந்து மகளிர் கல்லூரி |
| செல்வி. | சிவாஜினி குமாரசுவாமி | ,, ,, |
| செல்வி. | நளாயினி நெல்லைநாதன் | ,, ,, |

சான்றிதழ்கள் பெறுவோர்.

| | | |
|---|---|---|
| செல்வன். | க. கிருஸ்ணகுமார் | (யாழ்/ மத்திய கல்லூரி) |
| செல்வி. | ந. லோகேஸ்வரி | (யாழ்/ இந்து மகளிர் கல்லூரி) |
| செல்வன். | ந. முகுந்தன் | (யாழ்/ மத்திய கல்லூரி) |
| செல்வன். | வே. தவப்புதல்வன் | யாழ்/ மத்திய கல்லூரி) |
| செல்வன். | ப. கணேஸ்வரன் | (யாழ்/ இந்துக் கல்லூரி) |
| செல்வன். | வே. சில்வெஸ்டர் | (யாழ்/ புனித சம்பந்தரிசியர் கல்லூரி) |
| செல்வன். | அ. சுதன் | யாழ்/ இந்துக் கல்லூரி) |
| செல்வி. | பா. நளாயினி | யாழ்/ இந்து மகளிர் கல்லூரி) |
| செல்வன். | கே. சாந்ததேவன் | (யாழ்/ புனித சம்பந்தரிசியர் கல்லூரி) |

(2) கற்றலுடன் ஒன்றிணைந்த செயற்பாடுகளின் தன் திறனை வெளிப்படுத்திய எமது மன்ற மாணவர்களுக்கு அவர்களுடைய திறனை மேலும் ஊக்குவிப்பதற்காக எமது மன்றத்தால் வழங்கப்பட்ட வெற்றிக் கிண்ணங்களையும், சான்றிதழ்களையும் பெறுவோர் விபரம்

| | |
|---|---|
| சிறந்த உதைபந்தாட்ட வீரன் | செல்வன். எம். இந்திரகுமார் |
| சிறந்த பந்து தடுப்பாளன் | செல்வன். என். முகுந்தன் |
| சிறந்த பந்து வீச்சாளன் | செல்வன். கே. பிரபாகரன் |
| சகல துறைகளிலும் சிறந்த விளையாட்டு வீரன் | செல்வன். என். விஜயகுமார் |

(iii) பல்துறை வீரனாய் எம் துறையினில் தம் புகழ் ஈட்டிய
செல்வன். K. கிருஸ்ணகுமாரின் சிறப்புகள்

கற்றலில் :- 92ம் ஆண்டு வர்த்தகத் துறையில்
நான்கு பாடங்களிலும் அதி விசேட சித்தி (4 A)
சாரணியகத்தில் :- ஜனாதிபதி விருது

(iV 29 / 11 / 92 ல் எமது கல்லூரியில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில்
எமது மன்ற மாணவர்கள் பெற்ற நினைவுப் பரிசில்களும் புலமைப்பரிசில்களும்

கல்வித் துறையில்:

செல்வன். K. கிருஸ்ணகுமார் : விபுலானந்தர் ஞாபகார்த்த புலமைபரிசில் (1990)
: சிமித் ஞாபகத்த சிறந்த வர்த்தக மாணவன் (1990)
: சிறந்த சாரணர் (1991)

| | |
|---|---|
| செல்வன். G. காண்டீபன் | முதலாவது வருட சிறந்த வர்த்தக மாணவன் (M. M. A. றகீம் ஞாபகார்த்த பரிசு) |
| செல்வன். M. பிரபாகரன் | சிறந்த வர்த்தக மாணவன் (சிமித் ஞாபகார்த்த பரிசு) |
| செல்வன். V தவப்புதல்வன் | சிறந்த புவியியல் மாணவன் (டே. சி சால்ஸ் ஞாபகார்த்தனை பரிசு) |
| செல்வன். K. வின்சன் | பொருளியல் பொதுதிறமை |
| செல்வன் V. தவப்புதல்வன் | கணக்கியல் புவியியல் பொதுதிறமை |
| செல்வன். G. காண்டீபன் | வர்த்தகம் பொதுதிறமை |
| செல்வன். N. முருந்தன் | அளவையியல் பொதுதிறமை |
| செல்வன். A ரஜீவன் | அரசியல் விஞ்ஞானம் பொதுதிறமை |

விளையாட்டுத் துறையில்:

| | |
|---|---|
| செல்வன். K. சுரேஸ் | சகலதுறை வல்லுனர் (1992) |
| செல்வன். K. பிரபாகரன் | சிறந்த பந்து வீச்சாளர் (1990, 92) கிரிக்கெட் வண்ண விருது (1992) |
| செல்வன். N. விஜயகுமார் | வருடத்திற்குரிய சிறந்த விளையாட்டு வீரன் வி. ரி. மகாலிங்கம் ஞாபகார்த்த சுற்றுக்கிண்ணம்) 1991) |
| | சிறந்த மெய்வல்லுனர் (வி. ஏ. வடிவேலு ஞாபகார்த்த சுற்றுக்கிண்ணம் (1991) |

மத்திய வணிகம் சிறக்க நல் வாழ்த்துக்கள்

## லியோ கழகம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

மத்திய வணிகத்திற்கு எமது வாழ்த்துக்கள்

சகல விதமான அச்சக வேலைகளுக்கும்

# கே. ரி. அச்சகம்

இல 15/5 முதலாம் ஒழுங்கை
மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.

உலகம் என்னை எவ்வாறு காண்கிறது என நானறியேன். ஆனால், நானோ கடற்கரையில் கிடக்கும் விசித்திரமான கூழாங்கற்களிலும் விநோதமான கிளிஞ்சற் சிப்பிகளிலும் என் கவனத்தைச் சிதறவிட்டு விளையாடுகின்ற ஒரு சிறுவனாகவே என்னைக் காண்கின்றேன். எனினும் என்னைச் சுற்றிலும் உண்மை என்னும் பெருங்கடல் இன்னும் வெளிக்கொணரப்படாத இரகசியங்களைத் தன்னகத்தே கொண்டு பரந்து கிடக்கிறது.

- ஐசக் நியூட்டன்

முகத்தோற்றத்தைக் கொண்டு முடிவு செய்யாதே, நேர்மையான நியாயத்தைப் பார்த்துத் தீர்ப்புச் சொல்.


மத்திய வணிகத்தை வளமுடன் வளர்க என வாழ்த்துகின்றோம்

# செல்லையா சிவபாதலிங்கம்

## வைரக்கல் நகைவியாபாரம்

191 A, 218, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி 23794.

ரிவி, டெக், றேடியோ, மற்றும் அலங்காரப் பொருட்களுக்கு

# கோல்டன் ரி.வி றேட் சென்ரர்

2A ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



உங்களது நயம், நம்பிக்கை
நாணயமுள்ள
தங்க வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்

# நியூலலிதா ஜுவல்லர்ஸ்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

74/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

☎ 24846

லாவண்ய பல் மூக்குக் கண்ணாடி அகம்

# வி. ரி. அன்சன்ஸ்

பல் கட்டுதலும் கண் பரிசோதித்து கண்ணாடி
வழங்குதலும்

175. மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்-பஸ் நிலையம் முன்பாக]



கிளைகள்:

302, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
[எழிலகம் முன்பாக]

கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம்.
[இலங்கை வங்கிக்கு அண்மையில்]

உன்மனைவி சீதையாக இருக்கின்றாளா என்பதை சிந்தித்துப்பார்ப்பதைவிட முதலில் நீ ஸ்ரீராமனாக இருக்கின்றாயா என்பதை சிந்தித்துப் பார்.


கற்ற கலைத்தாயை என்றும் மறக்காது களிப்புடன் நல்கும்

பழைய மாணவன் திரு. எம் அரியரட்ணம் அவர்களை

மத்திய கல்லூரி வர்த்தக மாணவர்கள் அவை

வாழ்த்துகின்றது என்றும் நல்கவென



**வர்த்தக மாணவர் மன்றம்**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

"மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்"

With best Compliments From:

# SANTRAN SPORT

399, STANLY ROAD,

JAFFNA.

ஸ்ரீலங்கா புத்தகசாலை அன் பிரின்டர்ஸ் 234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.